# குமரி மலர்

நாற்பத்து மூன்றாவதுவது புத்தகம்

பதிப்பாசிரியர்:

ஏ. கே. செட்டியார்

மௌபரீஸ் ரோடு,

பட்டை :: சென்னை

108826

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அடிமை இந்தியாவின் அஸ்தமனம் —ரவிந்திரநாத தாகுர் | 1 |
| 2. | மாதவி கடலாடச் சென்றது —ஆர். விசுவநாத ஐயர் | 4 |
| 3. | உற்பத்திப் பெருக்கும் உழைப்பாளரும் —ஏ. ஜி. வெங்கடாச்சாரி | 14 |
| 4. | சாகுந்தல விமரிசனம்—கி. சந்திரசேகரன் | 25 |
| 5. | இல்லறமும் இலக்கியமும்—நா. சிவபாதசுந்தரம் | 39 |
| 6. | கண்டி நகரம்—எஸ். சியாம் சுந்தர் ராஜரத்னம் | 53 |
| 7. | புதுமுறைக் கல்வி—மு. அருணசலம் | 59 |
| 8. | கவிதையும் விஷயச் சிறப்பும்—கு. அழகிரிசாமி | 74 |
| 9. | மூன்றும் தலைமுறை—ப. ஸ்ரீநிவாஸன் | 83 |
| 10. | நமது தேவைகள்—க. அருணசலம் | 87 |
| 11. | அன்னையின் விடுதலை —வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி | 96 |
| 12. | எச்சிற் பாண்டம்—க. கணபதி | 106 |
| 13. | தேவாநாம் பிரிய பிரியதரிசி அசோகர் —“ தருமதாசர் ” | 117 |
| 14. | வருஷம் ஒரு தீபாவளியா ?—சு. குருசாமி | 136 |
| 15. | பாரதியார் கண்ட சுதந்திர இந்தியா —பி. ஸ்ரீ | 145 |
| 16. | டில்லியில் சுதந்திர உதயக் காட்சி —ஏ.கே.செட்டியார் | 155 |



AUGUST 1947



உரிமைகள் பதிவு செய்யப் பெற்றன


“குமரி மலரில்” வெளிவரும் கதைகள், காட்சிகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவன வல்ல.



சுதந்திர இந்தியாவின் தந்தை



இந்திய ஆளும் மன்றத் தலைவர் ராஜன் பாபு



சுதந்திர இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு



இந்திய சுதந்திரம் அடைய வழி கோலிய அமரன்
நேத்தாஜி

# அடிமை இந்தியாவின் அஸ்தமனம்

ரவிந்திரநாத தாகுர்

[சென்ற நூற்றுண்டின் கடைசித் தினத்தன்று, அதாவது 1899 ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியன்று, 'இந்த நூற்றுண்டின் அஸ்தமனம்' என்ற பெயரால், ரவீந்திர நாத தாகுர் வங்க மொழியில் ஒரு பாடல் எழுதினர். இந்த ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி நாம் சுதந்திர தினம் கொண்டாடினேம். சுதந்திர இந்தியா உதயமாகிறது. அன்ருேடு அடிமை இந்தியா அஸ்தமித்தது. சமீபத்தில் தான் முடிந்த உலக யுத்தம் காரணமாகப் பெருக்கெடுத்த ரத்த வெள்ளம் இன்னும் குறையவில்லை. ஒன்றுபட்ட இந்தியா என்று நெடுங்காலமாய்ச் சொல்லிவந்ததெல்லாம் போய், சுதந்திரம் பெறும் இந்தத் தினத்தில் பிளவுபட்ட இந்தியாவாக நிற்பதால், நம்மில் எத்தனையோ பேர் உள்ளத்தில் ஏமாற்றமும் துவேஷமுமே எஞ்சி நிற்கின்றன. தாகுர் பாடியுள்ள இந்தப் பழம்பாடல், இந்த நிலையில், அடிமை இந்தியாவின் அஸ்தமனத் துக்கும் அப்படியே பொருந்துவதாயிருக்கிறது. பாடலைக் கீழே காணலாம்.]

1

மேலைத் திசையில் குருதி மயமாய்த் தோற்றுகிற மேகங்களிடையே, துவேஷமென்னும் சண்டமாருதம் சுழித்தடித்தார்க்க, இந்த நூற்றுண்டில் கடைசித் தடவையாகக் கதிரவன் இப்போது அஸ்தமிக்கிருன்.

1

தேசங்களின் கலப்பற்ற சுயநல வெறியானது, பேராசை யென்னும் போதையால் ஜன்னி க்கண்டு, படைக்கலங்களாகிய இன்னியம் முழங்க, வன்மத்தின் கூச்சலாகிய இசைக்கு ஏற்பக் கூத்தாடுகிறது.

2

வேட்கை மிகுந்த தேசத்தின் ஆத்மாவானது, மான மிழந்து தன் பசி தீர்த்துக்கொள்வதிலிருந்து தன் ஆத்திரத்தின் கொதிப்புக் காரணமாகவே விடுதலை பெற வேண்டும்.

ஏனெனில், தன் பசி தீர்ப்பதற்கு இது உலகத்தையே பொருளாய்க் கொண்டு, அதை நசுக்கியும், மென்றும், பெரிய பெரிய கவளமாக் விழுங்கியும், தான் அளவின்றிப் பெருத்து வருகிறது.

முடிவில், இவ்விதம் இது அசுரத்தீனி தின்னும் போதே, வானிலிருந்து ஒரு பேரிடி வந்து இதன் மான மிழந்த இதயத்தைத் தொலைத்தே தீரும்.

3

எனது தாயகமே,

அடிவானத்தில் தெரிகின்ற செக்கர் ஒளியானது உன்னிடம் துலங்கவிருக்கும் சாந்தத்தின் உதய ஒளியன்று.

இது, தேசத்தின் சுயநலம் என்ற ஊன் பிண்டமானது தன் பருமை தாங்காமலே செத்துச் சாம்பலாக எரிந்துகொண்டிருக்கிற ஈமத் தீ மங்கிவரும் ஒளியாகும்.

கீழ்த்திசையில் தெரியும் மந்தமான இருளுக்கு அப்பால், உனக்கு வரவிருக்கும் வைகறைப் போது அடக்கமாகவும் மௌனமாகவும் காத்து நிற்கிறது.

4

பாரதமே, விழிப்போடிரு.

வரவிருக்கின்ற அந்தப் புனிதமான சூரியோதயத்தை வழிபட உன்னுடைய பூஜா திரவியங்களைக் கொண்டு வருவாயாக.

"சாந்தமே! இறைவன் தானே பட்ட பெருவேதனையில் நீ பிறந்தாய், உனக்கு நல்வரவாகுக.

"திருப்தி என்ற பெருஞ்செல்வம் பெற்று, மனவலிமை என்ற வாள் ஏந்தி, பணிவு என்ற மகுடம் உன் தலையில் விளங்க, நீ வருவாயாக"

என்ற வாழ்த்தொலியாகிய கீதம், பாரதமே, உன் நாவிலே பிறந்து அப் புனித சூரியோதயத்துக்கு நல்வரவு கூறுவதாக.

5

தோழர்களே,

எளிமை என்ற உங்கள் வெள்ளுடை யுடுத்தி, இறுமாப்பும் வலிமையும் படைத்த எவர் முன்னும் நிற்க நீங்கள் தயங்காதீர்கள்.

பணிவே உங்கள் மகுடம், ஆன்ம சுதந்திரமே உங்கள் சுதந்திரம்.

உங்கள் வறுமையின் பரந்த வெறுமையிலே இறைவனது இருக்கையைத் தினமும் நீங்கள் சமைப்பீர்களாக.

பெரியதெல்லாம் உயர்ந்ததன்று, இறுமாப்பு நித்தியமானதன்று என்பதை உணர்வீர்களாக.

# மாதவி கடலாடச் சென்றது

ஆர். விசுவநாத ஐயர்

[பண்டைத் தமிழ் நாட்டின் கலைகளின் நிலைமையை விளக்குவதற்கெனவே எழுந்த நூலாகிய சிலப்பதிகாரத்திலிருந்து, அக்கால மகளிர் தம்மை அழகு படுத்திக் கொள்ளக் கையாடிய முறைகளையும், அவர்கள் யாழ் வாசிக்கும் தன்மையையும், காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையின் விழாக்காலத் தோற்றத்தையும் பற்றி நாம் அறிவனவற்றைத் தொகுத்து இக் கட்டுரை தெரிவிக்கும். இந் நூலைப் பாடியவர் சேர முனிவரான இளங்கோவடிகள். இதன் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்.]

ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன், ஓராண்டு, வழக்கம்போல் சோழ நாட்டுத் தலைநகர்களுள் ஒன்றான காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா என்ற திருவிழா நடந்தது. அது சித்திரா பௌரணியன்று தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் நடப்பதாகும். அக் காலம் முழுமையும் அந் நகரம் இந்திரன் நகரமே என்ன விளங்கும். பல்வேறு நாடுகளிலிருந்தும் மக்கள் விழாக் காண அங்கு வந்து கூடுவர். தேவர்களும் அதனைக் காண விருப்பி அக்காலத்தில் அங்கு வந்து நிறைப்பர் என்றால், அதன் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?

அப் பட்டினத்திலே மாதவி என்ற கணிகையொருத்தி இருந்தாள். அவள் வமிசத்தில் முன்னொரு காலத்தில் தேவதாசியான ஊர்வசியே வந்து பிறந்திருந்

தனளர்ம். அத்தகைய மேன்மை வாய்ந்த வழியில் தோன்றிய மாதவி ஆடல், பாட்டல், அழகு என்ற மூன்றிலும் சிறந்து, கணிகையற்குரிய அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லளாய் விளங்கி, சோழமன்னனால் தலைக்கோலரிவை என்னும் பட்டமும் பெற்று விளங்கி வந்தாள். அவளை அந் நகரத்து வணிகப் பெருமக்களுள் ஒருவனான கோவலன் என்பவன் காதலித்தான். அம் மோகத்தால் அவன் தன் வாழ்க்கைத் துணைவியான கற்பிற் சிறந்த கண்ணகியையும் துறந்தான். மாதவியும் கோவலனும் நிகரற்ற காதலின்பத்தில் ஆழ்ந்திருந்தனர்.

இந்திரவிழா முடியும் நாள் வந்தது. அன்று விழாக் காண வந்தோர் யாவரும், நகரத்திலுள்ளாரும் கூடிக் காவிரி கடலோடு கலக்கும் துறைக்குச் சென்று நீராடி வருவர். அக் காட்சி கண் கொள்ளாததாயிருக்கும். ஒவ்வொருவரும் தத்தமக்கு இயன்றவண்ணம் தம்மை அழகுபடுத்திக் கொள்வர். மாதவியும் அவ்வாறே செய்து கொண்டாள்.

### குளித்தல்

மாதவி தன் கூந்தலுக்கு எப்போதுமே வாசநெய் பூசி மணங் கமழ வைப்பது வழக்கம். அன்று அவள் பத்துவகைத் துவரினுலும், ஐந்து வகைப்பட்ட விரையினுலும், முப்பத்திருவகை ஓமாலிகைகளாலும் ஊறிக் காய்ச்சின நன்னீரிலே குளித்துத் தன் கூந்தலுக்கு நிறமூட்டினுள். துவர் என்பது செம்மை நிறத்தைக் குறிக்கும். அது பூவந்தி, திரிபலை, கருங்காலி, நாவல், போன்ற மரங்களின் பட்டைகளினுல் கிடைப்பது. விரையென்பது கொட்டம், துருக்கம், தகரம், அகில், ஆரம் என்பனவற்றின் மணம் வீசும் விதைகள் போலும். முப்பத்திருவகை ஓமாலிகை இன்னவை

யென்பதை உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பின் வருமாறு குறிக்கின்றார் :- இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கொட்டம், நாகம், மதாவரிசி, தக்கோலம்,, நன்னாரி, வெண்கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சம், கண்டில் வெண்ணை, கடுநெல்லி, தான்றி, துத்தம், வண்ணக்கச்சோலம், அரேணுகம், ஆஞ்சி, சயிலேகம், புழுகு, நறும்புன்னை, நறுந்தாது, புலியுகிர், பூஞ்சரளம், தமாலம், பெருவகுளம், பதுமுகம், நுண்ணேலம், கொடுவேரி, என்பவைகளாம். இதனை வேறு வகையிற் கூறுவாருமுளர்.

இவ்வாறு கிடைத்த நாற்பத்தேழு பொருள்களை ஊற வைத்த நன்னீரைக் காய்ச்சி அதனை நன்றாய்ப் பூசி முழுக்காட்டினால் மக்ளிரின் கூந்தல் நல்ல நிறம் பெறுவதாகும். " ஒரை விரையினும் ஈரைந்துவரினும், ஆறைந்தின் மேலிரண் டோமா விகையினும், நாறைங் கதுப்பி னுறைமு நன்குரை இ, ஊறின நன்னீ ருவந்தன ளாட்டி " என்பது இதற்கு விதி.

இவ்வாறு நீராடியபின் மாதவி தன் கூந்தலை வர்சனைப் புகையிலே புலர்த்தினாள். அப் புகை 'நேர்கட்டி, செந்தேன், இரியாசம், பச்சிலை, ஆரம், அகில்' என்ற ஆறு பொருள்களால் ஆக்கப்படும் என்பர். அப்புகையிலே காய்ந்த கூந்தலை அவள், குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை' என்ற ஐவகையாக வகுத்தாள். ஒவ்வொரு வகையிலும் கத்தூரிக் குழம்பையும், சவ்வாதையும் நன்றாக ஊட்டினாள்.

## அணிகள்

இவ்வாறு தன் கூந்தலைச் சீர்ப்படுத்திய பின், செம்பஞ்சு எழுதிய தன் அழகிய சிவந்த சிறிய அடிகளிலேயுள்ள மெல்லிய விரல்களுக்கு ஏற்றவாறு மகரவாய் மோதிரம், பீலி, கால் மோதிரம் முதலியவற்றைச்

செறித்தாள். அம் மோதிரங்களிலிருந்து சிலம்பின் புற வாயைச் சூழ்ந்து பொருத்தப் பெற்ற பாதசாலத்தைக் கோத்துக் கொண்டாள். இதற்குப் பரியகம், காற்சவடி என்ற பெயர்களும் உண்டு. இது பொன்னி தழிலே இரத்தினங்களைப் பதித்துப் பல நிறங்கள் காணும்படி செய்யப்படுவது. சிலம்பு பொன்னாலானது. அதனை யொட்டி நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் என்ற ஆபரணங்களையும் அவள் தன் கால்களிலிட்டாள். இவற்றுள் அரியகம், பாதசாலம்—காற்சரி என்ற பெயர்களையும் பெறும். இவ்வாறு காலுக்கமைந்த அணிகளை, "அவ்வாய் மகரத் தணிகிளர் மோதிரம், பைவாய் பசும்பொற் பரியக நூபுரம், மொய்ம்மணி நாவின் முல்லையங்கிண்கிணி, கௌவிய வேனவுங் காலுக் கணிந்தாள்" எனப் பிறிதோரிடம் கூறுகின்றது.

குறங்குசெறி என்னும் கவான் ஆபரணம் துடையிலே செறிக்கப்பட்டது, அக்குறங்குசெறி என்பது உள் ஆடையாகக் கட்டப்படும் நீலநிறம் விளங்கும் பூத் தொழிலையுடைய ஒரு நீலச் சாதருடையுடன் சேர்த்துப் பிணிக்கப்படும். அவ்வுடையை மேற்புறத்தில் உடம்போடு இறுக்கிப் பொருத்துவதற்கு விரிசிகை யென்னும் முப்பத்திரண்டு பரு முத்துக்கள் கொண்ட கோவையொன்று பயன்பட்டது. அதன் மேல் அவள் அழகிய புடைவையைக் கட்டிக் கொண்டாள்.

தோளிலே இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற முத்து வளையை வாகுவலயமாக அணிந்து கொண்டாள். கழுத்திலுள்ள கண்டிகையின் பின்தாலிக்கும் இத் தோள்வளைகளுக்கும் சங்கிலி மாட்டினதுபோல் பொன் மாட்டல்களைப் பூட்டிக்கொண்டாள். கழுத்தில் வீர சங்கிலி, நேர்ஞ்சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி,

முத்தாரம் இவற்றைப் பூட்டிக்கொண்டாள்; "சங்கிலி நுண்டொடர், பூண்ஞாண் புனைவினைத், தொங்க லருத்தித்திருந்துங் கயிலணி, தண்கடல் முத்தின் தகையொரு காழெனக், கண்ட பிறவும் கழுத்துக் கணிந்தாள்" என்பது ஒரு பாடல். இவற்றையெல்லாம் பிணைக்கப் பின் கழுத்தில் கோக்குவாய் (கொக்கி) ஒன்றிருந்தது. அதிலிருந்து பல மணிகளால் கோக்கப் பெற்றுக் கோவையாய்த் தொங்கும் பின்தாலி பிடரியை மறைத்தது.

மாதவி முன்னங்கைகளிலே, முகப்பில் மாணிக்கங்கள் பதித்து, பத்திகளில் வயிரங்களழுத்திய சித்திரத் தொழிலையுடைய சூடகத்தையும், செம்பொன்னாற் செய்த வளைகளையும், நவரத்ன வளைகளையும், சங்கவளைகளையும், பவழ வளைகளையும் பொருத்தமுற அணிந்து கொண்டாள்; வாளைமீன் தன் வாயைப் பிளந்து காட்டுவது போல் செய்யப்பட்ட நெளி என்ற முடக்கு மோதிரம், இரத்தினங்கட்டிய அடுக்காழியான மணி மோதிரம், மரகத நாயகமாக அமைத்து வட்டப்பூவின் வடிவையுடைய வயிர மோதிரம் இவைபோன்ற மோதிரங்களால் காந்தள் மலர்களை யொத்த தன் கை விரல்களை மறைத்துக் கொண்டாள்.

அவள் நீலக்குதம்பை, கடிப்பிணை என்ற இரண்டு தொங்கல்களையும் இரு காதுகளிலும் தொங்கவிட்டுக் கொண்டாள். இவற்றுள் நீலக்குதம்பை யென்பது முகப்பில் இந்திர நீலத்தைத் தொங்கவிட்டு, மேலே வயிரமிழைத்தது. முழுவயிரத்தால் செய்யப்பட்டது கடிப்பிணை; அது இடையிடையே திரண்டாற்போற் செய்யப்படும். இதற்குச் சந்திரபாணி என்ற ஒரு பெயரும் உண்டு.

இன்னும் அவள் சீதேவி, வலம்புரிச் சங்கு, பூரப் பாளை, தென்பல்லி, வடபல்லி என்ற தலையாபரணங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து அமையும்படி கரிய தன் தலைக்குச் சூட்டிக்கொண்டாள்.

## கடற்கரைச் செலவு

இவ்வாறு தனக்குரிய ஒப்பனைகளை யெல்லாம் செய்துகொண்டு மாதவி காவிரி கடலோடு கலக்கும் துறைக்குச் சென்று அங்கு நிகழும் ஆடல்களைக் காண விழைந்தாள். அந் நாள் இந்திரவிழாத் தொடங்கி இருபத்தெட்டு நாட்களும் முடிந்து, கொடியிறக்கப் பெற்ற இருபத்தொன்பதாவது நாளான, வைகாசி இருபத்தெட்டினில் பூர்வ பக்ஷத்தின் பதின்மூன்றும் பக்கமும் சோமவாரமும் அனுஷமும் கூடிய வைகறைப் பொழுது என்பர் அடியார்க்கு நல்லார். விடியல் நேரத்தில் இருள் மூடிக்கொண்டிருந்தது. பொய்கைகளிலே தாமரைச் சேக்கையிலே துயின்றுகொண்டிருந்த புட்கள் விழித்துக் கொண்டு வாய்விட்டுப் புலம்பின. கோழிகள் விடியல் நேரத்தைப் புலப்படுத்தக் கூவின. வெள்ளி மீன் வானத்தில் திகழ்ந்து கொண்டிருந்தது. கடலாட்ச் செல்லும் மக்கள் துறையிடத்தில் இடம் பிடிப்பதற்கு விரைந்து சென்றுகொண்டிருந்தனர். கோவலன் இராஜவாகனமாகிய கோவேறு கழுதையில் ஏறிக்கொண்டான்; அவனருகிலே மாதவி கொல்லாப் பண்டியென்றும் கோவல தண்டியென்றும் கூறப்படும் பல்லக்கில் ஏறிக்கொண்டாள்.

கடைத் தெருவின் வழியே அவர்கள் சென்றனர். கோடியளவில் செல்வங்கள் பெற்ற மாடங்கள் அவ் வீதியின் இருபுறங்களிலும் வரனளாவி நின்றன. அவ் வீடுகளினின்று பணிப்பெண்கள் மணி விளக்குக் களுடன் வெளிப்போந்து, வாயில்களில் மலரையும்

அறுகம்புல்லையும் நெல்லையும் மங்கலமாகச் சிந்தி இல்லுறை தெய்வங்களை வணங்கினர்.

இத்தெருவைக் கடந்து, அவர்கள் பல பரதேசிகள் வந்து கூலம் முதலிய பொருள்களைத் தாம் விற்பதை அறிவிக்கக் கட்டிய கொடிகள் நிறைந்த பல சேரிகளையும் கடந்து நெய்தலங் கானலைக் குறுகினார்கள்.

## கடற்றுறை வியாபாரம்

திருவிழாக் காலமாகையால் கடற்றுறையில் அளவு கடந்த முறையில் சில்லறை வியாபாரங்கள் நடந்து வந்தன. கூடைகளிலும், தட்டுக்களிலும் சிறிய கடைகளிலும், பல் நூறு சிறு வியாபாரிகள் பல் நூறு பண்டங்களை வைத்து விற்றுக் கொண்டிருந்தனர். இருட்டுவேளை யாதலால் அவரவரும் ஒவ்வொரு விளக்கு வைத்திருந்தனர். எழுது வண்ணம், சாந்து, மலர், சுண்ணம், பணியாரவகைகள், பிட்டு வகைகள், அப்ப வகைகள், மீன் முதலிய பல்வேறு பொருள்கள் அங்கே விற்கப்பட்டன. கடலிலே ஓடும் மரக்கலங்களைக் கரை நோக்கி வர அழைக்குமாறு வைக்கப் பட்ட கலங்கரை விளக்கங்கள் பல எரிந்தன. பரதவர் மீன் பிடிப்பதற்காகத் தாம் சென்ற தோணிகளில் ஏற்றிய விளக்குகள் கடல் அலைகளின் ஊடே மின்னி விளங்கின. அந்நியநாடுகளிலிருந்து தொழிலுக்கும் வாணிகத்திற்குமாக வந்த மிலேச்சர்கள் தங்கள் கப்பல்கள் வேற்றுத் துறைகளுக்குப் போகாமல் தத்தமக்குரிய துறைகளிலே வந்து சேர உதவுவதற்காகப் பனைமரங்களைக் கால்களாக நிறுத்தி, அவற்றின் மேலே எரியவிட்டிருந்த திரா என்ற விளக்குக்கள் வானத்துக்கு ஒளி காட்டுவன போலத் திகழ்ந்தன. பெரிய பண்டசாலைகளைக் காக்கும் காவலாளிகள் கையும் விளக்குமாக அலைந்து கொண்டிருந்தனர்.

இத்தகைய விளக்குக்களிடையே பல்லாயிர மக்கள் தத்தமக்குரிய இடங்களை அமர்த்திக் கொண்டு தத்தமக்குரிய வழியில் இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். அரச குமரரும், அவருடைய உரிமைச் சுற்றமும், பரத குமாரரும், இவருடைய பல் வேறு வகைப்பட்ட ஆயமகளிரும், ஆடல் மகளிரும், பாடல் மகளிரும் தத்தமக்குக்ந்த முறையில் காலங்கழித்தனர். எல்லோரும் கூடியிடும் கூச்சலும் கடலொலியும் ஒருங்கு கூடி ஒரே இரைச்சலாயிருந்தது.

கோவலன் அக் கூட்டங்களுட் புகாமல் தாழைச் செடிகள் நாற்புறமும் வேலிபோல் சூழ்ந்து சிறையாகச் செய்யப்பட்ட ஒரு தனியிடத்திலே, புன்னை மரமொன் றின் நிழலிலே, தனக்காக அமைக்கப்பட்ட ஓர் அழகிய பரணிலே மாதவியோடு அமர்ந்தான். அவள் தன் தோழியிடமிருந்து அழகிய யாழொன்றைத் தன் கையிலே வாங்கினாள்.

## யாழ் ஆராய்ச்சி

அவ்யாழ் சித்திரங்களமைந்த ஓர் உறையுள் இடப் பட்டிருந்தது. அதன் கோட்டில் மலர் சூட்டப் பெற்றி ருந்தது. அதன் தோற்றம் மைத்தடங்கண் மணமகளைப் போன்றிருந்தது. அதன் பகுதிகளான பத்தர், கோடு, ஆணி, நரம்பு முதலியவை சிறந்த முறையில் செய்யப் பட்டிருந்தன. இத்தகைய யாழை மாதவி தன் கைகளால் தொழுது வாங்கி, அதனை ஆராயத் தொடங்கினாள். அதன் இசையை எட்டு முறைகளில் எழுப்பிச் சுருதி கூட்டினாள். அம் முறைகள் பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, கையூழ், விளையாட்டு, குறும்போக்கு என்பனவாகும்.

யாழ்களுள் பலவகையுண்டு. அவற்றுள் மிகுதி யாக வாசிக்கப்படுவது செங்கோட்டியாழ் என்பது.

இதற்குரிய நரம்புகள் ஏழு. அவற்றிற்கு இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை என்ற பெயரிட்டிருந்தனர். மாதவி இந் நரம்புகளை மேலே கூறிய பல முறைகளிலும் ஆராய்ந்து, அவற்றில் குற்றமொன்று மில்லாமையை உணர்ந்தாள்.

பிறகு அதனை மீட்டத் தொடங்கினாள். அவளுடைய மரகத மணித்தாள் செறிந்த மணிக் காந்தள் மெல் விரல்கள் அந் நரம்புகளின் மேல் ஓடின. அத் தோற்றம் பாடுகின்ற வண்டினங்கள் பூக்களின்மேல் பறப்பதை ஒத்தது. பிறகு அவள் அந் நரம்புகளை வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்ற எட்டு வகையால் இசையை யெழுப்பி, யாழ் வாசிக்கத் தக்கதைச் செவியால் உணர்ந்து பின் கோவலனை நோக்கி, "இன்னது பாடவேண்டு மென்று நான் ஏவுவேனல்லேன்: தாளம் இன்னதென்று கூறுக" எனப் பணிந்து கேட்டு, அவன் கையை நீட்ட, அவனிடம் அவ் யாழைக் கொடுத்தாள்.

அவனும் மாதவி மனம் மகிழவேண்டு மென்ற எண்ணத்துடன் வாசிக்கத் தொடங்கினான். அதனோடு அவன் பாடவும் பாடினான். அப் பாடல்கள் காவிரியை நோக்கினவாகவும் கடற்கானலைப் பற்றினவாகவும் இருந்தன. அவன் பாடியவற்றை வரிப்பாடல்கள் என்பர். அவற்றின் பொருளமைதிகள் காதல் கொண்ட ஒரு தலைவன் தன் தலைவியை நோக்கிக் கூறும் இன்ப மொழிகளாக இருந்தன. அவற்றைக் கேட்ட மாதவியின் மனம் மயங்கிற்று. 'இவன் என்னையன்றி மற்றொருத்தியைக் காதலிக்கின்றானே' என்று அவள் ஊடினாள்.

அவள் கோவலன் கையிலிருந்த யாழை வாங்கி, வேடிக்கைக்காகத் தானும் ஒரு குறிப்புக் கொண்டவள்

பேரல் பொருளமையக் கானல் வரிப் பாடல்கள் பாடத் தொடங்கினாள். அவள்கண்டமும் யாழும் இழைந்தொழுகின. அப் பாடல்களைக் கேட்டு நிலத் தெய்வம் வியப்பெய்தியது; நீள் நிலத்தோர் மகிழ்வெய்தினர். ஆனால் கோவலன் மனத்தில் கலக்க முண்டாயிற்று. பாட்டின் பொருளை அவன் ஆராய்ந்தான். "இவள் பிறப்பிலே தாசி; மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்; இவள் மனம் என்பாலில்லை; வேறொருவனிடமோ சென்றது; இனி இவளை நான் நம்பேன்" என்று அவன் எண்ணினான். அவளுடன் பேசாமல் எழுந்தான். தன் ஏவலாளர் பின்னே செல்ல அவன் எழுந்து அகன்றான்.

மாதவி தனியளானாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மாலைக் காலம் நெருங்கிவிட்டது. இன்பத்துடன் விடிந்த அந் நாள் இப்படித் துன்பத்துடன் முடியுமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. கையற்ற நெஞ்சினளாய் அவள் தன் பல்லக்கிலேறித் தன் வீடு நோக்கிச் சென்றாள். சூரியனும் மேற்கடலில் மூழ்கினான்.

# உற்பத்திப் பெருக்கும் உழைப்பாளரும்

ஏ. ஜி. வேங்கடாச்சாரி

நானிய விளைச்சலும் ஆலைப்பண்டங்களின் உற்பத்தியும் அதிகரிப்பதற்குச் சாத்தியமான எல்லாவற்றையும் விறுவிறுப்பாகச் செய்வது முதற்கடமை. எதிர்காலச் சுபிட்சத் திட்டம் உருவெடுப்பதற்காகக் காத்திராமல், இப்போதைய நிலைமையின் கீழேயே ஆலைப் பண்டங்களின் உற்பத்தியை உடனடியாக அதிகப்படுத்துவதற்கு என்ன செய்யவேண்டும் என்ற குறுகிய பிரச்னை மட்டுமே இங்குக் கவனிக்கப்படுகிறது. குறுகிய கால முயற்சியில் வெற்றி காண்பது செலாவணிப் பெருக்காலேற்பட்டுள்ள தீமைகளை ஓரளவு குறைப்பதற்கு அத்தியாவசியமானது.

## செலாவணியும் உற்பத்தியும்

தங்களுக்கு வேண்டிய போர்ச் சாதனங்களை எவ்வாறாயினும் பெறுவதற்காகப் பிரிட்டிஷ் சர்க்கார் யுத்த காலத்தில் நோட்டுக்களை இந் நாட்டில் அச்சடித்துக் குவித்தனர். இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாவதற்கு முந்திய மாதத்தில் (1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில்) சுமார் 179 கோடி ரூபாய் நோட்டுக்கள் புழக்கத்திலிருந்தன. யுத்தம் நின்றபோது 969 கோடி ரூபாய் நோட்டுக்களிருந்தன. பிறகும் நோட்டுப் புழக்கம் அதிகரித்ததே ஒழியக் குறையவில்லை. 45–46-ல் இருந்தவை 1,163 கோடி. 1946-ம் வருஷம் ஜூன்

மார்தம் 28-ந் தேதி ரூ 1,238 கோடியாக இது உயர்ந்தது. (இந்தப் புள்ளி விவரங்கள் ரிசர்வ் பாங்கின் யாதாஸ்துக்களிலிருந்து எடுக்கப்பட்டவை.) இம்மாதிரியாக யுத்த வருஷங்களில் நோட்டுப் புழக்கம் ஆறு மடங்குக்கு மேல் அதிகரித்தது. ஆனால் பண்டங்களின் உற்பத்தி போதியவாறு கூடுதலாகவே யில்லை. 1939-40-ல் உற்பத்திக் குறியீட்டெண் 114 ஆக இருந்தது. 1945-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் இது கணிசமாக உயரவில்லை; 132.5 ஆகத்தான் இருந்தது. இந்தத் தாராதம்யத்தின் காரணமாக அத்தியாவசியப் பண்டங்கள் உட்பட, எல்லாவற்றின் விலைவாசியும் மூன்று அல்லது, நான்கு மடங்காவது உயர்ந்திருக்கிறது. ஆலைப் பண்டங்களின் உற்பத்திச் செலவு இந்தியா சர்க்காரின் கடைசிக் கணக்குப்படி மூன்றே முக்கால் மடங்கு உயர்ந்திருக்கிறது. வாழ்க்கைச் செலவு மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் பொதுவாகக் கூறுமிடத்துத் தொழிலாளர், நடுத்தர வகுப்பினர் போன்ற சம்பளக்காரர்களின் ஊதியம் இரு மடங்கு கூட உயரவில்லை. இம்மாதிரி விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போய், அவற்றை யெட்டிப் பிடிக்கச் சம்பளங்களினால் முடியாமற் போனதால் தான் சம்பளக்காரர்களெல்லோருமே அதிருப்தி யடைந்துள்ளனர். இதே மாதிரி சக்கர வட்டமாக விலைகளும் ஊதியங்களும் உயர்ந்து கொண்டே போனால் எந்தப் பிரச்னையையும் தீர்க்க முடியாது. எனவே, விலைக் குறைப்புக்கு வழி செய்து அதே சமயத்தில் உற்பத்தியைப் பெருக்குவதில் முழுக் கவனம் செலுத்த வேண்டுவது அவசியமென ரிசர்வ் பாங்குக் கவர்னரிலிருந்து சாமானிய மக்கள் வரை எல்லோரும் சொல்லுகிறார்கள்.

## முதலாளிகளின் எதிர்ப்பு

ஆலை முதலாளிகளோ வேறு விதமாகக் கட்சி யாடுகின்றனர். கள்ள மார்க்கட்டும் லஞ்சமும் தாண்டவ மாடுவது நிற்கவேண்டுமானால், சரக்குக்களை இன்னும் அதிக விலைக்கு விற்கத் தங்களை அனுமதிக்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. தொழிலாள ருக்கு அதிக வசதிகளை அளிக்கும் சட்டங்கள் அமுல் நடத்தப்படுவதாலும், வேலை வசதிக் குறைவினாலும், தொழில் தகராறுகளில் ஊதியம் சம்பந்தமான சமீப காலத் தீர்ப்புகளெல்லாம் தங்களுக்குப் பிரதிகூல மாகவே இருப்பதாலும், தங்கள் சரக்குக்கு அதிக விலை கிடைக்காவிடில், இலாபகரமாக இனித் தொழிலை நடத்துவதே அசாத்தியமாகி விடுமென்பது அவர் களுடைய வாதம். இதற்கு இணங்கினால் பண வீக்கத் தின் கெடுதல்கள் அதிகமாகுமே ஒழியக் குறையக் காரணமில்லை: எந்த முகாந்தரத்தைக் கொண்டும் விலைவாசிகள் இனி உயரும்படி விட்டால் நாட்டின் பொருளாதாரம் படுமோசமாகிவிடும். தொழிலாளரின் வசதிகளை விரிவாக்குவதற்கு நியாயமிருக்கிறதே ஒழிய குறைப்பதற்குக் காரணமில்லை. இந்த இரண்டு அடிப் படைகளையும் ஒப்புக் கொண்டுதான் உற்பத்திப் பெருக்குக்கான வழி வகைகளை ஆராய்தல் வேண்டும்.

## தொழிலாளர் மீது பழி

யுத்தம் முடிந்தபிறகு அநேகமாக எல்லாத்தொழில் களிலும் உற்பத்தி குறைந்து விட்டதாகவும், தொழி லாளர் முழுமனதுடன் வேலை செய்ய மறுப்பதே இதற்குக் காரணம் என்றும் முதலாளிகள் தரப்பில் இடைவிடாமல் கூறப்படுகிறது. உற்பத்திக் குறைவு நிலக்கரித் தொழிலிலும் இரும்பு-உருக்குத்தொழிலிலும் ஏற்பட்டிருக்கிறது என்பது வாஸ்தவமே. ஆனால்

இதற்குத் தொழிலாளர் மீது பழி போடுவதற்குப் போதிய ஆதாரமில்லை. நிலக்கரி உற்பத்தி குறைந்தால் மற்ற எல்லாத் தொழில்களிலும் உற்பத்தி குறைவது சகஜம். சுரங்கத்தில் பெண்களின் வேலை உலகெங்கும் தடுக்கப்பட்டுள்ளது. இதையும் மீறி யுத்த காலத்தில் பெண்களை அமர்த்தியுங்கூட, நிலக்கரி உற்பத்தியில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை. யுத்தத்துக்கு முன் வருஷம் 240 லக்ஷம் டன் நிலக்கரி உற்பத்தியாயிற்று. 6 வருஷ முயற்சிக்குப் பின் இது 290 லக்ஷம் டன்னாகத்தான் உயர முடிந்தது. இவ்வருஷம் (1947) ல் நமது நிலக்கரித் தேவை 322 லக்ஷம் டன்னாக இருக்குமென, சர்க்கார் மதிப்பிட்டிருக்கிறார்கள். படிப்படியாக உயர்ந்து 1956-ம் வருஷத்தில் 410 லக்ஷம் டன் கிடைத்தால்தான் எல்லாத் தொழில்களிலும் முன்னேற்றத்தைக் காணலாமென நிபுணர்கள் கூறுகின்றனர். இது சாத்தியமாக வேண்டுமென்றால், சுரங்கங்களை யெல்லாம் சர்க்காரே எடுத்துக் கொண்டு, நாகரிகமான வேலை நிலைமைகளுக்கு வழி செய்தாகவேண்டும். முக்கியமாகப் பல இந்திய சுரங்க முதலாளிகள்தாம் வேலை நிலைமை உயர்ந்து உற்பத்தி பெருகுவதற்கு இடையூறு யிருக்கிறார்கள். திறமையின்மையுடன் கூடிய இவர்களுடைய தனியுரிமையை விட நாட்டின் நலனே பிரதானம். எனவே இவை உட்பட எல்லாச்சுரங்கங்களும் சர்க்காரின் கட்டுப்பாட்டின்கீழ் வருவது அவசரமான விஷயம்.

### உருக்குத் தொழில்

நிலக்கரிப் பஞ்சத்தினால்தான் உருக்கு உற்பத்தி குறைகிறது. 1939-40 ல் தயாரான அளவுகூட உருக்கு 44-45 ல் தயாராகவில்லை. நாட்டிலுள்ள நான்கு பெரிய

உருக்குத் தொழிற்சாலைகளுமர்க்ச் சேர்ந்து 14 லக்ஷம் டன் இவ் வருஷம் தயாராக்க முடியும். ஆனால் 45-46ல் 9 லக்ஷம் டன்தான் கிடைத்தது. நிலக்கரித் தட்டும் போக்குவரத்துச் சிரமங்களுமே இதற்கு முக்கிய காரணங்கள். தொழிலாளர் கிளர்ச்சி அவ்வளவு முக்கியமான அம்சமாக இருக்கவில்லை. இவ் வருஷம் 10 லக்ஷம் டன் உருக்குக்கு மேல் தேவை. அடுத்த சில வருஷங்களில் இது 20 லக்ஷம் டன்னாக உயரக் கூடும். ஆனால் 1951 ம் ஆண்டில் 16 லக்ஷம் டன் உற்பத்தியாகலாம். மிச்சத்தை இறக்குமதியாகத்தான் பெற வேண்டியிருக்கும். ஆனால் இந்த அளவுக்கு இறக்குமதிகள் வருவது அரிது. எனவே, நிலக்கரிச் சப்ளையைச் சீராக்கித் தொழிலாளரின் மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெற்று, உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவது தவிர வேறு வழியில்லை.

## துணிப் பிரச்னை

அடுத்த பெரிய தொழில் துணி, நூல் உற்பத்தி. இதில்தான் தொழிலாளர்மீது முதலாளிகளின் புகார் இப்பொழுது பலமாக இருந்து வருகிறது. ரயில்வே நீங்கலாக மற்ற தொழில்களைவிட இதில்தான் தொழிலாளர் போதிய ஸ்தாபன பலத்துடன் இருக்கின்றனர். இதைப் பயன் படுத்திக் கொண்டு, வேண்டுமென்றே உற்பத்தியை அவர்கள் குறைக்கிறார்கள் என்பது மில் முதலாளிகளின் புகார். இதைத் தொழிலாளர் தரப்பினர் ஆதாரத்துடன் மறுக்கின்றனர்.

சென்ற இரண்டு வருஷங்களாகக் கண்டிரோல்கள் அமுல் நடப்பதால் மில்காரர்களில் பெரும்பான்மையோர், அதற்கு முந்திய வருஷங்களிற்போல, அவ்வளவு பெரிய அளவில் பகிரங்கமாகக் கொள்ளை லாபமடிப்பது முடியாமற் போய்விட்டது. எனவே வேண்டு

மென்றே ஐவுளி, நூல் உற்பத்தியைக் குறைத்துக் காட்டி, தங்கள்மீது பழி போட்டுவிட்டு, பதுக்கிய சரக்கைக் கள்ள மார்க்கெட்டில் விற்றுக் கும்மாள மடிக்கிறார்கள் என்பது தொழிலாளரின் கட்சி. இது பசையற்ற புகாரெனச் சொல்ல முடியாது. விநியோக கண்டிரோல்களுக்கு முன்னால் சில தொழில்களில் கிடைத்த நிகர லாபத்தைப் பற்றிய கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் தாமே பேசும். 1939 ம் வருஷத்தில் கிடைத்த நிகரலாபம் 100 என்று வைத்துக் கொண்டால், 1943 ம் வருஷத்தில் பஞ்சாலைகளுக்குக் கிடைத்தது 645 என்று தெரிகிறது. ஒன்றுக்கு ஏழு இலாபம் சம்பாதித்த மில் முதலாளிகள், இப்பொழுது அது சாத்தியமில்லாததால் கள்ள மார்க்கெட் மூலம் வேலை செய்கிறார்கள் என்ற புகார் அவ்வளவு ஆதாரமற்றதெனத் தோன்றவில்லை.

1939-ம் வருஷத்தில் 389 மில்கள் இருந்தன, 1946-ல் இவை 421 ஆக உயர்ந்தன. இதே வருஷங்களில் மில் தறிகளின் எண்ணிக்கை 800 தான் உயர்ந்தது. ஆனால் கதிர்கள் 2½ லக்ஷம் கூடுதலாகி 103 லக்ஷமாயிருந்தன. பிறகு வேலை ஷிப்டுகள் அதிகமானதால் 1946-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் நபர்-வேலை கணக்குப்படி 198 லக்ஷம் கதிர்கள் (அதாவது கிட்டத் தட்ட இரு மடங்கு) வேலை செய்ததாகக் கொள்ளலாம். 2,21,154 தறிகளும், நபர் வேலைப்படி 3,42,265 (அதாவது ஒன்றரை மடங்கு) தறிகளாகப் பயனளித்தன. கணக்காசாரப்படி நூல் உற்பத்தி இன்னொரு மடங்கும், துணி நெசவு பாதியும் உயர்ந்திருக்க வேண்டும். அம்மாதிரி உயரவில்லை. முறையே, 29 சத விகிதம் நூலிலும், கஜக் கணக்கில் 14 சத விகிதம் துணியிலும் உயர்வுதான் கணக்கில் காண்பிக்கப்பட்டது. பஞ்சு சேதாரத்துக்குத் தள்ளுபடி போனால் கூட நூலும் துணியும் ஏராளமாகக் கணக்கில்

வராமல் கள்ள மார்க்கெட்டுக்குப் போகுமோ என்ற சந்தேகம் இதனால் பலப்படுகிறது.

இதே நிலைமை நீடித்திருக்கும்படி விட்டால் துணிப் பஞ்சம் தீராது. அதைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் அசாத்தியமாகிவிடும். எனவே மில் முதலாளிகளையும் தொழிலாளரையும் பொது நன்மைக்காகக் கண்டிப்பாய்க் கட்டுத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வந்தாகவேண்டும். இப்பொழுது நூல் நூற்கும் ஸ்தலங்கள் இரண்டில் மாகாண சர்க்கார் தங்கள் தணிக்கையதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். இது வெறும் கேலிக்கூத்து என்பது சொல்லாமலே விளங்கும்.

## சில யோசனைகள்

(1) இப்போதைய வசதிகளை எவ்வாறு அதிக உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்? (2) கள்ள மார்க்கெட்டின்றி விநியோகத்தை உறுதி செய்வது எப்படி?

யுத்த-பிற்கால சீரமைப்புக் கமிட்டியின் சிபாரிசுகள் உற்பத்திப் பெருக்குக்கு வழிசெய்யப் பேருதவியாயிருக்கும். மூன்று ஷிப்டு ஏற்பாடாக வேண்டும். சேதாரக்கணக்கில் மோசம் போகாமலிருப்பதற்காகப் பருத்திக் கலப்பு ஓர் ஒழுங்கு முறைப்படி நடைபெற வேண்டும். என்ன நம்பர் நூல்கள் உற்பத்தியாக வேண்டுமென நிர்ணயிக்க வேண்டும். ஏழைகளுக்கான துணிகளைப் பெருவாரியாக உற்பத்தி செய்ய இது அவசியம். ஒரு குறிப்பிட்ட அளவு வேலைக்குத் தொழிலாளி எவ்வளவு நேரம் உழைக்க வேண்டும் என்பதையும் முடிவு கட்ட வேண்டும். இதன்படி உற்பத்தியாகும் சரக்குப் பூராவும் ஒழுங்காக முத்திரையுடன் மார்க்கெட்டுக்கு வரவேண்டும். இவற்றைச் சரிவரச்செய்துமுடிக்க வேண்டுமானால் ஒவ்வொரு மில் முதலாளியும் தொழிற்சங்கத்தின்

உதவியை நாடுவதாயிருக்கவேண்டும். சர்க்கார், முதலாளி, தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கொண்ட உற்பத்திக் கமிட்டி ஒவ்வொரு மில்லுக்கும் இருக்கவேண்டும். முக்கூட்டு முத்திரையில்லாமல் எந்தச் சரக்கும் வெளியேறக் கூடாது. இப்படிச் செய்வதற்கு இணங்கினால் மட்டுமே உற்பத்தி பெருகும், கள்ள மார்க்கெட்டை ஒழிக்க முடியும்.

மில் தொழிலில் உற்பத்திப் பெருக்கிற்கு அவசரமாக ஏற்பாடு செய்யாவிடில், அந்நியர் துணி மார்க்கெட்டை மீண்டும் கைப்பற்றி விடுவர். இப்போதுள்ள துணிப் பஞ்சத்தில் இறக்குமதியைத் தடுக்கும் தைரியம் எந்தச் சர்க்காருக்கும் வராது. இறக்குமதி பெருகி விட்டால், அப்புறம் பல சங்கடங்கள் நமது மில்களுக்கு வாய்க்கும். எனவே மில்களும் கைத்தறியாளரும், கூடிய வரை இறக்குமதியைக் குறைக்கக் கூடிய விதத்தில் ஏழை ஜனங்கள் வாங்கக் கூடியவாறு ஏராளமான துணி யுற்பத்திக்கு வழி செய்வதில் ஒத்துழைப்பது தான் விவேகமாகும்.

## தொழிலில் சமாதானம்

வேறு எந்த ஏற்பாட்டைச் செய்தபோதிலும் தொழிலாளரின் மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெறாமல் உற்பத்திப் பெருக்குக்கு வழி செய்வதோ அதை நடத்தி வைப்பதோ சாத்தியமே அல்ல. எனவே எல்லாத் தொழில்களிலும் அடுத்த இரண்டு வருஷங்களுக்குச் சமாதானம் நிலவச் செய்வது (ஸ்டிரைக், வேலைக் குறைவு முதலியன இல்லாமல் இருப்பது) முதற்கடமை. தொழிலாளரை மிரட்டியோ, நிர்ப்பந்தச் சட்டங்களை ஒருதலைப்பட்சமாகக் கொண்டு வந்தோ, ராஜீய செல்வாக்கை உபயோகித்து அவர்களிடையே பிளவுகளை உண்டுபண்ணியோ, மனப்பூர்வமான

ஒத்துழைப்பைப் பெறுவது நடவாத காரியம். யுத்த காலத்தில் இந்தியா சர்க்கார் இதையுணர்ந்து இடை விடாமல் சர்க்கார் முதலாளி-தொழிலாளி முக்கூட்டு ஆலோசனைகளுக்கு ஏற்பாடு செய்ததால்தான் அப் பொழுது பல நெருக்கடிகள் ஸ்டிரைக்குகளாகவோ, கதவடைப்புகளாகவோ வளராமல், உடனுக்குடன் பைசல் செய்யப்பட்டன. அதே முறையை இன்னும் விரிவான அடிப்படையில், இந்தியா சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் பின்பற்ற வேண்டும். அதற்கு வேண்டிய மனப்பான்மை சர்க்கார்களை நடத்தும் தலைவர்களிடம் இன்னும் போதிய அளவு ஏற்பட்டதாக வில்லை.

இன்று தொழிலாளரிடையே கம்யூனிஸ்டுகளுக்குத் தான் ஸ்தாபன ரீதியாக அதிகச் செல்வாக்கு இருந்து வருகிறது. அவர்களை ராஜீய வகையில் விரும்பத் தகாதவர்களென்றே காங்கிரஸ் கருதிவந்திருக்கிறது. இருந்த போதிலும் தொழிற்சங்க வேலைகள் சம்பந்தப் பட்டவரை சோஷியலிஸ்டுகளும் காங்கிரஸ்காரர்களும் இதுவரை ஒருமனப்பட்டுக் கம்யூனிஸ்டுகளுடன் உழைத்து வந்திருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றிக் கம்யூனிஸ்டுகளைத் தொழிற் சங்க வேலையில் வேறுக்கி, ராஜீய வகையில் அவர்களுடைய செல் வாக்கைக் குறைக்கலாம் என்ற நோக்கத்துடன் சென்ற ஒரு வருஷகாலமாகப் பல காரியங்கள் செய்யப்பட் டுள்ளன. கம்யூனிஸ்டு தலைமையுள்ள தொழில் தகராறு கள் விஷயத்தில் ஒரு தனி மனப்பான்மை பிரகாசம் மந்திரி சபையின் கீழ் சென்னை மாகாணத்தில் காண் பிக்கப்பட்டது. பம்பாயிலும் இந்த முயற்சி நடந்தது. ஆனால் பலிக்கவில்லை. கம்யூனிஸ்ட் தொழிற்சங்க ஊழியர்கள் தேசமெங்கும்— சென்னையிலும் பம்பா யிலும் அதிகமாக— ஆள்தூக்கிச் சட்டங்களின் கீழ்க் காவலில் வைக்கப்பட்டனர். ராஜீய நோக்கத்துடன்

அதாவது காங்கிரஸ் சர்க்கார்களுக்குச் சங்கடம் விளைவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளுங்கூட ஸ்டிரைக் நடவடிக்கைகளில் இறங்குகின்றனர் என்ற எண்ணம் காங்கிரஸ் தலைமையினர் மனதில் நிலைத்துவிட்டது. இது துரதிருஷ்டவசமானது. இதனால்தான் தொழிற் சங்க காங்கிரஸுக்குப் போட்டியாக இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸை அவர்கள் தோற்றுவித்துள்ளனர்.

தொழில் தகராறுகளின் பைசலைப்பற்றிய சட்டதிட்டங்களில் கூட இந்த அவநம்பிக்கையே தொனிக்கிறது. இந்தியா சர்க்கார் நிறைவேற்றிய தொழில் தகராறு மசோதாவின் விவாதத்தின்போது, மத்திய அசெம்பிளியிலுள்ள தொழிலாளர் பிரதிநிதிகள் மூவரும் அடியோடு புறக்கணிக்கப் பட்டனர். அவர்களில் ஒருவர்கூட கம்யூனிஸ்ட் அல்ல. ஸ்ரீ என். எம். ஜோஷி மிதவாதி; ஸர்வ தேச அந்தஸ்துள்ளவர். அப்படியிருந்தும் அவருடைய யோசனைகள் கூட அடிபட்டுப் போனது வருந்தத் தக்கது. இந்தச் சட்டத்தினாலும் தொழில் தகராறு பைசல் விஷயத்தில் காண்பிக்கப்பட்ட பாகுபாடுகளினாலும், கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குத் தொழிலாளரிடை ஓரளவு அதிகப்பட்டதே ஒழியக் குறையவில்லை.

இப்போதைய சந்தர்ப்பத்தில் எந்தக் காரணத்திற்காகவேனும் போட்டியாக மத்திய தொழிலாளர் ஸ்தாபனத்தைத் தோற்றுவிப்பது எதிர்பார்ப்பதற்கு நேரிடையான பயனையே அளிக்க வல்லது. எனவே தொழிலாளர்பிரச்னைகளைப் பொருளாதார சீரமைப்பின் அம்சமாகக் கருதிப் பரிகாரம் கோருவது முறையே ஒழிய, ராஜீய விருப்பு, வெறுப்புக்களைக் கொண்டு வந்து

சேர்த்துக் குழப்புவது பெரிய ஏமாற்றத்தில்தான் முடியும். கம்யூனிஸ்டுக்களின் ராஜீயப் போக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் தொழிற்சங்க இயக்கத்தில் அதன் கோட்பாடுகளுக்கு விசுவாசமாக் வேலை செய்கையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதால் தொழிலாளரின் பகைமைதான் சம்பவிக்கும். தொழிலாளரின் ஒற்றுமையைக் குலைத்து, நிலைமையை முதலாளிகளுக்குச் சாதகமாக்குவது காங்கிரஸ் சர்க்கார்களின் நோக்கமே அல்ல. இதைத் தொழிலாளர் நம்பும்படி செய்ய வேண்டும். மறுபடியும் ஒரே தொழிற்சங்க ஸ்தாபனத்தின் கீழ் இந்தியத் தொழிலாளர் எல்லோரும் வேலை செய்வதற்கான சூழ் நிலையைச் சர்க்கார் தோற்றுவிப்பதுதான் இதற்குச் சிறந்த வழி. சுதந்திரம் வருவதை முன்னிட்டுக் கம்யூனிஸ்டுகள் விடுதலையாவது இதற்கு அனுகூலமாகப் பயன்படலாம். ராஜீயப் பிரச்னைகளைத் தூரவைத்துவிட்டு, அதிக உற்பத்திக்காக ஒரே மத்திய தொழிலாளர் ஸ்தாபனத்தை அமைத்து அதனுடன் பயனுள்ள வகையில் உடன்பாடு காண்பது சுலபமாகும்.

## கொள்கை வேண்டும்

நாட்டின் பொருளாதாரத் திட்டத்தை வகுப்பதிலும், அமுல் நடத்துவதிலும், தாமும் சம பங்குள்ள பாகஸ்தர்கள் என்று தொழிலாளர் நம்பும்படி செய்வதற்கு முக்கூட்டு ஆலோசனைகளும் உடன்பாடும் மிகமிக அவசியம். அந்த நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டால், உற்பத்தியைப்பற்றிய உடன்பாடு சுலபமாகிவிடும். அதற்கேற்றபடி சர்க்கார் திடமான கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

# சாகுந்தல விமரிசனம்

கி. சந்திரசேகரன்

(காளிதாஸரை டாகூர் எவ்விதம் அறிந்து அநுபவிக்கிறார் என்பதற்குக் கீழேகொடுத்திருக்கும்சாகுந்தல நாடகத்தைப் பற்றிய அவருடைய விமர்சனம் ஒரு உயர்ந்த சான்றாகும். உண்மையில் கவிஞனைப் பிறந்தவனே மற்றொரு கவிஞன் இதயத்தை அளந்து பார்க்கக் கூடியவனாகிறான். கவிதையை நன்கு உணராத மாந்தர்கள் கூறும் பாராட்டுக்கும், உட்கருத்தை ஊடுருவிக் கண்ட கவிஞன் சொல்லும் வார்த்தைகளுக்கும் உள்ள வித்தியாசம் சாமான்யமல்ல என்பதை இந்த விமர்சனம் விளக்குகிறது. சில அருமையான கருத்துக்களை மட்டும் கீழே குறிப்போம்.)

* * * *

சாகுந்தலத்தில் இரண்டு கூடுதல்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நாடகத்தின் முதல் அங்கத்தில் கண்டதும் காதலாய்த் தோன்றும் சஞ்சலமான ஆசையும், விநோதமும் வளர்ச்சி பெற்றுக் கடைசி அங்கத்தில் அழிவில்லா உயர்தரப் பிணைப்பாக முடிவடைகின்றது. ரஸங்களில் ஒன்றை மட்டும் பொறுக்கி எடுத்து விவரிக்கவோ, அல்லது ஒரு பாத்திரத்தின் குணதோஷங்களை மட்டும் விளக்கவோ இந் நாடகம் எழுதப்படவில்லை. ஏனெனில் நிகழ்ச்சிகளை ஓர் உலகிலிருந்து மற்றொன்றிற்குக் கொண்டுபோய்க் காதலை விஷய சுகத்திற்கு அடிமையாகச் செய்து விடாமல், ஆத்மபரிசுத்தத்தை அடையும் கருவியாகக் காட்டுவது தான் இதன் உட்கருத்து.

விண்ணும் மண்ணும் கலப்பதைக் காளிதாஸர் மிகவும் சிரமமில்லாமல் சாதித்து விடுகிறார். பூவுலகம் சொர்க்கமாய்ச் சிரமமின்றி மாறுவதை அவர் எடுத்துக்காட்டும் முறை, அவ்விரண்டு உலகங்களுக்கும் உள்ள எல்லைகளை நம் கண்களுக்குப் புலனாகாமல் செய்து விடுகிறது. முதல் காட்சியில் சகுந்தலையின் இதயம் விஷய சுகத்தில் முழுகுவதைச் சற்றும் ஒளிக்காமல் கவிஞர் காட்டி விடுகிறார். தலைவன் தலைவி, இவர்களின் செய்கைகளில் தென்படும் மனோ விகாரங்கள் இவ் வீழ்ச்சிக்கு உதவியாகின்றன. யௌவனத்தின் எழிலையும் மயக்கத்தையும், சிருங்கார சேஷ்டைகளையும் வருணித்தது மல்லாமல், பெண்மையின் மட்டில்லா நாணத்தையும், அதனுடன் முரண் செய்யும் சிருங்கார லீலையையும் கவிஞர் நன்கு வெளியிட்டிருக்கிறார். இதுவே சகுந்தலையின் கவடு சூது தெரியாதசுபாவத்திற்கு ஓர் அத்தாட்சி. துஷ்யந்தனுடைய வருகை கிளப்பிய புத்துணர்ச்சிகளுக்கு, அவள் முன்பே தயாராகவில்லை. ஆகையால் தன் மனோ விகாரங்களை மறைக்கவோ, தன் காதலை அடக்கிக்கொள்ளவோ வகை அறியாதவளாகிறாள். இதற்கு முன் மன்மத பாணங்களால் அவள் அடிபட்டவளல்ல; இதுவே காரணம் அவளுடைய உள்ளம் தகுந்த கவசமொன்றுமில்லாமல் திறந்து கிடந்ததற்கு; காதலின் வேகத்தைக் கண்டு தயங்கவோ அல்லது காதலரின் உறுதியைச் சந்தேகிக்கவோ அவள் இடம் கொடுக்கவில்லை. ஆச்சிரமத்தில் வளர்ந்த மான் எவ்விதம் பயமறியாமல் இருந்ததோ, அவ்விதமே ஆச்சிரமத்து நங்கையும் காவல் ஒன்றுமில்லாமல் அவள் காதலை அபகரிக்க வந்த கள்வன் எதிரே தோன்றுகிறாள்.

துஷ்யந்தனுடைய காதலின் வெற்றியையும் கவி சுபாவமாகவே வரைந்துள்ளார். அவ்விதமே சற்றும்

சிரமமில்லாமல், சகுந்தலையின் மாசற்ற தன்மையையும் அவள் கற்பின் வலிவையும் விளக்கிக் காட்டுகிறார். அவளுடைய எளிய சுபாவத்திற்கு அவளிடம் உரு வாகும் காதலும் ஓர் இலக்கியம்தான்.

கானகத்தில் பிறந்த பூ தன் இதழ்களில் தங்கும் தூசியைத் துடைக்க வேறெருவரையும் வேண்டுவ தில்லை. மலர் தன்னை மூடிக் கொள்ளாமல் நிற்கிறது; அதனால் தூசியும் அதன் மேல் படிகின்றது; ஆயினும் மாசுள்ளபோதும், தன் சுய அழகுடனே தான் அது விளங்குகிறது. அவ்விதமே சகுந்தலையின் மேல் களங்கம் சற்று முதலில் ஏற்படுகிறது; ஆனால் அவள் அதைக் கொஞ்சமும் உணரவில்லை. காட்டில் திரியும் பயமில்லாத மானைப்போலவும், மலைமேல் உற்பத்தி யாகி ஓடும் நீரோடையைப் போலவும், சேற்றின் நடுவி லும் அவள் சுத்தமாய்த்தான் காணப்படுகிறாள்.

ரிஷி ஆச்சிரமத்தில் வளர்ந்த இள நங்கையைக் காளிதாஸர் இயற்கையைப் பின்பற்றவே விட்டுவிடு கிறார்; ஓரிடத்திலும் அவளைக் கட்டுப் படுத்துவதில்லை. ஆயினும் புருஷனைத் தெய்வமாகப் பின்பற்றும் தர்ம பத்தினிகளில் சிறந்தவளாய் அவளைக் கவிஞர் செய்து விடுகிறார். பொறுமை, அடக்கம், தவசு புரியும் ஒழுக்கம், முதலியவைகளுக்கு அவளே ஓர் உதாரணமாகிறாள். முதலில், செடி கொடிகளைப் போல் அவளும் இயற் கையான உணர்ச்சி வேகங்களுக்கு வசப்பட்டுத் தன்னை மறக்கிறாள். கடைசியில் அவளுடைய பெண்மையின் அரும் சுபாவம்; தளராத ஊக்கத்தையும், கஷ்டங் களின் இடையே மிகுந்த பொறுமையையும், தீவிரமான விரதங்களைக் கடைப்பிடிப்பதையும் வெளியாக்குகிறது. ஒப்பற்ற கவிப்பண்புடன் காளிதாஸர், செயலும் சாந்த நிலையும், இயற்கையும் தர்மும், நதியும் கடலும்,

சங்கமமாகும் இடத்தில் சகுந்தலையை வைத்துக் காட்டுகிறார். அவளுடைய தந்தை ஒரு முனிவர்; அவள் தாய் ஒரு தேவகன்னிகை. அவள் பிறந்த வகை தவசுகள் கலந்த நிலையில்தான் என்றாலும், இந்திரியங்களை அடக்கிய ஒரு முனிவர் வாழும் ஆச்சிரமத்தில் அவள் வளர்ந்து வந்தாள்.

இயற்கை நிலையும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் இடமும் அவ்வாச்சிரமமே தான். லௌகிக தர்மங்கள் ஒன்றையும் அவ்விடத்தில் கட்டுப் படுத்தாவிடினும், சமயப் பற்றின் சாஸனங்கள் நிறைந்த தலம் வேறெதுவுமில்லை. சகுந்தலையின் காந்தர்வ விவாகமும் அம்மாதிரியே தான் நடந்தது. அது சுயேச்சையின் விளைவான போதிலும், வாழ்க்கையின் முக்கிய இல்லற சடங்கான மணப் பிணைப்பைப் பெற்றுள்ளது. உலகிலுள்ள இலக்கிய நிதிகளையெல்லாம் பரிசோதித்தாலும், சாகுந்தல நாடகம் போல் மற்றொன்று இருப்பதாக அறிய இயலாது. ஏனெனில் இந் நாடகம் ஒன்றில் தான் பந்தமில்லா வாழ்வையும் நியதியையும் ஒருங்கே நெறி தவறாது சேர்ந்து காண்கிறோம். இவ் விரண்டு அம்சங்களின் போராட்டமே இந் நாடகத்தில் காணப்படும் சுக—துக்கங்களுக்கும், சேர்க்கை—பிரிவுகளுக்கும் ஆதாரமாயிருக்கின்றது.

சகுந்தலையின் நாணம் சுபாவமாய்த் தோன்றுகிறது; ஷேக்ஸ்பியர் நாடகமொன்றில் தோன்றும் மிராண்டாவின் மடம் சற்றுச் சுபாவத்திற்கு மாறாகவே காணப்படுகிறது. இவ் விருவர்களின் சுற்றுணர்ச்சிகள் வேறுபட்டிருப்பதின் பயனே இவ்விதச் சுபாவ வித்தியாசங்களுக்குக் காரணமாகலாம். சகுந்தலையை உலக ஞானமே இல்லாதவளென்று ஒப்புக் கொள்ள முடியாது. முதல் அங்கத்தின் ஆரம்பத்தில் சகுந்தலை

யின் இரண்டு தோழிகளும் அவளுடைய யௌவனப் பருவத்தின் அரிய சோபையை அவளுக்கு ஞாபகப் படுத்துகிறார்கள். அவளும் வெட்கத்தினால் விகாரங்களை வெளிக்காட்டுகிறாள். ஆனால் இவை அனைத்தும் அவளிடம் மேலேயே காண்கின்றன. ஏனென்றால் எளிமையும் தூய்மையும் அசைக்க முடியாதபடி அவளிடம் வேரூன்றியுள்ளன. ஆனாலும் கடைசி வரையிலும் உலக ஞானம் அவளிடம் வேண்டிய அளவில் ஏற்பட வில்லை என்பதைக் கவிஞர் விளக்கி இருக்கிறார். கபடமில்லாத் தன்மை அவளுடன் கூடப் பிறந்தது. ஆயினும் முழுவதுமே உலக ஞானம் இல்லாதவளல்ல அவள் என்பதும் ஓரளவில் தெரிகிறது. ஏனெனில் அவள் வசித்த ஆச்சிரமம் அவ்வளவாக ஜன சமூகத்தின் எல்லையைத் தாண்டியதும் அல்ல; குடும்பிகளின் வாழ்க்கையில் உள்ளன போன்ற கட்டுப்பாடுகள் சில அங்கும் இருக்கின்றன. சகுந்தலையிடம், உலகாநுபவம் குறைவாயினும், பகுத்தறிவு சற்றும் இல்லை என்பதற்கில்லை. பிறரை நம்பும் இயல்பு அவளிடம் பூர்ணமாயுள்ளது. நம்பிக்கையின் கலப்பில்லாத நிலையே அவளைச் சற்றுக் கீழே சறுக்கி விழச்செய்தது என்றாலும், அக்குணமே அவளைக் கடைசியில் கடைத்தேறவும் வைத்தது. பெரிய தொரு நம்பிக்கைத் துரோகம் உண்டான போதிலும், அவளுடைய ருஜு சுபாவமே கடைசிவரையிலும் அவளைப் பொறுமை, தயை, தாக்ஷிண்யம், முதலியவைகளை மேற்கொள்ளும்படித் தூண்டுகிறது. மிராண்டாவின் கபடமற்ற வாழ்க்கையில் இவ்வளவு துன்பங்கள் ஏற்படவில்லை; இவ்வளவு போராட்டங்களுடனும் அவள் சிரமப்படவில்லை என்றே சொல்லவேண்டும்.

நம்மிடமுள்ள காமக் குரோதங்களே வாழ்க்கையில் சதா புயற் காற்றுகளைக் கிளப்புகின்றன. எரிமலை

வர்யினின்றும் எழும் திச்சுவாலைகளுக்குச் சமானமான மனக் கொந்தளிப்புக்களை, பச்சாத்தாபத்தின் கனிந்த கண்ணீர்த் திவலைகளால் அணைக்க முயல்கின்றார் கவிஞர். நீண்ட காலம் அதற்காக அவ் வியாதியை வருணிக்கவுமில்லை; திரையைச் சிறிது தூக்கித் துன்பத்தைக் காட்டி விட்டு மறுபடியும் திரையை மூடிவிடுகிறார். சாதாரண மனிதனிடம் கர்மத்தின் விளைவாகக் காணக் கூடிய கெட்ட குணத்தை, துஷ்யந்தனுக்குத் துர்வாஸர் சாபத்தினால் உண்டான ஞாபகமறதியாகக் காளிதாஸர் மாற்றி விடுகிறார். அப்படிக் கில்லாவிட்டால், சகுந்தலையை அரசன் தள்ளிய வரலாறு நாடகத்தின் முழுச் சுகத்தையும் குலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சிறியதொரு துவாரத்தின் மூலம் அரசனுடைய பாதகச் செயலின் ரகசியத்தை உணர நமக்குக் கவிஞர் உதவி செய்திருக்கிறார். அது ஐந்தாம் அங்கத்தில் உள்ளது. அரண்மனை ஆஸ்தான மண்டபத்தில் சகுந்தலை நிராகரிக்கப்படுவதின் முன், அரசனுடைய காதல் துறையின் சில வரலாறுகளை ஒரு கணம் நமக்குக் கவிஞர் திறந்து காட்டுகிறார். திரையின் பின் பெண்ணொருத்தி பாடுகிறாள்;

"புதிய தேனை அருந்தும் ஏ வண்டே! மாம்பூக்களைத் தேடிய நீ, ஏனோ சதா தாமரையை வாசஸ்தலமாய்க் கொண்டு மாம்பூக்களை மறந்தனை?"

இது வரையிலும் துஷ்யந்தனுடைய இனிய பேச்சுக்களையே கேட்ட காதுகளுக்கு, சோகம் ததும்பும் இப் பாட்டின் அடி பெரியதொரு மன அதிர்ச்சியை நிச்சயம் உண்டாக்குகிறது. முந்திய அங்கத்தில்தான், கண்வ மகரிஷியின் ஆசீர்வாதங்களையும், காட்டிலுள்ள சர்வ ஜீவப்பிராணிகளின் அங்கீகாரத்தையும் பெற்று, மங்கள கோலத்துடனும், இன்பக் கனவுகளைக் கண்டு கொண்டும், சகுந்தலை பதியின் வீட்டிற்குப் புறப்பட்

டாள். அன்பை அள்ளிவிடும் இடத்தைப் பற்றிய எண்ணங்களெல்லாம் ஏமாற்ற மடையச் செய்வதற்குத் தகுதியான பிழை யொன்று ஏற்பட்டு நம் கற்பனையில் வரையப்பட்ட சித்திரத்தைச் சற்றுக் கெடுக்கின்றது.

விதூஷகன் அரசனைப் பார்த்து 'என்ன, இந்தப் பாட்டு இப்படி இருக்கிறதே' என்று வினவவும், அரசன் சற்றுத் திகைத்துப் பதில் சொல்லுவான்: 'சிருங்கார லீலைக்ளைச் செய்து விட்டு நாம் நம்முடைய ஆசை நாயகிகளை மறந்து விடுவதை நினைத்துக் கடிந்து சொல்லுகிருள் ஹம்ஸபதிகை.' இவ்விதச் சிற்றின்ப சுகத்தை நாடும் அரசனிடமுள்ள சுபாவத்தை ஐந்தாம் அங்கத்தின் ஆரம்பத்திலேயே வெளியிடுவதிலும் கற்பனை லக்ஷ்யமொன்று இருக்கத்தான் வேண்டும். துர்வாஸர் சாபத்தின் அறிகுறிகள் ஏற்கெனவே அரசனின் இதயத்தில் முளையிட்டுள்ளன வென்பதையும் கவிஞர் மிக்க அருமையாய்த் தெரிவிக்கிருர்.

நான்காவது அங்கத்திலிருந்து ஐந்தாவதில் நுழைகையில், புதியதொரு உலகத்தையே நாம் அடைவதாக் நினைப்பு உண்டாகிறது. ஆத்ம குணங்கள் நிரம்பிய ஆச்சிரமத்தை விட்டுச் சூதுவாதுகள் கொண்டதும், கடின இதயங்களைப் பேர்ஷிப்பதும், காதல் துறையில் உயர்ந்த நோக்கங்களை அலட்சியம் செய்வதும், ஒற்றுமையை விரும்பாததுமான ராஜ சபைக்குச் செல்கிறோம். ஆச்சிரம வாழ்க்கையின் இன்பக் கனவுகள் முறிந்து விழுகின்றன. சகுந்தலையை அனுசரித்து வந்த ரிஷிகுமாரர்கள் இருவரும், 'தீயினல் சூழப்பட்ட வீடொன்றை' அடைந்தவிதம் அரசன் அரண்மனையைக் கருதுகிருர்கள். எதிர்பாராத இடியொன்று விழுந்ததும் அதனைத் தாங்கமுடியாமல் ஆகாதிருப்பதற்காகவே, கவியும் இந் நாடகத்தின்

ஐந்தாம் அங்கத்தில் புகுத்தும் சிற்சில சூசகங்களை வரப் போகும் ஆபத்தை விளக்கும் வகையில் அமைத்துள்ளார் போலும்.

சகுந்தலை நிராகரிக்கப்படும் கட்டம் வருகிறது. திடீரெனத் தன்னை இடியொன்று கீழே சாய்த்ததாகவே சகுந்தலை நினைக்கின்றாள். மானொன்று தன்னைத் தடவிக் கொடுத்த கையினால் அடிபட்டால் எவ்விதம் மருண்டு விடுமோ, அம்மாதிரியே சகுந்தலையும் எதிர்ப்படுவதொன்றையும் அறிய முடியாதவளாய் அரசனை வெறிக்கப் பார்த்து நிற்கிறாள். புயற்காற்றின் சுழலில் அகப்பட்டு ஆச்சிரம அமைதியினின்றும் உண்மையிலேயும், உவமையின் வாயிலாகவும், தூக்கி எறியப் படுகிறாள். பழைய வாசனைகளையும், ஆச்சிரமத்துப் புல் பூண்டு மிருகங்களையும், பிராண சிநேகிதிகளையும் அவள் பிரிந்துவிடுகிறாள். புக இடமில்லாமல் தனித்தே நிறுத்தப்படுகிறாள். முதல் நான்கு அங்கங்களின் இன்னிசையெல்லாம் நின்று போய் ஒரே சூன்யமாய்த் தோன்றுகிறது.

ஆ, எப்படிப்பட்ட பெரிய துக்கமும் தனிமையும் அவளைச் சூழ்கின்றன! ஆச்சிரமத்திலுள்ள சர்வ சத்துக்களையும் தன்னுடையவையாக மதித்தவளின் கதிதான் எவ்விதமாயிற்று! தன்னுடைய சொல்லொண்ணாத் துயரத்தினால் பெரும் மௌன நிலையை மேற்கொள்ளுகின்றாள். கண்வருடைய தபோவனத்திற்கு மறுபடியும் அவளைக் கொண்டு சேர்க்காததில், காளிதாஸர் காட்டும் திறமை மிகவும் உயர்ந்தது. புருஷன் தன்னை வேண்டாமெனத் தள்ளிய பிற்பாடு, பழகிய இடத்திலுள்ளவைகளுடன் தன்னால் வேற்றுமை இல்லாமல் இனிப் பழகுவது சாத்தியமில்லை என்பதை அவளே அறிவாள்......அவளும் இனிப் பழைய சகுந்தலை

இல்லை அல்லவர்! அவளுக்கும் உலகிலுள்ள மற்றவைகளுக்கும் ஏற்பட்ட உறவு மாறிவிட்டது. மறு படியும் பழைய இடங்களில் இருக்க நேர்ந்தாலும், அவ ளிடமுள்ள மாறுபட்ட மனோநிலையை அவ்வனுபவம் உணர்த்தும். ஆம், மௌனமொன்று மிக்கதாய் உண்டாவதினாலேயே, அவள் அடைந்திருக்கும் துக்கம் சர்மான்யமானதல்ல வென்பது விளங்குகிறது. தன் இளம் வயதுத் தோழிகளைப் பிரிந்து, தன் சோகத்தை யும் தானே அநுபவிக்கும் சகுந்தலையை, புதியதொரு ஆசிரமத்தில் வைத்து வருணிக்கவில்லை கவிஞர். ஒன் றும் அவளைப் பற்றிச்சொல்லாத காரணமே நாமும் சகுந் தலையின் பிரிவாற்றுமையின் வேதனையை நன்கு அறி கிறோம். கண்வருடைய தபோவனத்தை அவள் மறுபடி யும் அடைந்திருப்பினும், காடும் சுற்றமும் அவளுடன் அநுதாபம் காட்டி இருக்கும். நம் மனக் காட்சியில், ஒவ் வொருசெடியும் கொடியும் அழுது புலம்பி யிருக்கும்; இருதோழிமார்களும் சகுந்தலையின் கஷ்டத்தைத் தங்க ளுடையதாகவே பாவித்திருப்பார்கள். கவி இதை யெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டாம் நமக்கு. மரீசி யின் தபோவனத்தில் எல்லாம் பேச்சு மூச்சில்லாமல் காண்கின்றன. சகுந்தலையை, உலகம் மறந்தவளை நாம் ஒரு மூலையில் உட்கார்ந்து தியானம் செய்துகொண்டு, மனத்தை அடக்கி, பற்றுக்களை விலக்கிய ஓர் உயர்ந்த நிலையில் பார்க்கின்றோம்.

துஷ்யந்தனுடைய மனம் பச்சாத்தாபத்தினுல் எரிக்கப்படுகின்றது. இந்தப் பச்சாத்தாபமே அவன் செய்யும் தவசு. பச்சாத்தாபத்தினுல் அவன் மறுபடியும் சகுந்தலையை அடையாத வரையிலும், அவளை அவன் பெறுவதில் யாதொரு பயனும் இருக்காது................ பாவம், காதல் உணர்ச்சி வெள்ளத்தினுல் அடிபட்டு

ஒரே கணத்தில் சகுந்தலை தன்னைத் துஷ்யந்தனுக்கு அர்ப்பணம் செய்து கொண்டாள். ஆனால் அவ்வன்பு பூர்ணமானதாகாது. தவசு கிடந்து பெறும் அன்பே நிலைக்கத் தக்கது. சீக்கிரத்தில் அடையும் பொருள் சீக்கிரத்திலேயே கை நழுவி விடுமல்லவா? ஆகையினால், இருவரையும் பிரிவில்லாததொரு அழிவற்ற அன்பில் சேர்ந்த வைக்கவே, கவிஞரும், அவ்விருவர்களையும் கடும் தவம் புரிய வைத்திருக்கிறார். அவளைத் தள்ளாமல் துஷ்யந்தன் அங்கீகரித்திருந்தாலும், அரண்மனையின் ஒரு மூலையில்தான் பிரயோஜனமற்ற வாழ்க்கையை அவள் நடத்தவேண்டி வந்திருக்கும்.

துஷ்யந்தன் கடின இதயத்துடன் அவளை வேண்டாமெனத் தள்ளியதே அவளுக்கு ஒரு வரப் பிரசாதமாகி விட்டது. பிறகு தனது பகுத்தறிவற்ற செயல் தன்னையே எரிக்கவும், துஷ்யந்தனும் சகுந்தலையைப் பற்றிச் சாமான்யமாய் நினைத்துக்கொள்ளவில்லை. தாங்க முடியாத மனோவேதனை ஒன்றே அவனுடைய இதயத்தை உருக்கிச் சகுந்தலையைத் தன்னை விட்டுப் பிரிக்க மாட்டாத தென்றும் எண்ண வைத்தது. அரசனுக்கும் அன்றுவரை அவ்வித உண்மை அநுபவமும் கிட்டியதில்லை. நிஜமான காதலை அன்று வரை அவன் வெளியிட்டதும் கிடையாது. அரசர்களின் துர்ப்பாக்கியந்தானே காரணம், அவர்களுடைய ஆசைகளின் பூர்த்தி சிரமமில்லாமல் கிட்டுவதால் எதையுமே முழு மனத்துடனும் அவர்கள் விரும்பாததற்கு! விதியின் வினையினால் துஷ்யந்தனும் துன்புற்று, பிறகு உயர்ந்த காதலை உணர்ந்து, கேவலம் விட புருஷனைக ஆவதையும் தவிர்த்துக் கொள்ளுகிறான்.

முதல் காட்சியில் தலைவன் தலைவி இவர்களின் கூடுதலைக் கேவலம் காதலர்களின் சேர்க்கையாகவும், கடைசிக் காட்சியில் பரதனுடைய பெற்றோர்களாக அவ்

இருவர்கள் சந்திப்பை உயர்ந்ததோர் சங்கம மாகவும் நாடகாசிரியர் மெய்ப்பிக்கின்றார். முதல் அங்கம் முழுவதும் ஒளிதிகழும் சம்பவங்களால் நிறைந்துள்ளது. கண்வருடைய அழகிய பெண்ணும், அவளுடைய இரு சினேகிதிகளின் விளையாட்டும், வேடிக்கையும், புதிதாய்ப் புஷ்பித்த 'வனஜயயோதஸ்னே' க்கொடியும், மது உண்டு மயங்கிய வண்டும், மோகம் கொண்டு மரங்களிடையே காணும் அரசனுடைய உருவமும், எல்லாமே க்வர்ச்சியளிக்கின்றன. இவ்வித இன்பமயமான இடத்தை விட்டு, துஷ்யந்த மஹாராஜரின் ஆசைக் காதலியாக மட்டும் அவமானத் துக்குள்ளாகும்படி வெளியேறுகிறாள் சகுந்தலை. பரதனுடைய தாயாகி, தன் துயரம் தன்னுடையதாக மட்டும் பாவிக்கும் சீலத்தின் அவதாரவடிவமாய் மரீச ஆச்சிரமத்திலுள்ள சகுந்தலை, முற்றும் வித்தியாசமாய் இருக்கிறாள். அவ்விடத்தில் ரிஷி குமாரிகள் செடிகளுக்குத்தண்ணீர் வார்ப்பதில்லை; சகோதர வாஞ்சையோடு கொடிகளுடன் ஒருவரும் உறவாடுவது மில்லை. ஆச்சிரம மிருகங்களுக்குக் கை நிறைய நிவாரங்களைத் தினியாகக் கொடுப்பாருமில்லை. கட்டிலடங்காத சிறு பாலகனைக் கவனிப்பதிலேயே எல்லா நேரத்தையும் அங்குள்ள பெண்மணிகள் செலவிடுகிறார்கள். சகுந்தலையும் அங்கு காணப்படும்போது கவலை தோய்ந்த விழிகளுடனும், அழுக்கடைந்த ஆடையுடனும், உள்ளத்தில் தாய்மையும் உபவாசமிருக்கும் தன்மையும் பொருந்திக் காணப்படுகிறாள். துஷ்யந்தனிடம் காம பாசத்தினால் கட்டுண்ட தோஷம் நீங்கியவளாய் இப்போது ஒரு தாய்க்கு உவந்த கௌரவத்துடனும், மதிக்கத் தகுந்ததொரு நிதானத்துடனும் தோற்றமளிக்கின்றாள். அவளை ஒருவரும் இனித் தள்ள முடியாது.

குமாரசம்பவத்திலுள்ளது போல இந்த நாடகத்திலும் அழகு நன்மை பயக்கும் நேர்மைப் புத்தியுடன் கூடிக்குலாவும் போதுதான், அழிவற்றதாய் இருக்கும். அடக்கமான அன்பு ஒன்று தான் என்றும் உயர்ந்ததெனவும், கட்டுக்குள் அடங்கிய சௌந்தர்யம் ஒன்று தான் நிஜமானது என்றும், ஒருவித நியதிக்கும் உட்படாத பேர்து அழகு நசித்துவிடும் என்றும் தெளிவாகக் காளிதாஸர் காட்டுகிறார். காதல் அதன் சுயநலத்திற்காகவே சிறந்தது என்னும் கொள்கையை மறுத்துக் கூறுவார் இப் பண்டைக் காலத்துப் புலவர். அன்பின் சிகரம்தான் சிவம் என்று காண்பிக்கின்றார். தன்னிடத்திலேயே நினைவாய், பிறர் நன்மையைத் தேடாமல், பிள்ளை, பெண், உற்றார், உறவினர்களிடமெல்லாம் தன்னைப் பங்கிட்டுப் பிரித்துக் கொள்ளாத ஓர் அன்பு இருந்தும் அது உபயோகமில்லை என்று மனத்தில் படும்படி உணர்த்துகின்றார்.

பாரத பூமியின் தனிப்பட்ட சிறப்பின் அடையாளங்களான இரு கொள்கைகளில் ஒன்று இல்லற வாழ்க்கை, மற்றொன்று ஆத்ம குணத்தின் வளர்ச்சி. இன்று உலகின் மற்ற இனத்தாருடனும், மதத்தர்களுடனும் இந் நாட்டுக்குத் தொந்தம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், தள்ள முடியாதபடி மற்றவர்களுடன் பிணைக்கப் பட்டும் விட்டது. ஆனல் ஒன்றில் மட்டும் தனித்தேதான் நிற்கிறது. அதுதான் யோகநிலை. இரண்டு விதமான கொள்கைகளுக்கும் ஒற்றுமை ஏற்பட வழியுண்டு என்பதைக் காளிதாஸர் இந் நாடகத்திலும், குமார சம்பவத்திலும் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஒன்றிலிருந்து மற்றொன்றை அடைவது சிரம மல்ல. ஆச்சிரமத்தில் ரிஷி குமாரன் சிங்கக் குட்டிகளுடன் விளையாடுகிறன். ஒடுங்கும் யோகியின் உள்ளத்தையும், இல்லற வாழ்க்கையை நடத்துபவரின் மனோ நிலையையும்

வித்தியாசப் படுத்தாமல் இவ்விடத்தில் காண்பிக்க முடிகின்றது.

காளிதாஸர் வர்னப்பிரஸ்தத்தின் அஸ்திவாரத்தின் மேல் இல்லற வாழ்க்கையின் கட்டடத்தைக் கட்டுகிறார். விஷய சுகத்தினின்றும் ஸ்திரீ புமான்களின் ஆசையை விலக்கி, சுத்தப்படுத்தி, யோக சாதன பீடத்தில் காதலை உயர்த்தி வைக்கின்றார். ஹிந்துதர்ம சாஸ்திரங்கள் ஆண்பெண்களின் காதல் வாழ்க்கையை அநேக கட்டுப்பாடுகளில் வைக்க முறையிடுகின்றன. காளிதாஸர், ஒழுக்கத்தை அழகின் அம்சங்களால் அலங்கரித்துப் பார்க்கிறார். அவர் பாராட்டும் அழகுக்கு அச்சம், நாணம், நல்லகுணம், இவைகளால் மெருகு ஏறி விடுகிறது. அதன் ஆழ்ந்த நிலை ஒன்றையே நினைப்பது தகும்; அதன் பரந்த நிலையில் இவ்விசுவம் முழுவதையும் உள்ளாக்கக் கூடிய வைராக்கியமொன்றே அதன் உயிர். துன்பங்களே அதனை உறுதியாக்கும் சாதனங்கள். சமயப்பற்றே பேரின்ப நிலையைத் தேடும் கருவியாக் அதைச் செய்யும். பெருங்கடலில் வந்து பாயும் மலை அருவியைப் போல், ஆண் பெண்களின் காதல் உணர்ச்சி, கொந்தளிப்பிலும் கரை தாண்டாமல், எல்லை கடந்ததோர் உண்மையில் லயிக்கின்றது. ஆசையால்தான் கட்டில் அடங்காத காம பாசத்தைக் காட்டிலும் சுயநலமற்ற அன்பு மேம்படுகிறது.

* * * *

[காளிதாஸரெங்கே ரவீந்திரர் எங்கே என்பவர்களுக்கும் சரியான தொரு பதிலாகிறது மேலே கொடுத்துள்ள ஆராய்ச்சி. வாஸ்தவத்தில் டாகுர் எவ்வளவு நன்றாய்க் காளிதாஸரை நேசிக்கின்றார் என்பது அவருடைய வேறு சில பாட்டுக்களிலும் புலனாகிறது.

ஓரிடத்தில் கூறுவார்: "காளிதாஸர் வாழ்ந்த உயர்ந்த நாட்களில் என் காலமும் இருந்திருக்கலாகாதா? மனக் கோட்டை கட்டுவதில் என்ன உபயோகம்? அச்சு யந்திரம் இடைவிடாமல் வேலை செய்யும் இந்த யுகத்தில் ஏனோ நான் பிறந்தேன்! காலம் தவறிப் பிறந்த காளிதாஸனன்றோ நான்!"

மேலும் காளிதாஸர் வேண்டுமானாலும் இப்போது இல்லையே தவிர, அவர் வருணித்த பருவகாலம் இன்னும் மாறிவிடவில்லை என்று தம்மையே ஓரிடத்தில் தேற்றிக் கொள்ளுவார்.

வடமொழிக் கவிஞர்களுக்குள் காளிதாஸர் சிறந்தவர் என்பது டாகுருடைய கருத்து. நமக்கும் டாகுரிடம் உள்ள பக்தி உறுதிப்படுவது அவர் தொழும் தெய்வம் நமக்குப் பிடித்த தெய்வமாயிருப்பதேயாம். ஆனால் அவருக்கும் நமக்கு முள்ள வேற்றுமை, அவர் தாமும் கவிஞராயிருப்பதால் உண்மைக் கவிதையையும், கருத்தையும், கலை ஞானத்தையும் விளக்குகிறார். நாம் அநுபவம் பெறுததால் அழகை அனுபவித்துச் சொல்ல வகையற்றுக் கிடக்கிறோம்.]

---

# இல்லறமும் இலக்கியமும்

நா. சிவபாதசுந்தரம்

பூரணவாழ்வே யோகம். உள் விழிப்புக் கொண்டு உள்ளேயிருக்கும் உயர் பொருளைக் காண்பதே வாழ்வு. இப் பொருளோடு இரண்டறக் கலப்பதே பூரண வாழ்வாகும். யோகம் துறவிக்கு மட்டுமல்ல, இல்லறத் தார்க்கும் உரியதே. இல்லறத்தில் யோக இன்னொளி வீசுமாயின் வேறுயோகங்கள் வேண்டா. இதற்கு நாயன்மார்கள், இராமகிருஷ்ணர், மகாத்மா காந்தி போன்ற மகான்களின் வரலாறுகளே பெருஞ் சான்று கும். ஆண்மைக்குரிய அருங்குணங்களும் பெண்மைக் குரிய பெரிய குணங்களும் சேர்ந்து வாழ்வின் நுண் நிலையை நிறைவாக்குவதே இல்வாழ்வாம். தார்வரங் களும் இல்லறம் நடத்துவதேன்? வாழ்வின் நுண் நிலையை நிறைவாக்கவே. ஆற்றின் ஒழுகி யறனிழுக்கா இல் வாழ்க்கை, காயைக் கடித்துக் கானகத்திலிருந்து மூக்கைப் பிடித்து முடுக்கிலிருக்கும் முனிவனினும் பொறுமை யுடைத்து என்பர். இதை "நோற்பாரி னோன்மை யுடைத்து" என்ருர் வள்ளுவர்.

இவ்வுலகம் சக்தியின் விரிவு என்பர். இச் சக்தி முதல் இருளூட்டிப் பின் ஒளி காட்டுகின்றது. இதை மறைப்புச் சக்தி என்றும், அருட்சக்தி யென்றும் கூறுவர். மறைப்புச் சக்தியே அருட் சக்தியாய் மாறு வது. வண்ணுன் அழுக்கை அழுக்கால் அகற்றுவது போலச் சக்தியும், உயிரில் படிந்த அழுக்கை மறைப் புச் சக்தியால் உடம்பு, உலகம், போகம் முதலிய

அழுக்குக்களால் நீக்குகின்றது. இங்ஙனம் உயிர் சுத்த வுயிராய்ச்சுகமடைவதற்கு ஏற்பட்டபயிற்சியே இல்லறம். ஆகுமின்னல், ஏகுமின்னல் ஆகிய இரண்டின் இயைவே மின்சக்தி. ஆணும் பெண்ணும் இணைந்து அமைந்து இனிதாகும் நேர்மை ஒழுக்கின்கண் அருட் சுடர் ஆகின்றது. எங்ஙனம்? ஒன்றையொன்று இணைந்து அமைந்து நல்லாற்றலைப் பூரணம் ஆக்குவதால். வள்ளுவர் இணைந்தமைந்த இனிய நிலையை அன்பாகவும், இவ் இனிய நிலை நீடித்துக் கடைப்பிடிக்கும் ஒழுக்கை அறமாகவும் கூறினார்:

அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

என்பது திருக்குறள். இல்வாழ்க்கையின் அன்பாகிய பண்பு துறவறத்தின் பயனையும் முடிக்கும் என்பதையும் காட்டுகின்றதன்றோ! பூக்கள் தமது அழகிய வண்ணத்தாலும் இனிய தேனாலும் வண்டுகளைக் கவர்ந்து அவைகளின் மூலம் பூப் பொடிகளைப் பெண் பூவிற் சேர்த்துக் காயாய்க் கனியாய்க் காட்சியளிப்பது போல, ஆண்மை என்ற அரிய பூ, அழகு ஆள்வினை என்ற அரிய சக்தியால், வண்டு என்னும் பெண்மையைக் கவர்ந்து, காதலென்னும் பூந்தாதை, இல்லறமாகிய பெண் பூவிற் சேர்த்துக், காய் கனி போன்ற மக்களை யீன்று மாநிலத்தை மாண்புறச் செய்யும் தெய்வீக நிலையை ஆய்ந்து நோக்குங்கள்! உடனே ஆண்மை சிவமாகவும் பெண்மை சக்தியாகவும் ஆகும் தெய்வக்காட்சியைக் காணுங்கள். சிவத்தின் ஆணையால் சக்தி உலகாகிய வீட்டை ஆக்கியளிப்பது போல, ஆண்மையின் ஆள்வினையால் பெண்மை தன் இல்லத்தை யாக்கியளித்து இல்லாளாகின்றாள்.

நம் முன்னோர்கள் தமது தத்துவங்களைச் சர்தாரண மக்களும் சுலபமாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, அவைகளைப் புராண இதிகாசக் கதைகளினால் சித்திரித்து, அந்த உயர் கொள்கைகளைப் புகட்டியிருக்கிற முறையில் மிகவும் தேர்ச்சியும் வெற்றியும் அடைந்து விட்டார்கள். அவ்விதக் கதைகளில் ஒன்று வள்ளுவர் வாசுகி கதை. வள்ளுவர் வாய்மையும் தூய்மையுமானவர். வாசுகி அன்பும் அறமுமானவர். இவர்களின் யோகத்தில்—கூட்டத்தில் இயைந்து எழுந்ததே, இந்த வுலகம் போற்றும் தெய்வத் திருக்குறள். இவர்கள் மனையில் மலர்ந்து மணக்கும் மாமலரே திருக்குறள். தமிழன் தன் வீட்டில் ஆற்றிய அறமே, தமிழ் நாட்டின் அறம். உலகின் பொது அறமாய்ப் பொலிவுற்ற பெரும் பெருமை தமிழன் அறத்திற்கே உரியது. இதை

> வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ் நாடு

என்று பாரதியார் கூறினர்.

> அடிசிற் கினியாளே அன்புடையாளே
> படிசொற் கடவாத பாவாய்-அடிவருடிப்
> பின் தூங்கி முன்னெழும் பேதையே போதியோ
> என் தூங்கும் என் கண் இரா

என்ற வெண்பா வள்ளுவர் வாசுகி இறந்தபோது பாடிய பாட்டாக நம் இதிகாசக் கதைகளில் வருகின்றது. இந்த ஒரு வெண்பாவின் மூலமாக இல்லற வியலை இனிதாக வெடுத்துக்காட்டுகின்றார், மாதானுபங்கியார்; "அடிசிற்கினியாளே" என்றார் முதலில். ஆன்ம உறவாகிய அரிசியை, ஆருயிராகிய அடுப்பில், அன்பாகிய பானையில், அறமாகிய நீரைப் பெய்து, தன் நிறைவாகிய நெருப்பை மூட்டி ஆக்கிப் படைத்த இன்ப அமுது

அன்றே வாசுகி யாக்கிய அடிசில்; இதுவே வள்ளுவர் உண்ட அடிசில். இதையுண்டவர், ஏன் அடிசிற்கினியாளே என்றது, வேறெதற்கு இனியவள் என்பர்! தன் கணவன் என்ற மட்டிலல்லாது பெரியோர்-சிறியோர், முதியோர்-இளையோர், உற்றார்-உறவினர், முன்னோர் என்ற இவர்கள் மாட்டுச் செய்யும் இல்லறத்தின் இயல் விருந்தோம்பல் என்பதனைச் சுட்டுவதுபோல், "விருந்திற்கு—புதுமைக்கு, இனியவளே" என்பதையும் அடக்கியுள்ளது இது; இன்பம் 'அறத்திலுண்டு. அறமல்லாதவைகளில் இன்பமுண்டா? இல்லை. இதனால் அறத்திற்கும் இனியவளே என்பதும் இங்கு அமைந்துள்ளது. இது அறமாம், இது பயனுமாம்.

"அன்புடையாளே" என்றார் அடுத்தாற்போல். அறத்தின் நீர்மையால் ஆகிய இன்பத்தை அடைந்தவர் இப்போது அவ்வறத்திற்கு அடிப்படையானதும் முதன்மையானதுமான "அன்பை" இங்குக் கூறினார். அறம் எங்ஙனம் பயனாக அமைந்ததோ அன்பும் அங்ஙனமே பண்பாக அமையும். உலக மக்கள் எவரும் எதைச் செய்யினும் பயனை முதல் நோக்குவார்களேயன்றிப் பண்பை நோக்கமாட்டார்கள். மகான்கள் இவ்விதமல்ல, பண்பையே நோக்குவார்கள். இதனால் வள்ளுவர் உலகை நற்பண்பில் செலுத்த எண்ணி முதலில் பயனைக்கூறி, அப்பயனைப் பண்பை அடையச் செய்தார். அன்பெனினும்காதலெனினும் ஒன்றே.காதல் தொடர்புடையார் மாட்டுச் செல்வதொன்று, இது முதற்படி. தொடர்பில்லாதார் மாட்டும்செல்வதுண்டு, இது இரண்டாவது படி, முதற்படியை அன்பென்றும் இரண்டாவது படியை அருளென்றும் கூறுவார். அன்பின்-காதலின் சிகரமே அருள். இதை வள்ளுவர் மிக் நன்றாகத் தெளிவாக்குகின்றார், "அருளென்னும் அன்பீன் குழவி" என்று. அன்பில்லையேல் அருளில்லை,

இதனால் அன்புடையாள்" என்றபோது "அருளுடையாள்" என்றதும் அமைந்து மிளிர்கின்றதன்றோ! கதிரும் கடலும் கலந்தே கருமேக முண்டாகி மழையாகப் பெய்கின்றது போல, கதிராகிய ஆண்மையும் கடலாகிய பெண்மையும் ஈறிலாது இணைந்தமைந்து காதலாகிய கருமேகக் காட்சியை அளிக்கின்றது. இக் கருமேகம் ஈரலிப்பால் முதிர்ந்து மழையாகப் பெய்கின்றது போல் காதலும் நன்கு தொடர்புடையார் மாட்டுக் கிளைத்து, அத் திளைப்பில் முதிர்ந்து, தொடர்பிலார் மாட்டு அருளாக ஆக்கம் பெறுகின்றது. மழை உலகெங்கும் பெய்வது போல அருள் உலகெங்கும் சென்று செம்மை பெறும். அன்பு வீட்டறம்; அருள் உலகறம். வீட்டறத்தில் வீறு பெற்ற பின்பே உலகறத்தில் உயரலாம்.

இதனால் உலகத்தை உய்விப்பதற்கு, உலகத்தை அருள் மயமாக்குவதற்கு அன்பு அடிப்படையானது என்பது தெளிவாகின்றது. இன்னும் திருக்குறளில் "அன்புடைமை" யை மக்கட்பேற்றின் பின்பும் விருந்தோம்பலின் முன்பும் வள்ளுவர் வகுத்துள்ளார். ஏன்? மங்கலத்தின் நன்கலமான மக்களைப் போற்றி இல்லறம் இனிது நடாத்துதற்கும் பிறவுயிர்கள்மேல் புதுமை செய்து அருள் பிறத்தற்கும் அன்பு ஓரச்சாணியாதலின்.

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு

என்ற குறள் நம் கருத்துக்குப் பெரும் அரண் அன்றோ. இங்ஙனம் பெண் ஆண் என்ற இருவரும் ஒருவருக்கொருவர் பூரணமாய் வாழ்வின் எல்லையை அறிவதற்கு "அன்புடைமை" மிக இன்றியமையாததுவாம்.

"படிசெற்கடவாத பாவாய்" என்றார் வள்ளுவர். படி—உலகம். உலகம் என்றால் மண், மரம், கல் அல்ல. அங்கு வாழும் மக்களைக் குறிக்கும். வாழும் மக்கள்யார்? எல்லாரும் மக்களாக முடியுமோ? முடியா. ஊழி பெயரினும் சான்றாண்மையில், பண்புடைமையில் பெயராது வாழ்பவர்களே மக்களாவர். இம் மக்களையே நிறைமொழி மாந்தர் என்பர். 'இந் நிறைமொழி மாந்தர்கள் நிலைநாட்டிய நெடு நெறியைக் கடவாது கலங்காத் திண்மையுற்று அழகின் நிலையமான பெண்ணே!' என்று அழைக்கும் அருமை என்னே!

தகைசான்ற சொற்கடவாத கற்பினளைப் "பாவாய்" என்றது மிக இன்பகரமானது. "பாவாய்" என்றால் மரப்பாவையோ, கொல்லிப் பாவையோ, மண் பாவையோ அல்ல. பெண்ணீர்மை பெருகிய பெரும் பொருளை மண்ணுக்கும் மரத்திற்குமா வள்ளுவர் உள்ளம் ஒட்டும்? இல்லை. பா என்பது அழகு, வாய் என்பது இடம். "பாவாய்" என்றால் அழகுக்கு இடமானது என்பதாம். பெண்ணின் அழகு என்ன? மஞ்சளழகா; வகிடழகா; சேலையழகா; சிங்காரிக்கும் பவுடர் அழகா? இல்லை! இல்லை! தன் கற்பைக் காப்பதில் சோர்வில்லாமையே அழகாம். இங்ஙனம் விழிப்பாய் இருப்பவளிடமே அழகு ஆனந்தத் தாண்டவமிடும். எங்கு அழகுண்டோ அங்கு அமைதியுண்டு. அமைதியற்றஇடத்தில் அழகேது? சீதை தன் கற்பால் அரக்கர் அத்தனை பேரையும் அழிக்கும் ஆற்றல் பெற்றும் தன் அழகுக்கும் தன் கணவனின் அழகுக்கும் இழுக்கு என்பதனை அறிந்து அமைவுற்று "வீரம் காத்தலையே வேண்டினள்" என அநுமனிடம் அறைந்த அரிய வாச்கம் எதனால்? அமைதியால். கலை கண்டு காமுற்ற கோவலன் மாதவியினிடம் சென்று அங்குக் கருத்து

அழிந்த பின் கண்ணகியினிடம் வருகின்றான். கண்ணகி கதவடைத்தனளா? கம்பெடுத்துக் கதறப் புடைத்தாளா? இல்லை! இல்லை! அமைதியின்-அழகின் நிலையமாக-பார்வையாக நிலவி அவனை வரவேற்கின்றாள்.

இத்தகைய பெண்மை, ஆண்மையின் பூரண அமைதியில் அமைகின்றது, அடிபணிகின்றது என்பதனை "அடிவருடி" என்ற சொல் பொருள் தருகின்றது. இப் பணிவு, அடிமையிலே, அறியாமையிலே ஏற்படுவதன்று. அன்பில், ஆனந்தத்தில் ஏற்படுவதேயாகும்.

இனி "பின் தூங்கி முன்னெழும் பேதையே" என்றும் விளிக்கின்றார். பெண்மைக் குரிய நாற்குணங்களில் "பேதமை" ஒன்று. பேதமை என்றால் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாம். அதாவது சான்றோரால் அறிவுறுத்தப்பட்ட அரும்பெரும் பொருள்களைத் தம் அகத்தே அடக்கி வைத்து அவை தம்மை அறியார் போல ஒழுகி, வேண்டும்போது வெளிப்படுத்தும் பெண்களின் இயல்பாகும். "பின் தூங்கி முன்னெழும்" என்ற வாக்கியமே "பேதை" என்ற சொல்லுக்குப் பெரு அழகு செய்கின்றது. எங்ஙனம்? ஆண்மை (தலைமகன்) செய்யும் எந்த ஆக்கத்திற்கும் தடை செய்யாது, அவ்வாக்கம் அழகுபட அதன் பின்னே தாழ்ந்து- தணிந்து (தூங்கி) செல்லும்; ஆனால் அவ்வாக்கத்தில் முயலும்போது ஆண்மைக்கு ஒரு சிறு இழுக்கு ஏற்பட வரின், உடனே பொருது முன் எழுந்து நின்று தெருட்டி அறிவுறுத்தித் தம் அறிவைத் துலக்குவர் என்ற பொருளமைக்கின்றது. "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்ற ஔவையார் திருவுள்ளத்தின் நுட்பமும் உற்று நோக்கற்பாலதே. அணிகலங்கள் மகளிரால் எந்நேரமும் எவ்விடத்தும் அணியத்தக்கன அல்ல; பொதுவான

நாட்களில் கழற்றி வைத்துச் சிறப்பு நாட்களில் சிறந்த இடங்களுக்காகவே அவை அணியத் தருவனவாகும். அதுபோல "பேதைமை" என்னும் தன்மையும் மகளிரால் வேண்டும்போது கைக்கொள்ளத் தக்க தொன்றாகும். இடருற்று இருளில் விழும்போது விழவிடாது கை தூக்கி விட்டு ஒளி காட்டுவதே அறிவு. "தலைமை சேர்தரும் சத்தியம் பிறழ்வது தரியோம்;" "வெம்மைகூர் நரகுய்க்கினும் மெய்ம்மையை விடோமால்;" "கதியிழக்கினும் கட்டுரையிழக்கிலேம்" என்று ஒருமித்துக் கூறிய பின் அரிச்சந்திரனது ஆண்மை வாளெடுத்துச் சந்திரமதியை வெட்ட எண்ணும்போது, அவளின் பெண்மையை எண்ணித் துணுக்குற்றது. ஒத்த வுணர்வினளாகிய சந்திரமதி இதை அறிந்து முன்னெழுந்து நின்று, 'என்னுவி இழக்கற்கஞ்சி நீயறம் வழுவேல்' எனத் தன் பேதைமையை-அறிவை வெளிப்படுத்தி இடித்துக் கூறும் இனிமை "பின்தூங்கி முன்னெழும் கற்சிறைக் கனிவுறச் செய்கிறதன்றோ! முன் "பாவாய்!" என அழகின் நிலையமாய்க் கண்டார். இங்கு "பேதாய்" என்று அறிவின் சிகரமாய்க் கண்டார். என்னே வள்ளுவர் உள்ளம்! அறமாய், அன்பாய், அழகாய், அறிவாய்ப் பெண்மை பெருக்கக் கண்ட பெருவுள்ளம் எப்படிப் பெண்மையை விட்டுப் பிரியும். ஒருகாலும் பிரியமுடியாது, அவ்விதம் பிரிந்த ஆண்மை அமைதியுறுமோ! துயிலடையுமோ! இதை உள்ளடக்கியே "நீ பிரிந்தால் என் தூங்கும் என் கண் இரா" என்று முடித்தார்.

தலைமகள் தலைமகனோடு இணைந்து இல்லறம் செய்து வருகையில் செவிலி அவளது அரிய கடிமனைக்கு வந்து அவள் செய்யும் படிசொற்கடவாத பண்பாட்டைப் பார்க்கின்றாள். இருவரது காதற்கனிவும், வாழ்க்கை வளப்பமும் செவிலிக்குப் பெரு மகிழ்ச்சியை

அளிக்கின்றது. அவள்பின் தன் இல்லத்திற்குச் சென்று தலைமகளின் நற்றாயை நாடித்தலைவி அடிசிற்கினியளாக அமையும் அரிய காட்சியைக் கூறுகின்றாள். அது

முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்(து) அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே

(குறுந் 167)

என்பது. இதன் கண் தலைமகள் முறுக்க் காய்ந்த முளி தயிர் கொண்டு புளிக் குழம்பு ஆக்கித் தன் அரிய கணவனுக்கு இடுகின்றாள்; அவன் அதனை "ஆகா! ஆகா!! வாரேரமுதம் குற்றப்பட்டுப் போகுமே எமக்கு" என்று உண்ணுகின்றான். அவள் உள்ளத்தே உவகை ஊற்றெடுக்கின்றது; நாணத்தால் அதை மறைக்கினும், மகிழ்ச்சி மலர்ந்த முகத்தே நுண்ணிய தாய்ப் புலப்படுகின்றது. இதை என்னென்பேன்! இன்னும் கேள்! அவள் புளிக் குழம்பை அட்டவகை கூறுகின்றேன், "கெட்டித் தயிரைத் தன் காந்தள் போன்ற கையால் பிசைந்தனள்; அதுபோது மெல்லிய மேலாடை மெதுவாக நெகிழ்ந்தது; பெரு நாணினளாா் தலின் அதனை உடனே எடுத்து அணிந்தாள். தயிர் பிசைந்த கையென்றும் பார்த்தாளா? இல்லை. கையைக் கழுவினால் நேரமாகிவிடும் என்ற எண்ணத் தால் பிசைந்த குழம்பைத் தாளிதம் செய்யலானாள். குளிர்ந்த வண்ணமாய்க் குவளை போன்ற கண்களில் புகைபடிய மணக்கும்படி தாளிதம் செய்தாள். இதனைக் "குவளையுண் கண் குய்ப்புகை கமழ" என்கின்றாள். இதனால் கண்ணை மூடிக்கொண்டு தன் மேனி புகையிலும் படக்கூடாது என்ற கருத்தற்றவளாய், கண்

கெட்டாலும் கணவன் உண்கதி கெடக் கூடாது என்ற அடிசிற் கினியளாகும் அரிய காட்சி என்னே! இதே போன்ற கருத்துக் காட்சி,

> நெய்யுங் குய்யு மாடி மையொடு
> மாசுபட் டன்றே கலிங்கமுந் தோளும் (நற்றிணை-380)

> கிளரிழை யரிவை நெய்துழந் தட்ட
> விளரு னம்புகை யெறிந்த நெற்றிச்
> சிறுநுண் பல்வியர் பொறித்த
> குறுநடை.........................................(நற்றிணை-44)

நற்றிணையிலும் நயம்படக் காண்கிறது.

இச் செவிலியே, பின்பொரு நாள் தலைமகளது கடிமனைக்குச் சென்று வருகின்றாள். முன்பு சென்று தலைமகளது " அடிசிற்கினியளாய் அமைந்த நிலையை வியந்து கூறினாள்ரே? இதுபோது தலைமகனது அயரா அன்பினையுடையவளாகும் அழகைக் அமர்ந்து வியந்து பேசுகிறாள் :

> கானங் கோழிக் கவர்குரற் சேவல்
> ஒண்பொறி எருத்தின் தண்சிதர் உறைப்பப்
> புதல்நீர் வாரும் பூநாறு புறவில்
> சீறூ ரோளே மடந்தை ; வேறூர்
> வேந்துவிடு தொழிலொடு செலினும்
> சேந்துவரல் அறியாது செம்மல் தேரே

என்று. இப்போது தலைவன் தலைவியைப் பிரிந்து வாழ்கின்றானில்லை. பொருள்கொண்டோ அல்லது போதம் கொண்டோ பிரிவதில்லை. ஆனாலும் அரசனது அரிய ஏவலை அகற்ற அஞ்சி அதன் பொருட்டு மாத்திரம் அரிதிற் சில காலம் அகன்று செல்வான். சென்றாலும் உடனே மீளுவான் என்பது பொருளாகும்.

கண்ணகியின் இல்லறக் காட்சியைப் பாருங்கள். செம்மண்பூசிய சிரியமனை. கட்டுவேலை யமைந்த கடிமனை

குளிர்ந்த காவணத்தால் வேய்ந்தமனை. கண்ணகி அடிசிற் கினியளாய் அன்புடையளாய்க் கோவலன் கண்டுகளிக்கத் தவம் செய்த மனையும் இம்மனையே. கோவலனுக்கும் கண்ணகிக்கும் வாழ்வின் வளம் முடித்து வாழ்த்துக் கூறிய மனையுமாம். அம்மனை மாதரியால் மதுரையில் அமைந்தது. புதுமனையில் புதுப்பானை, பலாக்காய், வெள்ளரிக்காய், பால், நெய் முதலியன ஆச்சியரிடம் கண்ணகி களிப்பாகப் பெறுகின்றாள். மெல் விரல் நோவ, திருமுகம் வியர்க்க, மலர்க்கண் சிவக்க, பல்வகைப் பசுங் காய்கறிகளைப் பக்குவப் படுத்துகின்றாள் கண்ணகி. ஐயை என்பவள் வைக்கோலால் தீ மூட்டுகின்றாள். அவளுடன் கண்ணகி அடிசிலை அழகாக-அமுதமாக ஆக்கி முடிக்கின்றாள். பின் கோவலனை அழைத்து உண்பிக்கின்றாள். பாருங்கள்! உப்பில்லைப் புளியில்லை; நாளை உடுக்கச் சேலையில்லை என்று சொல்லிப் படைத்தாளா? அல்லது தன் தோழியாகிய ஐயையைப் படைக்க விட்டாளா? இல்லை!! புதிய மண்கல நீரால், இணைந்தமைந்து இறுகிய காதலால் கோவலனது கால்களைக் கழுவுகின்றாள். ஆச்சியர் அழகாக முடைந்த ஓர் ஓலைத் தடுக்கில் கோவலனை அமரக் கூறுகின்றாள். கோவலனும் கொற்றவன் போல் அமர்கின்றான். உடனே கண்ணகி தண்ணீரால் தரையைத் தெளித்துத் தலை வாழையிலை பரப்பி உணவை உருக்கமாகப் படைக்கின்றாள். படைத்து "அடிகள் அமுதம் உண்டருள்க!" என்று கணவனைப் பத்தினி பணிந்து பணிக்கின்றாள். கோவலனும் உணவு உண்டான். அவன்வாய் பூசியபின் தாம்பூலம் ஈந்து இன்புறுகின்றாள். இதை ஐயை என்ற தோழியும் மாதரி என்றவளும் கண்டார்கள். உடனே,

ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ!
நல்லமு துண்ணு நம்பி!

என்று கூறி அக் கண்கொள்ளாக் காட்சியினைக் கூறும் எழிலென்னே!

இன்னும் புறநானூற்றில் உண்டியும், உடுக்கையும் கொடுத்து ஓம்புதலையும், இரவில் வந்தாலும் அஞ்சாது தம் இல்லில் உறங்குவித்துச் சிறப்புச்செய் வதையும் காணலாம்.

சிலைப்பாற் பட்டமுளவுமான் கொழுங்குறை
விடர்முகை யடுக்கத்துச் சினைமுதற் சாந்தம்
புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்
இருங்கேழ் வயப்புலி வரிய தட்குவைஇ
விருந்திறை நல்கும் நாடன் (புறம் 374)

திருமல ரன்ன புதுமடிக் கொளீஇ
மகிழ்தரன் மரபின் ஊன்றுவை யடிசில்
வெள்ளி வெண்கலத் தூட்ட லன்றி
.........................................
அகடு நனை வேங்கை வீகண் டன்ன
பகடுதரு செந்நெல் போரொடு நல்கிக்
கொண்டி பெறுகென் றோனே..................(புறம் 390)

இரவிடை வந்தவர்களுக்கும், "அதளுண்டாயினும் பாயுண்டாயினும் யாதுண்டாயினும்" (புறம் 317) கொடுத்து உறங்குவித்துச் சிறப்பிக்கும் உயர்வென்னே! இன்னும் காரைக்கால்லம்மையாரும் சிவனடியார்களுக்கு,

நம்பரடியார் அணைந்தால் நல்லதிரு வமுது அளித்தும்
செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலு முதலான
தம்பரி விலைவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்து

நின்ற நீர்மையைச் சேக்கிழார் செப்பும் திறனும் உன்னற் பாலனவாகும்.

இன்னும் கணவன் பரிசில் ஓம்பும்போது அவன் மனைவியும் உடன் இருந்து ஊக்கி நிற்பதையும், கணவன் இல்லா நேரத்து வருவோரை வறிதே வழியனுப்பாது வளப்படுத்தி விடும் வகையும் நன்கு காண்கின்றோம்.

பரவையார் தம் கணவன் சுந்தரரால் பெற்ற நெல்லை, தாமே அவ்வூரார் எல்லாரும் வாரிக் கொண்டு போய் அவரவர் வீடுகளில் நிரப்பலாம் என்று பறையறைவித்தார். நெல்லோ சிறிது நேரத்துக் கெல்லாம் இருந்தவிடம் தெரியாது மறைந்து விட்டது! நெஞ்சை யள்ளும் இச் செய்கையைச் சேக்கிழார் பெருமான் புகழ்ந்து பாடுகின்றார்:

வன்றொண்டர் தமக்களித்த நெல்கண்டு மகிழ் சிறப்பார்
இன்றுங்கள் மனையெல்லைக் குட்படுநெல் குன்றெல்லாம்
பொன்தங்கு மாளிகையில் புகப்பெய்து கொள்கென்ன
வென்றி முரசறைவித்தார் மிக்க புகழ்ப் பரவையார்

பெண்டிர் செய்யும் பெருங் கொடை புலனாகின்றது.

பெருஞ் சித்திரனார் என்னும் பெரும் புலவர் குமணன் பால் சென்று பெற்ற பொருள்களைத் தனக்கே உரித்தாகக் கொள்ளவில்லை. அப் பொருளில் எவ்வளவு தமக்கு உரிமையுண்டோ அவ்வளவு தன் மனைவிக்கும் உண்டு என்பதைத் தம் மனைவியை நோக்கிக் கூறும் திறம் குறிக்கத் தக்கது:

நின்னயந் துறைநர்க்கு(ம்) நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் பசிதீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே (புறம் 163)

என்பது அப்பாட்டு. "என்னேடும் சூழாது" என்று புலவர் பெருமான் தன் கிழத்திக்கு முழு உரிமை வழங்குகின்ருர்.

இத்தகைய தவ வாழ்க்கையைத் தழுவிய தமிழரின் தனிப்பண்புக்கு, பாலைக்கௌதமனுர், சுந்தரர் முதலிய சைவ நாயன்மார்களும், தத்தம் மனைவியரோடு மிருந்தே தவமியற்றிச் சிவன் திருவடிப் பேரின்பத்தை எய்தினமையே சான்ரும். இதையே வள்ளுவர்,

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று"

என்னுந் திருக்குறளால் அறவாழ்க்கை எனப்படுவது இல்லற வாழ்க்கையே என்றும்,

"அறத் தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்"

என்னுந் திருக்குறளால் துறவுநிலை புகுதல் பயன் இன்ரும் என்றும் கூறினுர் என்பது புலனுகிறதன்ருே!

இங்ஙனம் அன்பால் எழுந்த இன்பவுணர்ச்சி இவ் வையகத்துள்ள எல்லாவுயிர்களும் பெறுதல் வேண்டுமென விழைந்து,

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று திருமூலர் அருளிச் செய்தார்.

இதுகாறும் எடுத்துக் காட்டப் பட்டவைகளிலிருந்து இலக்கியங்களிற் கூறப்பட்ட இல்லற வாழ்வின் மாண்பு புலனுகும்.

# கண்டி நகரம்

எஸ். சியாம்சுந்தர் ராஜரத்னம்

கண்டி என்று சொல்லும்போது ஓர் இணையற்ற காட்சி கண்முன் உருவெடுக்கிறது, ஓர் உணர்ச்சி ததும்பும் உற்சாகம் ஊற்றெடுக்கிறது; ஆகா! இவளே கம்பீர லாவண்யம் பொருந்திய மலைமகள். இலங்கையில் சுதந்திர தேவி கடைசியாகத் துயில்கொண்ட திருக்கோயிலாகவும், "செங்கடகல மஹாநுவர" என்ற பெயர் பெற்றுப் புகழுடன் விளங்கிய புராதனச் சிங்கள மன்னரின் தலை நகராகவும், புத்தர்களுக்குப் புண்ணிய ஸ்தலமாகவும், வீரர்கள் வீற்றிருந்த கோட்டையாகவுமிருந்து, மங்காப் புகழையும், குன்றாக் கீர்த்தியையும் பெற்ற மத்திய மாகாணப் பட்டணம் இதுவன்றோ! வானை அளாவி நிற்கும் பலவர்ண மலைகளுக்கிடையே வீற்றிருக்கும் இவ்வியற்கைச் செல்வி, செயற்கை அணிகலனும் பூண்டு பார்ப்போர் உள்ளத்தைப் பரவசப் படுத்துகிறாள்.

எங்கு நோக்கினும் பிரகாசத் தோற்றங்களும், கண்ணுக்கினிய காட்சிகளுமே காணப்படும். மெய்க் காவலரைப்போல் நாலு பக்கங்களிலும் சூழ்ந்து நிற்கும் உயர்ந்த குன்றுகளிலிருந்துபார்க்கும்போது, இந்நகரின் வதன லாவண்யத்தை நன்கு அறியலாம். நகரத்தின் மத்தியிலிருக்கும் குளத்தின் மேற்குக் கரையிலிருந்து மேலே செல்லும் வழியாகச் சென்றால், கீழே ஒரு மைதானம் தோன்றும். இம் மைதானம் முன்னொரு காலத்தில் ஒரு குளமாக இருந்தது. இதன் கொடூர

மான தண்ணீர்தான் துர்ப்பாக்கியசாலிகளாகிய எகலப் பொலாவின் மனைவி மக்களை உண்டு ஏப்பமிட்டது. ஆனால் இப்பொழுதோ கருணையற்ற கரைகள் தக்க வாறு தண்டிக்கப்பட்டு, சின்னபின்னமாகிவிட, குளம் மறைந்து, சாயங்கால வேளையில் சிறுவர்களும், வாலிபர் களும் பந்தாடும் மைதானமாக மாறிவிட்டது.

குண்டுமலை என்னும் புன்முறுவல் செய்யும் பூங்கா வனம் இதனருகில் இருக்கிறது. இவ்விடத்தில் எக் காலத்திலும் நறுமணங் கமழும் பலவர்ண மலர்கள் பூத்திருக்கின்றன. மத்தியில் ஒரு நீர் ஊற்று சதா தூவானமிட்டுக் கொண்டிருக்கிறது. நாலா பக்கங்க ளிலும் ஓங்கி வளர்ந்திருக்கும் விருட்சங்கள்; இடை இடையே அமர ஆசனங்கள்; அங்கே உலாவ வரும் ஆடவர் பெண்டிர்; மரங்களில் பறவைகளின் இன்னிசை; கீழே குழந்தைகளின் மழலைச் சொற்கள்— இவை என்றும் அனுபவிக்கக் கூடியவை. இங்கிருந்து பார்க்கும்போது, கட்டிடங்களுக்கிடையே மரங்கள் ஆங் காங்கே ஓங்கி வளர்ந்திருப்பதால், முழு நகரமும் ஒரு நந்தவனம் போலவே தோன்றுகிறது.

நந்தவனத்துக் கருகில் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கத்தால் உண்டாக்கப்பட்ட தெப்பக்குளம் இருக்கிறது. இரண்டு மைல் சுற்றளவுள்ள இக் குளத்தின் மத்தியில் ஒரு சிறு அலங்காரத் தீவு அலைகளின் மேல் மிதப்பது போல் தோன்றும். குளத்தின் ஒரு புறத்தில் ஓர் அடர்ந்த காடு; காட்டின் கீழ் புறத்தில் அரச மாளிகை; அதனரு கில் இலங்கையின் பிரதானமான பௌத்தக் கோவில். "தலதா மாளிகாவ," வருஷந்தோறும் லட்சக்கணக் கான பௌத்தர்கள் வந்து புத்தரின் பல்லைத் தரிசனம் பண்ணும் சந்நிதானம். தாமரை வடிவான இதன் கூரையும் ஸ்ரீ விக்ரமனால் கட்டப்பட்டதே. ஹிந்து

தேவாலயங்களும், மகமதியப் பள்ளிகளும், கிருஸ்துவச் சர்ச்சுக்களும் இருப்பதனால் எல்லா மதத்தினரும், எல்லா ஜாதியினரும், இங்கு குடியேறியிருக்கின்றனர்.

கண்டிக்கு ஒரு தனிக்கௌரவம் உண்டு. இலங்கைச் சரித்திரத்தில் இவளுக்கும் பெரும் பேருண்டு புகழுண்டு, மாட்சியுண்டு, மானம் காத்த மதிப்புண்டு, கடற்கரைப் பிரதேசங்கள் அந்நியர் ஆதிக்கத்துக் குட்பட்ட பிறகும், போர்ச்சுக்கீசியர் போர் தொடுத்த போதிலும், டச்சுக்காரர் படையெடுத்த போதிலும், கடைசிவரை கண்டி மக்கள் கலவரமின்றிச் சுதந்திர தேவியைப் பூஜித்து வந்தனர். போர்ச்சுக்கீசியர் கையில் பொம்மை ஆட்டம் போட்ட 'டோனு இத்தரினு' என்னும் கத்தோலிக்க மாதுக்கு, இவ் வணிகர் மகுடஞ் சூட்டி, அரசநிழலில் அமர்த்தி அதிகாரஞ்செலுத்தலாம் என்று எண்ணிய எண்ணம் சின்னுபின்னமானது இத் திருநகரிலே. மறுபடியும் பகற்கனவாய் முடிந்தது அஜவேடோவின் ஆவேசம்; தவிடு பொடியாகினர் டிசாவும் அவன் சேனையும். கண்டி நகரம் கலங்கவில்லை, கவலையுறவில்லை, வீரர்வாழும் மேன்மை நாடு வீழ்ச்சியடையவில்லை; வல்லமையுடைய ஆங்கிலேயர் கூட 18 ஆண்டுகள் வரை படை எடுத்தும் பயன்பெறாது வருந்தினர், மேஜர்டேவியின் சேனை தான் நாசமாயிற்று. இந் நிலைமையிற்றான், சூழ்ச்சியின் காரணத்தால் கண்டி நகரின் ஒற்றுமை குலைந்தது, பலம் குறைந்தது, அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டது.

அன்று தமிழரும் சிங்களவரும் வேற்றுமையின்றி வாழ்ந்ததாலும், இலங்கையர் இந்தியர் என்றவித்தியாசமின்றிச் சகோதரத்துவம் நிலவியிருந்ததாலும், ஆங்கிலேயர் முயற்சி ஒன்றும் பலிக்கவில்லை. ஆனதால் எவ்விதத்திலாவது சிங்களவரையும், இந்தியரையும்

பிரித்து விட்டால் தங்கள் காரியம் சித்தியாகுமென்ற நோக்கத்துடன், பேராசையால் பிடிக்கப்பட்ட சிலரை அரசனுக்கு விரோதமாக ஏவி விட்டனர். "அரசன் அநீதியின் அரம், சூதின் சொரூபம், கொடூரத்தின் குறிக்கோள்" என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டனர். சில நாட்டுமக்கள் எதிர்பார்த்த வண்ணம் ஏமாற்ற மடைந்தனர். எகலப்பொலா என்ற முதல் மந்திரியே அரசனுக்கு விரோதியானன். விக்ரம ராஜசிங்கத்தின் நற்குணங்களையும், நற்செயல்களையும் மறந்து, சிலர் கேவலமான வழியில் தூற்றவும், துரோகம் செய்யவும் ஆரம்பித்துவிட்டனர். எவ்வரசன் ஜனங்களின் நன்மைக்காக இரண்டு மைல் சுற்றளவுள்ள குளத்தை அமைத்தானே, தலதா மாளிகாவைப் புதுப்பித்துப் பௌத்தத்தை வளர்த்தானே, அவ்வரசனையே பிரஜைகள் கடிந்து வெகுண்டனர்; எதிரியை எதிர் கொண்டழைத்துக் குதூகலித்தனர், கும்மாளம் போட்டனர், கும்பிடவும் செய்தனர். கைவிடப்பட்ட அரசன் கைதியானன். வஞ்சித்தவர் வருந்தும் காலமும் வந்து விட்டது. பிரிட்டிஷ் கொடியாகிய யூனியன் ஜேக் கம்பீரத்துடன் பறக்கவிடப் பட்டது. சிங்கள ஆட்சி என்று இதுகாறும் புகழ் பெற்று வந்த சுய ஆட்சி சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, அடியுடன் அழிந்து மண்ணுக்கிரையாகி மறைந்தது. கி. பி. 1815-ம் வருஷத்தில் சுதந்திர விளக்கு அணைந்தது. அரசனுகலாம் என்று எண்ணிய எகலப் பொலா தன் தாய் நாட்டில் இறக்கும் பாக்கியம் கூடப் பெருதவனுய் நாடு கடத்தப் பட்டான்.

எங்கு பார்த்தாலும் முந்திய சிற்பிகளின் ஓவியங்களும், வேலைத் திறமையுமே தென்படுகின்றன. என்னென்ன சிறந்தவை என்றும், உபயோகமுள்ளவை என்றும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றனவோ, அவை

யர்வும் இந்திய மன்னரால் உண்டாக்கப்பட்டவைதான். நம் மூதாதையரின் மூலதனத்தைக் கண்டும் நாம் ஏன் இன்னும் மடையர்களாக இருக்க வேண்டும்? சிங்கள வம்சத்தின் கௌரவத்தைக் காப்பாற்றிவந்த இந்திய மன்னர் ஆண்ட இந் நகரில் இன்றைக்கும் அரசமாளிகை இருக்கிறது, அரசனில்லை. தேவாலயங்களில் தெய்வங்களும் இல்லை போலும்! கண்டியைக் கோவில் கொண்ட சுதந்திர தேவியும், தான் பாதுகாத்து வந்த மன்னனைச் சதி செய்து வீழ்த்தியதனால், தன் தவப் புதல்வனோடேயே புறப்பட்டுப் போய்விட்டாள் போலிருக்கிறது.

வருடந்தோறும் "பெரஹரா" என்ற உற்சவம் இங்கு நடைபெறுகிறது. இலங்கையின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் லட்சக் கணக்கில் ஜனங்கள் வேடிக்கை பார்க்க வருகின்றனர். பதினைந்து நாட்கள் வரை கண்டி நகரின் சிறப்பையும், கூட்டத்தையும், கண்டோர் வியப்படையத்தான் வேண்டும். மேள தாளத்துடனும் ஆடல் பாடலுடனும், ஆயிரம் பந்தங்கள் அந்தகாரத்தை அகற்ற, ஐம்பது முதல் நூற்றுக்கு மேலான யானைகளும், தலைவர்களும் வீதிவீதியாகப் பவனி வருவதைக் கண்குளிரக் கண்டும், புத்த பகவானின் பல்லைப் பக்தியுடன் வணங்கியும் அகமகிழுகின்றனர் எண்ணற்ற ஜனங்கள். முற்காலத்தில் வீரப்போர் புரிந்து, வீரரில் வீரரென வியந்து பேசக்கூடிய பராக்கிரமச் செயல்கள் செய்த உத்தமரையும், பௌத்தத்தை வளர்த்தவர்களையும் கௌரவிக்கவே இவ் விழா கொண்டாடப் பட்டது. இதுவும் இந்திய நாகரிகத்தின் ஒரு சின்னமே.

இவ்விதம், பேச்சு, நடை, உடை, பார்வை யாவும் இந்திய மயமாக இருந்தும், சிற்ப சித்திர வேலைகள், கலை, கவிதை, கட்டிடங்கள், மதம், பூஜை, நாட்டியம்

யாவும் அரசன் உட்பட இந்தியரின் பிரதிபிம்பமாக இருந்தும்,பாரத இரத்தமேசிங்களவர், தமிழர் இருசாரார் நரம்பிலும் ஓடிக்கொண்டிருந்தும், ஏன் சில சமயங்களில் தன்னை மறந்து தடுமாறுகின்றோம், பிரச்னைகளை எழுப்பிவிடுகின்றோம், இந்தியர் பரதேசிகள் என்றும், சிங்களவர் நாட்டுமக்கள் என்றும் அர்த்த மற்று ஆவேசத்துடன் பேசிவிடுகின்றோம்? இவ்விதப் பிணக்குகளாலும், பிரச்னைகளினாலுந்தான் நம்மனோர் சீரிழந்தனர், சிறப்பிழந்தனர், மதியிழந்தனர், மானத்தையும் இழந்து அடிமைகளாகினர். இலங்கையரும் இந்தியரும் இரத்தத்தின் இரத்தம், எலும்பின் எலும்பு, நரம்பின் நரம்பு என்பதை நன்குணர வேண்டும். இலங்கை ஒரு மாலையில் தொங்கிக் கொண்டிருக்கும் பதக்கம் போன்றது. பதக்கமின்றி மாலையிருக்கலாம், ஆனால் மாலையின்றிப் பதக்கமிருக்க வழியில்லை; இதிலிருந்தும், சரித்திரத்திலிருந்தும், இந்தியாவின் உதவியின்றி இலங்கைக்கு விடுதலை இல்லை, மீட்சியில்லை, மறுமலர்ச்சியில்லை என்பது புலனாகின்ற படியால், சிங்களவரும், இந்தியரும், குருட்டெண்ணங்களை அறவே ஒழித்து விட்டுச் சகோதரத்துவம் நிலைநாட்டவேண்டும். அப்பொழுதுதான் கண்டி யரசி முன்போலச் சுதந்திர ஜோதியுடன் ஜொலிப்பாள்; இலங்கை விடுதலையடைந்து இள நங்கைபோல் புன்முறுவல் செய்து இன்னிசை பாடுவாள்; நாமும் இன்பக்கடலில் மூழ்கி, உலகத்தாரால் மனிதரென மதிக்கப்பட்டு, மகிழ்ச்சியடைவோம்.

# புதுமுறைக் கல்வி

மு. அருணாசலம்

**ந**ம்முடைய ஆயுட்காலத்திலேயே பயங்கரமான இரண்டு உலக யுத்தங்களைப் பார்த்து விட்டோம். பண்டை இதிகாசங்களிலும் புராணங்களிலும், ராக்ஷதர்கள் செய்த கொடுமை என்பதாகப் பயங்கரமான பல வருணனைகளைப் படித்திருக்கிறோம்; 'தேவாசுர ராமாயண மாபாரதப் போர்கள்' என்றெல்லாம் கவிஞர் புனைந்து பாடக் கேட்டிருக்கிறோம். ஆனால், இன்று முடிந்துள்ள யுத்தத்தைப் பற்றி, நாம் கண்ணால் கண்டவற்றையும் பத்திரிகையில் படித்தவற்றையும் ரேடியோவில் கேட்டவற்றையும் எண்ணிப் பார்க்கும் போது, பழங்கதைகளில் கூறப்பட்டுள்ள கொடுமை மிக மிக அற்பமென்றே சொல்லத் தோன்றுகிறது. பண்டைய யுத்தத்தில் தோற்றவருக்குத் தான் துன்பமேயொழிய, வென்றவருக்கு நன்மையுண்டு. ஆனால், இன்றைய யுத்தமானது, தோற்றவர் வென்றவர் இருவரையும் பெருந்துன்பத்தில் ஆழ்த்தியிருப்பதைக் கண் முன்னே கண்டுவருகிறோம்.

சென்ற ஐந்தாறு வருஷங்களாக நடந்து வந்த உலக யுத்தம் முடிவடைந்த போது, இந்தியச் சுதந்திர யுத்தமும் ஒருவகையாக முடிவடைந்திருக்கிறது. நம் நாடு சுதந்திரம் அடைந்து விட்டது என்று சொல்லத் தக்க நிலைமையை நாமும் அடைந்திருக்கிறோம். பெரும் போரில் ஈடுபட்டு, ஒன்றை யொன்று அழித்துக் கொண்டு வந்த நாடுகள் யாவும், சுதந்திரத்தோடு

வாழ்ந்த நாடுகள்; அடிமை நாடுகள் அல்ல. ஆதலால், சுதந்திரம் அடைகிற தருணத்தில் நம்முடைய பொறுப்பு மிகவும் பெரிதாகிறது. அந் நாடுகளின் நிலையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாகிறோம்; அவை சென்ற வழியில் நாமும் சென்று ஒருவரை யொருவர் மாய்த்துக்கொள்வதில் திறமைபெறுவதை விட்டுவிட்டு, வேறுவழியைக் கடைப்பிடிப்பதுடன், இதன் மூலம் நம் மிடையே இன்பத்தைப் பெருக்கவும், எல்லா நாட்டு அறிஞர்களும் கனவு கண்டுவந்த பரலோக சாம்ராஜ் யத்தை இந் நிலவுலகில் நிலைநாட்ட முயலவும் வேண்டும். நமது சுதந்திரத்துக்குப் பொருள் உண்டென்றால், பயன் ஏதேனும் உண்டென்றால், அது இந்த முயற் சிக்குத் துணை செய்வதும், இதில் நம் மனம் செலுத்து வதுமேயாகும்.

உலகத்தில் எந்தக் காரியத்தையும் போல, இந்தக் காரியமும் சொல்வது எளிது, செய்வது தான்கடினம். அடிமைத்தனம் என்ற கொடிய தளையானது இது வரை நம்மைப் பிணித்து வைத்திருந்தது; இன்று நாம் சுதந்திரம் பெற்று விட்டாலும், அதன் பொருளை உணர்வது கஷ்டம்; உணர்ந்து அடிமை போலன்றிச் சுதந்திரமாக எண்ணுவதும் செய்வதும் மிகவும் கஷ்டம்.

சில முரட்டு மாடுகளை நாம் பார்த்திருப்போம்; வயலிலுள்ள பயிரையெல்லாம் மேய்ந்துவிடும்; வேலியை யெல்லாம் ஒரே தாண்டாய்த் தாண்டி விடும். இப்படிப் பட்ட மாட்டின் கொட்டத்தை அடக்க வேண்டி, மாட்டுக் காரன் இதை 'அண்ணுந்தாள்' போட்டு மேயவிட்டிருப் பான். அதாவது, மாட்டின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி, அதைமுன்காலொன்றில் நெருக்கிப் பிணித்திருப் பான். இவ்விதம் பிணிக்கப்பட்ட மாடு, தலை நிமிர்ந்து பார்க்க முடியாது; புல் வெளியா, வயலா, வரப்பா

என்று கண்டறிய முடியாது, தாண்டுவதால், வேலி எவ்வளவு உயரம் என்று தெரிந்து கொள்ள முடியாது. பார்க்கவே முடியாதபோது, தாண்டுவது எப்படி? தலையைத் தூக்கி வேகமாய் அடியெடுத்து வைக்க முடியாது. மேயும் போதெல்லாம் இவ்விதம் அண்ணாந் தாள் போட்டு விட்ட மாடு, எவ்வித உற்சாகமும், உரமும், சுதந்திரமும் இன்றிச் சுற்றிச் சுற்றி மேய்ந்து வரும்; அதன் கொட்டமெல்லாம் அடங்கி விட்டிருக்கு மென்பது உண்மை. இரண்டு வருஷம் இப்படித் தளை யிட்டு மேய விட்ட மாட்டை, பின்னர் ஒரு நாள் மாட்டுக் காரன் தளையவிழ்த்துச் சுதந்திரமாய் மேய விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது மாடு எப்படியிருக்கும்? நிமிர்ந்து நடக்குமா? ஓடுமா? பாயுமா? தாண்டுமா? ஒன்றும் செய்யாது. குனிந்து குனிந்து, நொண்டி நொண்டித்தான் நடக்கும். நெடுங் காலம் வளைந்திருந்த கழுத்து நிமிராது. பார்வை கீழ் நோக்கித்தான் இருக்கும். 'ஏறு போற் பீடு நடை' என்று சொல்கிற நடை இருக்கிறதே, இந்த நடை நெடுங்காலம் வரை இம் மாட்டுக்கு வரவே வராது.

இப்படி அண்ணாந்தாள் போட்ட மாட்டின் நிலையில் தான் நாற்பது கோடி இந்திய மக்களான நாம் இருக் கிறோம். ஏகாதிபத்தியக் கொடுங்கோல் நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் பெருந்தளையைப் போட்டி ருந்தது; கழுத்தையும் காலையும் சேர்த்துக் கட்டி, முதுகிலும் பெரும்பாரத்தை ஏற்றி வைத்திருந்தது. குனிந்து குனிந்து நொண்டி நொண்டி நடந்து தான் நமக்குப் பழக்கமாகியிருக்கிறது. நம்மில் எந்த அறி வாளியும் அரசியல் வாதியும், கல்வியாளரும், இதற்கு விலக்கானவரல்லர். எல்லோருடைய அறிவும் செயலும் இதுவரையில் தளைபட்டிருந்தது. தளையின் இறுக்கம் காரணமாக, நாம் இதுவரை எதையும் சுதந்திரமாகச்

சிந்திக்க முடிந்ததில்லை. செய்ய முடிந்ததில்லை. இப்போதுதான் தளை நீங்குகிறது. ஆயினும், நம் தலை நிமிர்வது எளிதான காரியமன்று; சுதந்திரமாக நினைத்துப் பார்ப்பதும் எளிதான காரியமன்று. முதுகிலிருந்த அழுத்தின பாரத்தை மறப்பதும் எளிதன்று. ஆயினும், நாம் மறக்க வேண்டியதை மறக்கவும், சிந்திக்க வேண்டியதைச் சிந்திக்கவும் முயலத்தான் வேண்டும்.

இந்த முயற்சிக்கு முதலாவது வேண்டியது பயிற்சியாகும். தளைபட்டிருந்த கையும் காலும் தளை நீங்கியதை உணர்வதாயின், நாம் கையையும் காலையும் உதறிக் கொண்டு கையை வீசித் தலை நிமிர்ந்து நடந்து பார்க்க வேண்டும்; ஓடிப் பார்க்க வேண்டும், மற்றவர்கள் ஏளனம் செய்வார்களோ என்று அஞ்சக் கூடாது. இவ்விதம் சுதந்திரமாகப் பழகிப் பார்க்கிற பயிற்சிதான் கல்வி என்று சொன்னால் குற்றமில்லை. எனவே, இக்கல்வியின் முதல் நோக்கமானது நமது இன்றைய நிலைமையைப் பொறுத்த வரையிலேனும், தளைபட்ட உடலுக்கும், உள்ளத்துக்கும், அறிவுக்கும், புலன்களுக்கும் தளை நீங்கின சுதந்திர உணர்ச்சி தருவதாயிருக்கவேண்டும்.

நம் நாட்டில் கல்வி இன்று எந்த நிலையிலிருக்கிறது? எந்த நோக்கம் கொண்டிருக்கிறது? இத்தகைய உணர்ச்சி தருவதாயிருக்கிறதா? இந்திய நாட்டில் எழுத்து வாசனையுடையோர் தொகை நூற்றுக்குப் பன்னிரண்டு விதமிருக்கும்; எழுத்து வாசனையே இல்லாதோர் நூற்றுக்கு எண்பத்தெட்டுப் பேர் என்பது முதலான புள்ளி விவரங்கள் எல்லோரு மறிந்தவை; இவற்றை இங்கு அதிகம் விவரிப்பது அவசியமில்லை.

வயிற்றுக்கு இல்லாமல், பிழைப்புத்தேடி இந் நாட்டில் வியாபாரம் செய்ய வந்த சாமானிய மக்களான ஒரு சிறு வர்த்தகக் கூட்டத்தினர், மிகச் சுருங்கிய காலத்தில், உணவும், செல்வமும், அறிவும் ஒப்பற்ற நாகரிகமும் ஓங்கி இருந்த இந்த நாட்டை அடிமைப் படுத்திவிட்டார்கள். அடிமைப்படுத்தியதில் அவர்களுடைய முதல் நோக்கம், தங்களுடைய வயிற்றுப் பசிக்கு வழி தேடுவதுதான். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு எக்காலத்திலும் இடையூறு ஏற்படக் கூடாதென்ற முன்னெச்சரிக்கையோடு இவர்கள் செய்த திறமையான காரியம், இந் நாட்டுப் புராதனக் கல்வியை அடியோடு ஒழித்து, தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டத் தக்க அடிமைக் கல்வியைப் புகுத்தியதாகும்.

கிழக்கிந்திய வர்த்தக் கம்பெனியார் இந்நாட்டில் தொடங்கிய வியாபாரத்தைப் பெருக்கவும், கைப்பற்றிய பிரதேசங்களைக் கட்டி ஆளவும் தலைப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்கமானது, இந் நாட்டின் செல்வத்தைக் கொள்ளையடிக்கும் தொண்டில் தனக்கு உதவிபுரிய இந்தியப் பட்டாளமொன்றைத் திரட்டிக் கொள்ள வேண்டுமென்பதை முதன் முதலாக உணர்ந்தது. உணர்ந்து, இந்தப் பட்டாளத்துக்கு இருக்க வேண்டிய தகுதி ஆங்கில மொழியறிவு என்பதாக விதித்தது. விதித்த மாத்திரத்தில், நம் முதாதையர் போட்டி போட்டுக்கொண்டு ஆங்கிலம் கற்கவும், கற்று இந்தக் கொள்ளைப் பட்டாளத்தில் அங்கம் வகிக்கவும் பெருந் தொகையாக வந்தனர். இப்படி முன்வந்தோர் தொகை பெருகப் பெருக, இவர்கள் ஆங்கில மொழியறிவைச் செம்மையாகப் பெறுவதற்கு ஏற்பாடு செய்வது, பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் அதன் கையாளாயிருந்த இந்திய அரசாங்கத்துக்கும் அவசியமான கடமையாக

ஆயிற்று; இது கடமை மட்டுமன்று; பிரிட்டிஷாரின் வியாபார வெற்றிக்கு அவசியமான ஓர் அங்கமுமாகும். காலக் கிரமத்தில் இவ்வங்கத்தை விரித்தும் பெருக்கியும் வகைப்படுத்தியும் வைக்கவே, இதற்குக் கல்வி என்ற பெயர் உண்டாயிற்று.

இந்த விஷயத்தை நாம் மறக்கலாகாது. பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த இந்தக் கொடைக்குப் பெயர் கல்வி. ஆனால் இது நம் நாட்டு மக்களில் யாருக்கும் கல்வி தரவில்லை; அதாவது, அறிவு உண்டாக்கவில்லை; அறியாமையைப் போக்கவில்லை. நேற்று வரையில் என்ன பிரசாரத்தை நாம் கண்டோம்? நம் பிள்ளைகள் படித்த பாடப் புத்தகங்களில் பிரிட்டிஷ் ஆட்சியால் விளைந்த நன்மைகள் என்று ஒரு நீண்ட அத்தியாயம் இருக்கும். பிரிட்டிஷார் இங்கு ரயில் போட்டார்கள், தபால் தந்தி வைத்தார்கள் என்று சொல்லிவிட்டு, 'இந்தியாவில் பிரிட்டிஷார் கல்வி பரப்பினார்கள்' என்று தனியாக ஒரு புகழ் மாலையும் சூட்டியிருக்கும். உண்மை என்ன? இந்தக் கல்வி என்பது அறிவு தரும் சரக்கன்று; அறியாமையைப் போக்கும் சரக்கும் அன்று. இந்தியச் செல்வத்தைச் சுரண்டும் வேலையில், பிரிட்டிஷ் அரசாங்கமாகிய ஒரு வர்த்தகக் கூட்டத்துக்கு, ஒரு தரகர் பட்டாளம் வேண்டியிருந்தது. இதற்குத் தகுந்த பயிற்சிச் சாலைகள் ஏற்படுத்தி, பிரிட்டிஷார் இந்தத் தரகர் பட்டாளத்தைத் தயார் செய்து கொண்டார்கள். ஆனால் நம்மவர் கண்களில் மண்ணைத் தூவும் பொருட்டு இத் தரகர்களுக்குத் தந்த பயிற்சியைக் கல்வி என்றும், இப் பயிற்சிச் சாலைகளைக் கல்விச் சாலைகள் என்றும் அவர்கள் கூறினார்கள்; அப்பாவிகளான நம்மவர்கள்—

அறிவாளிகள், அரசியல் வாதிகள், கல்வியாளர் ஆகிய எல்லோருமே—இதை அப்படியே ஒப்புக்கொண்டார்கள்.

இப்படிப்பட்ட 'கல்வி' தான் நம் நாட்டில் நூறு வருஷத்துக்கு மேலாக நடைபெற்று வந்திருக்கிறது. மேலே சொன்ன காரணங்களால் இதைக் கல்வி என்று சொல்ல முடியாது என்பது தெளிவு. என்னென்ன கற்பித்தால், எப்படி எப்படிக் கற்பித்தால், தங்கள் சுரண்டல் கொள்கைக்கு அனுகூலமாயிருக்குமோ அதைக் கற்பிக்கவே பிரிட்டிஷார் ஏற்பாடு செய்து வந்தார்கள். அந்தக் கல்வி நம் நாட்டுப் பிள்ளைகளின் தேவையைக் கவனிக்கவில்லை, பொருட்படுத்தவுமில்லை; பிரிட்டிஷாரின் லாபம் ஒன்றையே கருதியது. அதிகமாய்ப் போனால் இங்கிலாந்தில் வழங்கிய கல்வியையோ பாடத் திட்டத்தையோ அப்படியே கொண்டுவந்து, நம் பிள்ளைகள் தலையில் சுமத்தி விட்டால் போதுமென்று அவர்கள் எண்ணினார்கள், நம்மவருக்கு ஒரு புராதன நாகரிகம் உண்டு; சிறப்பான பழஞ் சரித்திரம் உண்டு; ஒப்பரிய இலக்கியச் செல்வம், கலைகள் உள்ளன; இந்திய மன்னரின் தேவை வேறுனது என்பவற்றையெல்லாம் அக் கல்வியாளர் சிறிதும்கவனிக்கவில்லை. காரணம், "தொண்டு செய்யும் அடிமை, உனக்குச் சுதந்திர நினைவோடா?" என்ற எண்ணத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

நம் நாட்டில் படிப்பு வாசனையுள்ளவர்கள் பன்னிரண்டு சத வீதம், அல்லது எட்டில் ஒருவர் கூட இல்லை என்றுமுன்னமே குறிப்பிட்டோம். இதற்குக் காரணமும் இப்போது விளங்கும். பிரிட்டிஷார் வழங்கிய கல்வியானது, பிரிட்டிஷ் தரகர்களை, அதாவது தரகர்

5

பட்டாளத்தைத் தோற்றுவிக்கும் கல்வி என்று சொன்னேம். எந்த வியாபாரத்திலுமே தரகர் தொகை குறைவாய்த்தான் இருக்க முடியும். வியாபாரி ஒருவன், தரகன் நான்குபேர்; இத்தரகரிடம் பலியாகிற சாதாரண மக்கள் நாலாயிரம் பேர் என்ற விதத்தில் தான் சமூகம் இருந்து வருகிறது. ஆதலால், தங்கள் வியாபாரம் ஓங்குவதற்கு முயன்றுவந்த பிரிட்டிஷார், இந்த விதத்தை அப்படியே வைத்துவரத் தங்களாலானது செய்துவந்ததில் வியப்பில்லை, மக்கள் எல்லோரும் கல்வியறிவு பெறவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஒருகாலத்திலும் இருந்ததில்லை; இருக்கவும் முடியாது; இருந்தால், அதாவது எல்லோரும் கல்வியறிவு பெற்றுல், அவர்களுடைய ஏகாதிபத்தியச் சுரண்டல் நடைபெறுவது சாத்தியமில்லை யல்லவா?

இப்படியாக, கல்வி என்ற இந்த 'நன்மை' பிரிட்டிஷ் ஆட்சியால் விளைந்தபோதிலும் நம்மவர்களில் அறிவாளிகள் சிலருக்கு இது பிடிக்கவில்லை. இதில் அவர்கள் குறைகாண ஆரம்பித்தார்கள். காணும் குறைகளை நிவர்த்திக்க வேண்டி, அவ்வப்போது அக் கல்வி முறையில் நெடுகிலும் சீர்திருத்தங்கள் என்று கருதுகிற சொற்ப மாறுதல்கள் செய்யப் பெற்றன. கல்வி முறையின் மூல தத்துவமும், மூல உருவமும் மாறவில்லை; திருத்தங்கள் மாத்திரம் சேர்ந்தன. இப்படிச் சேர்ந்து வந்துள்ள ஒரு கல்வி முறைதான் இன்னும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. நம்கல்வியாளர்களும் இதைத்தான் கடைப்பிடிக்கிறார்கள், அரசாங்கங்களும் இதைத்தான் கடைப்பிடிக்கின்றன. இதன் உண்மையான சொரூபம் குடு குடுப்பாண்டியின் சட்டையொத்ததுதான்.

குடுகுடுப்பாண்டிக்கு யாரோ ஒருவர் வெள்ளை நிறத்தில் ஒரு சட்டை கொடுத்தார். கொடுத்த சட்டை கிழிசல்தான். கையில் ஒரு கிழிசல்; அதற்கு அவன் ஒரு சிவப்புப் புடவைத் துணியை ஒட்டுப் போட்டான். பை கிழிந்தது; ஒரு பச்சைத்துணி ஒட்டு. கழுத்தில் ஒரு நீலத்துணி ஒட்டு. முதுகில் ஒருகோடுபோட்ட கருப்புத் துணி ஒட்டு. இப்படியாக, சட்டை முழுமையும் ஒட்டு ஒட்டாயிருக்கிறது. அதில் இல்லாத நிறமில்லை, புள்ளி யில்லை, கோடில்லை, பூ வில்லை; ஆனாலும் அவன் அதைத் தன் சட்டையென்று சொல்லத் தயங்கவில்லை. சட்டை யென்று அதை ஒப்புக்கொள்ள நாம்தான் தயங்குகிறோம்.

நம் பள்ளிக்கூடங்களில் இன்று வழங்கும் கல்வி முறையும் இக் குடுகுடுப்பாண்டியின் சட்டையொத்தது தான். இந்திய ஏழை மக்களின் செல்வத்தைச் சுரண்டு வதற்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்திய மண்ணில் வேரூன்றச்செய்வதற்கும் என்றே தோன்றிய கல்வி முறையில், நம்மவர் சிலருடைய முயற்சியால், இந்திய சரித்திரம், உடற் பயிற்சி, தாய் மொழி என்பன முதலான சிற்சில பாடப்பகுதிகள் ஆங்காங்கு பொருத்தமில்லாமல் சேர்க்கப்பட்டு, கல்விமுறை முழுமையும் ஒரு தொகுப்பாகப் பார்க்கும்போது, குடுகுடுப்பாண்டியின் சட்டை போலத்தான் காட்சி தருகிறது.

ஆனால், விசித்திரமென்ன வென்றால், இது குடு குடுப்பாண்டியின் சட்டைதான் என்பது நம் கண்ணில் படுவதில்லை. ஏனென்றால் நாமே இங்கு குடுகுடுப் பாண்டியின் சட்டை போட்டு வளர்ந்தவர்கள் ; நாமும் இந்தக் கல்வி முறையில் தோய்ந்து இந்த அடிமைத் தளையில் பிறந்து வளர்ந்துவந்த காரணத்தால், சுதந்திர

மாக ஒன்றை ஆராயவும் நம் மனம் செல்வதில்லை. தவிர, நம் கருத்து வளர்ச்சிக்குரிய கருவி நூல்கள் யாவும் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் பிரிட்டிஷார் தந்த கொடைதான். அண்ணாந்தாளை அவிழ்த்துவிட்ட பிறகுங்கூட மாடு குனிந்தேதான் நடக்கிறது; இனிக் கட்டில்லை, நிமிர்ந்து நடக்கலாம் என்ற உணர்ச்சி அதற்கு வருவதில்லை. அதேபோல நேரே ஒன்றைச் சிந்திக்கும் பழக்கம் நமக்கு வராதது மட்டுமன்று, நம் பார்வையே கோணல் என்ற உணர்ச்சியும் நமக்கு வராது என்று சொன்னால் தவறில்லை.

இது ஒருபுறமிருக்க, இந்தக் கல்வி யவ்வளவும் இதுவரையில் தாய் மொழி யல்லாத ஆங்கில மொழி மூலமாகவே போதிக்கப் பெற்றமையால், எதிலும் நாம் உண்மையை உணர முடிந்ததில்லை; கல்வியானது வாழ்க்கையோடு இவ்விதம் தொடர்பற்றுப்போனமையால், நம் வாழ்க்கையும் உண்மையை விட்டு விலகிப் போலி யாகிவிட்டது. உண்மை வாழ்க்கை வாழ்கிற ஏழை விவசாயி மக்கள் முதலானோருக்கும் நமக்கும் இடையில் எவ்வளவோ பிளவு ஏற்பட்டு விட்டது; அவர்கள் வாழ்க்கையை, அவர்கள் சுகதுக்கங்களை, அவர்களுடைய லக்ஷ்யத்தை, உள்ளத்தின் ஏக்கத்தை நாம் உணர முடிவதுமில்லை, உணர நாம் முயன்றது மில்லை. இவ்விதம் இக் கல்வி முறை நம் நாட்டிலும், நம் வீட்டிலுமே நம்மை அன்னியராக்கி விட்டது.

கல்வி என்பது உண்மையில் இன்று நாம் பாடசாலைகளில் காண்கிற எழுத்துப் படிப்பன்று. எழுத்துப் படிப்பு கல்விக்கு ஒரு கருவி; அவ்வளவு தான். எழுத்துப் படிப்பினும் வேறானது கல்வி என்று கூறும்போது, குழந்தையினிட முள்ள மனிதப் பண்புகள்—உடல் உள்ளம் உயிர் என்ற மூன்றின் பண்புகளும்

கிரமமாக வளர்ந்து பூரண விளக்கம் பெற்றுப் பொலிவதையே நாம் கருதுகிறேம். இத்தகைய பொலிவு இன்றையக் கல்வி முறையில் எங்கும் பிறப்பதில்லை என்பதைக் கல்வியாளர் அனைவரும்—கல்வித் துறையில் சிறிது சிந்தனை செய்தோர் அனைவரும் ஒப்புக்கொள்கிருர்கள். ஆனல் பெரும்பான்மையோர் இன்றுள்ள கல்வி முறை பயனற்றது என்று தெரிந்தும் அதைக் கைவிடத்தான் தயங்குகிருர்கள். குடுகுடுப் பாண்டியின் சட்டைபோல, எப்படியேனும் இதில் ஒட்டுப் போட்டுச் சீர்திருத்தம் பண்ணி இதையே வைத்துக்கொள்ளலாம் என்று தான் அவர்கள் நினைக்கிருர்கள். காரணம், அண்ணுந்தாள் போட்ட மாட்டின் நிலைமை தான்.

நம் நாடு சுதந்திரம் பெறுகின்ற இன்றைய நிலையில், அறிவாளிகள், கல்வியில் ஆர்வ முள்ளவர்கள் அனைவரும் அதுபற்றித் தீரச் சிந்திக்கவேண்டும்; கண்மூடித்தனமாக இது வரையும் போனபோக்கே போவதா அல்லது அடியோடு வேறு வழியில் செல்வதா என்று ஆலோசித்து முடிவு செய்யவேண்டும். இம் முடிவு உடனே ஏற்பட்டால் தான் நாட்டுக்கு விமோசனம்.

காந்தியடிகள் ஏறக்குறையப் பத்தாண்டுகளுக்கு முன்னே இதுபற்றி நன்ருய்ச் சிந்தித்து ஒரு புது வழியைக் காட்டியிருக்கிருர். கல்விப் பயிற்சிக்குப் பாஷை ஒரு கருவி தான். வேறு கருவிகளும் இருக்கின்றன. உழைப்பு என்பது அக் கருவிகளுள் முதன்மையானது. புத்தகப் படிப்பினுல் மூளை திறமை பெறுகிறது, அறிவு விளக்கம் பெறுகிறது என்று புத்தகவாதிகள் சொல்கிருர்கள். புத்தகப் படிப்பினுல் மூளையின் திறமை வளரலாம்; அறிவு விளக்கம் பெறுவது

அவ்வளவு நிச்சயமில்லை. ஆனால், புத்தகப் படிப்பின் மூலம் உடற் பண்புகள் விளக்கம் பெறவில்லை என்பது தெளிவு, உள்ளத்தின் பண்புகளும் விளக்கம் பெற வில்லை; உயிர்ப் பண்புகளைப் பற்றியோ சொல்ல வேண் டாம். ஆனால் உழைப்பின் மூலம் வரும் அறிவு விளக்கம் இவ்வளவு அற்பமானதன்று. இதன் மூலம் உடற் கூறு கள் புலன்கள் யாவும் நன்முயத் தொழிற்பட்டு, உடற் பண்புகள் யாவும் பூரண விளக்க மெய்துகின்றன. புலன்கள் வழி இயங்குகிற மனமும் உள்ளப் பண்புகளும் முழுவிழிப்போடிருந்து பூரண விளக்கம் பெறுகின்றன. இவற்றுக்கு அப்பாலுள்ள உயிர்ப் பண்புகளும் வளர்ச்சி பெறுதல் நிச்சயம். எனவே, இவ்வாறு உடல், உள்ளம், உயிர் ஆகியமூன்றுக்கும் பயிற்சி தந்து, பூரணப் பொலிவு தரவல்ல உழைப்புத்தான் கல்விக் கேற்ற சிறந்த கருவி யாகுமேயன்றி, இன்றுள்ள கறிக் குதவாத வெறும் ஏட்டுப் படிப்பு கல்விக்குக் கருவி யாகாது. நமது லக்ஷ்யம் மேற் கூறியபடி பொலிவு தருகிற கல்வியே யன்றி, வெறும் எழுத்தறிவு அன்று.

கல்வி கற்றல் என்ற சொற்களின் வேராகிய கல் என்ற தாதுவுக்குப் பொருள் தோண்டுதல் என்பதாகும். தோண்டத் தோண்ட மணற் கேணியில் நீர் ஊறுதல் போல, மாந்தர்க்குக் கற்கக் கற்க (கல்லக் கல்ல) அறிவு ஊறவேண்டும். கல்லுதலாவது, மனிதனுக்குக் கடவுள் தந்துள்ள புலன்களைத் தொழிற்படுத்தித் தொழிற் படுத்தி மேலும் மேலும் கூர்மையும் தெளிவும் உண் டாக்கச் செய்தல்; இதுவே கல்வி. வெறும் எழுத்தறிவில் இத்தகைய கல்லுதல் ஏற்படவில்லை. எனவே அது கல்வியுமாகாது.

தவிர, மனிதனுக்கு, வாழ்க்கை லக்ஷ்யமே யன்றி புத்தகம் லக்ஷ்யமன்று; படிப்பேமுடிவான லக்ஷ்யமன்று.

வாழ்க்கையாகிய லக்ஷ்யத்துக்குப் புத்தகப் படிப்பு ஒரு கருவி என்ற அளவில்தான் அதற்கு மதிப்பு. ஆதலால் வாழ்க்கையாகிய லக்ஷ்யத்தை யடைவதற்குச் சிறிதேனும் உதவுகிற படிப்புத்தான் உண்மையான கருவியேயன்றி, மற்றெந்தப் படிப்பும் கருவியாகாது. இன்றுள்ள கல்வியோ, வாழ்க்கைக்கு முற்றும் புறம்பானது. மக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கையில் இன்பத்தையே நாடுகிறார்கள்; துன்பத்தையே வேண்டுமென்று நாடுபவர் யாருமிலர். நாடும் இன்பம் பலதிறப்பட்டதா யிருக்கலாம்; உடல் பற்றியதா யிருக்கலாம், உள்ளம் பற்றியதாயிருக்கலாம், லௌகிக வாழ்வு பற்றியதாயிருக்கலாம்; இதற்கப்பாற்பட்ட ஆன்ம வாழ்வு பற்றியதாயு மிருக்கலாம். எதுவாயிருந்தாலும், உலக வாழ்க்கையில் மனிதன் ஈடுபட்டுள்ள வரையில், ஜீவாதாரமான சில அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாகாத வரையில், வாழ்க்கையில் இன்பம் விளையாது. மனிதராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவருக்கும் உண்பதற்குப் போதுமான உணவு வேண்டும். வெயில், மழை, காற்று முதலியவற்றினின்றும் உடம்பைப் பாதுகாக்க, போதுமான உடைவேண்டும். இருக்க இடம் வேண்டும். உணவு, உடை, இருப்பிடம் என்ற இந்த மூன்றும் இல்லாது போனால், இக வாழ்வில் யாருக்கும் இன்பம் விளையாது. ஆதலால், மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும், இம் மூன்றையும் அல்லது இம் மூன்றினுள் ஒன்றையேனும் தாமே தமக்குத் தேடிக் கொள்ள வல்லவராதல் வேண்டும்; அப்போது தான் ஒருவருடைய இன்பத்துக்கு மற்றவரால் எவ்விதத் திலும் குறைவுநேராது. எப்படி வாழ்க்கையில் எல்லோரும் இன்பம் வேண்டுகிறார்களோ அதே போல, அந்த இன்பத்துக்கு இன்றியமையாத அங்கமான இத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும் அறிந்திருக்க

வேண்டும். இதை அறிவிப்பது தான் கல்வி என்றால் தவறில்லை.

கல்வி மூலம், இந்த ஜீவாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் அறிகிறோம் என்றால், இதற்கான தொழிலை நாமே செய்கிறோம், செய்யக் கற்கிறோம் என்றே பொருள் படுகிறது. இப்படித் தொழில் செய்வதிலும் செய்யக்கற்பதிலும் நம் மனம் ஈடுபடும்போது, நம் புலன்களின் திறன் மிக்க தூண்டுதல் பெற்று வளர்கிறது. இது வளரவளர, புலன்வழித் தொழிற்படும் மனமும், அதன் காரியமாகிய அறிவும் மிக்க விளக்கம் பெற்று வளர்கின்றன. கல்வி என்பது அறிவின் வளர்ச்சியல்லாது வேறென்ன ? எனவே, கல்வி முறையானது நமது வாழ்க்கைக்குத் தேவையான தொழில் செய்ய நமக்குக் கற்பிக்க வேண்டும் ; இதனோடு மற்றொரு புறம், தொழில் செய்யச் செய்ய, நம் அறிவு பெருக வேண்டும், கல்வி வளரவேண்டும். இங்ஙனமாக தொழிலும், கல்வியும், வாழ்க்கையும் ஒன்றோடொன்று அபின்னமாய்க் கலந்து தழுவி நிற்கின்றன.

நமது நாட்டுக்குத் தேவையான புதுமுறைக் கல்வி என்று காந்தியடிகள் கூறுகிற கல்வி முறையின் மூலதத்துவம் இதுவேயாகும். மூளையின்வளர்ச்சிஎன்பது தனியாக இல்லை ; தொழில் செய்வதன் மூலமே அறிவு வளரும் ; செய்யுந்தொழில் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றுக்கேனும் ஒத்ததாய் இருக்க வேண்டும். முழுமனதோடு இத்தகைய தொழில்செய்வது தான் கல்விப் பயிற்சிக்கு அடிப்படையாயிருக்கும். வெறும் புத்தகப் படிப்பு கல்வியன்று; கல்வியின் லக்ஷ்யமுமன்று.

இங்ஙனமாக, சுமார் பத்தாண்டுகளுக்கு மேலாகக் காந்தியடிகள் சொல்லிவந்த புதுமுறைக் கல்வி பற்றிய

கருத்துக்களே, இன்று ஆதாரக் கல்வி என்ற பெயர் பெற்று, நாட்டில் பல மாகாணங்களிலும், சில சுதேச சமஸ்தானங்களிலும் மெல்ல வழக்கத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

மெல்ல வழக்கத்துக்கு வருவது போதாது. கல்வித் துறையினரும் அறிஞர்களும் இந்தப் புதுமுறைக் கல்வியைக் குறித்துத் தீரச் சிந்தித்து வரவேண்டும்.

"செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது
தீதெனக்குப்பல் லாயிரம் சேர்ந்தன
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரம் கோயிலிற் சொல்லுவேன்"

என்று பாரதியார் கால் நூற்றாண்டுக்கு முன்னதாகவே பழைய கல்வி முறையின் கேட்டையும் பயனின்மையையும் பற்றிப் பாடினார். அதே முறையும் அதே நிலையுந்தான் இன்றும் இருக்கின்றன. இது வரையிலும் இப்படியிருந்தது போகட்டும். இனியும் இப்படியிருத்தல் சரியாகாது. சுதந்திரம் பெற்றுப் புதுவாழ்வு தொடங்கப் போகும் நம் நாடு, தனக்கென்று திட்டமான, சிறந்த பயனுள்ள கல்வி முறையை உடனே வகுத்துக் கொள்ளவேண்டும். உடனே வகுத்துக் கொண்டால் நெடுங்காலமாய் நடந்து வந்த சீர்கேட்டைச் செப்பனிட முடியும். இனியும் சோம்பலுக்கு இடங் கொடுத்து விட்டால், சீர்கேடு தொடர்ந்து பெருகும். கல்வித் துறையில் சீர்கேடு பெருகினால், புத்துயிரும் விழிப்பும் கொண்ட புதிய பாரத சமுதாயம் உருவாவது அருமை.

# கவிதையும் விஷயச் சிறப்பும்

கு. அழகிரிசாமி

ஒரு கவியை நல்ல கவி என்று இப்போது என்னென்ன காரணங்களைக் கொண்டு நிர்ணயிக்கிறார்கள்? அப்படி நிர்ணயிப்பவர்களில் எத்தனை விதமான கோஷ்டிகள் உண்டு?—இதை முதலில் கவனிப்போம்:

"நல்ல கவி என்றால் பொருள் செறிந்து இருக்க வேண்டும்" என்பார்கள். மேலோட்டமாய்ப் பார்த்தால் இவர்கள் சொல்வதை உடனே ஆக்ஷேபனை சொல்லாமல் ஒப்புக்கொள்ளவே செய்வோம். ஆனால் அதே ஆசாமிகளுடன் கூட ஓர் அரைமணி நேரம் கவிதையின் லட்சணத்தைப் பற்றி விவாதம் செய்துகொண்டு இருந்தால் போதும், அவர்களுக்கும் நமக்கும் எப்படி 'ஏழாம் பொருத்தமாக' அபிப்பிராயபேதம் இருக்கிறது என்பது வெளிப்படையாகிவிடும். பொருள் செறிந்த பாட்டு என்றால், குறிப்பிட்ட பாட்டில் உள்ள விஷயத்துக்கு—அது எப்படிப்பட்ட விஷயமாக் இருந்தாலும் சரி—பத்துப் பன்னிரண்டு மேற்கோள்கள் காட்டி, இன்றைய நடைமுறையில உள்ள சர்தாரணமான சம்பவத்தைப் புலவர் ஏற்கெனவே தீர்க்கதரிசனமாகக் கூறிவிட்டார் என்று சொல்லி, இதுவும் போதாது என்று வேறு பல விரிவுரைகளும் செய்வார்கள். அந்த வேறு பல விரிவுரைகள் என்ன?

உதாரணமாக் ஒரு பாட்டில் 'சிவனும் நேரில் வந்தான்' என்று பொருள்படக் கூறப்பட்டிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். 'சிவனும்' வந்தான் என்று

கூறி, புலவர் இந்த உம்மையினால், சிவன் சாதாரணமாக வரார் தவன், பக்தனின் பக்திக்கு மெச்சி வந்து விட்டான் என்று உணர்த்துகிறார். ஆகவே பக்த னுடைய பக்தியின் பெருமையைப் புலவர் குறிப்பாக எடுத்துக் காட்டுகிறார் என்பார்கள்; அதே பாட்டில் 'பக்தன் வேண்டுகோளுக் கிணங்கச் சிவன் வந்தான்' என்றிருந்தால், 'ஆகா! பக்தர்களுக் கெல்லாம் சிவன் எவ்வளவு காட்சிக் கெளியனாய் வந்துவிடுகிறான். இதைக் கருதியே சிவன் வந்ததை வியப்பாகக் கருதா மல், புலவர் சாதாரணமாகக் குறிப்பிட்டுள்ளார்' என்பார் கள். எப்படியும், புலவரின் பாட்டுக்கு விசேஷ அர்த்தம் விளைவியாமல் தப்புவது கடினம்தான். ஓசை நிறைவுக் காக ஒருவேளை புலவர் உம்மையைக் காட்டவோ குறைக் கவோ செய்திருக்கலாம் என்பது வேறு விஷயம்.

இந்த முறையில் பொருள் செறிந்த கவிகளைக் காண்பவர்கள் ஒரு கோஷ்டி.

இன்னொரு கோஷ்டி :

'பிரதிப் பிரயோஜனம் கருதாமல் பகைவனுக்கும் அருள் செய்; போர்முகத்தில், எதிரிகளைக் கொல்லத் தயங்காதே' — இப்படிப் பொருள்பட ஒரு பாட்டு இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம்; அல்லது ஒரு படலத்தில் இரண்டு பாட்டுக்கள் வெவ்வேறு இடங்களில் இந்தஇரண்டு விஷயங்களைத் தனித்தனியே கூறுகிறதென்று வைத்துக் கொள்ளுவோம். இப்படி முரண்படக் கூறுகிறாரே, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் எதை வைத்து முடிச்சுப் போடுவ தென்று திகைப்பவர்கள் எல்லாம் வியக்கும் படியாக, வட துருவத்தையும் தென் துருவத்தையும் ஆயிரம் காரணம் சொல்லி ஒட்ட வைத்து, இவ்வளவு ஆயிரம்

விஷயங்களையும் பொருளாக வைத்துப் புலவர் பாடியிருக்கிருர் என்பார்கள்.

வேருெரு கோஷ்டியினர் 'கொலை செய்யாதே' என்று வியாக்கியானம் செய்யும் ஒரு பாட்டுக்கு, மற்ருெரு கோஷ்டியினர் "கொலையைத் தான் செய்" என்று எப்படியோ பொருள் சொல்லி விடுவார்கள். இப்படி இரண்டு பொருள்பட ஒருவன் பாட்டுச் செய்திருந்தால், அவனுக்குக் கவி பாடும் திறமை பரிபூரணமாக இல்லை என்றே சொல்லவேண்டும். உதாரணமாக பகவத் கீதைக்கும், திருக்குறளுக்கும் மேலும் மேலும் ஒருவர் கொள்கைக்கு மற்ருெருவர் வித்தியாசப் பட்டு வேறு வேறு விதமாக எல்லாம் பலர் தலைமுறை தோறும் வியாக்கியானம் செய்து வர மேற்படி நூல்கள் இடமளிக்குமென்ருல், அது சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஒரு விஷயத்தை எடுத்துக் கூறும் திறமை, அந்த நூலாசிரியர்களுக்குக் கிடையாது என்பதைத்தான் காட்டும்.

பிறிதொரு கோஷ்டியினர் உண்டு; அவர்கள் சொல்வது மிகவும் விசித்திரமாக இருக்கும். 'வெகு நாட்களாக மழை பெய்யவில்லை; அதனுல் விவசாயம் இடைஞ்சலாக இருக்கிறது; இப்படியிருந்தால் எதை வைத்துச் சாப்பிடுவது? எப்படிப் பிழைப்பது?' என்று நாம் பேசிக்கொண்டிருப்போம். அப்போது ஒருவர், பார்த்தீர்களா? இதைத்தான் திருவள்ளுவர் அன்றே சொல்லியிருக்கிருர்; உலக அனுபவத்தை எப்படி ஒன்றே முக்கால் அடிகளில் பொதித்து அருமையாகப் பாடிவிட்டார்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின் றுடற்றும் பசி"

மழையில்லை யென்றால் பசிப்பிணிதான் என்று இதனால்தான் அப்பொழுதே பாடியறிவுறுத்தியுள்ளார் என்பார். நம்மை ஆச்சரியம் ஸ்தம்பிக்க வைக்கும். இதென்னடா இது? மழைபெய்யவில்லை யென்றால், பட்டினி கிடக்க வேண்டியதுதான் என்று ஒரு திருவள்ளுவர் வந்து தெரிவித்துத்தானா நமக்குத் தெரிய வேண்டும்? இந்த உண்மை என்ன பிரம்ம ரகசியமா? ஒரு கவிதையில் இடம் பெறுவதற்கு இது என்ன அவ்வளவு பிரமாதமான விஷயமா? இதை அன்றே சொல்லி விட்டதில் என்ன பெருமை? இப்படியே வியந்து கொண்டே போவோம்.

ஒரு பக்கம் இப்படிப்பட்ட மூன்று வகையான கோஷ்டியினர் இன்று பெரும்பாலும் காணப்படுகின்றனர் என்பது மறக்க முடியாத விஷயம். இத்துடன் பழம் பாடல்களுக்குச் சிறப்பளிக்கும் நோக்கத்துடன், 'அணுகுண்டும் ஆகாயவிமானமும் அந்தக்காலத்திலேயே இருந்தன; கி. மு. இத்தனாவது நூற்றாண்டில் தோன்றிய இந்த நூலின் இன்ன பாட்டில் சிறுகதையின் அம்சத்தை அப்படியே விளக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லும் அதீத கோஷ்டியினரையும் சேர்த்துக் கொள்ளுவோம். அவர்களைப் பார்த்து, அணுகுண்டும் ஆகாய விமானமும் அந்தக் காலத்தில் செய்யத் தெரிந்தால், இன்று நாம் அந்த விஞ்ஞான அறிவின் அடிப்படையில் சந்திர மண்டலத்துக்குப் போய்வரும் யந்திரங்களைக் கண்டுபிடித்திருப்போமே? அப்படியில்லை என்றால், அந்த ஆகாயவிமானம் செய்ய வரவது பரம்பரையாக நமக்குத் தெரிந்து கொண்டு வந்திருக்க வேண்டுமே? எல்லாம் போகட்டும், ஆகாய விமானம் செய்யத் தெரியா விட்டாலும், குறைந்த பக்ஷம் ஒரு மோட்டார் சைக்கிளாவது நமக்குச் செய்யத் தெரியாமல் இருப்பது ஏன்? கி. மு. நூலில் சிறு

க்கதையின் இலக்கணம் இருந்தால் தமிழ் நாட்டில் இன்றுவரை எத்தனை கோடி சிறு கதைகள் உற்பத்தியாகி இருக்கவேண்டும்? என்பன போன்ற கேள்விகளைக் கேட்காமல் அவர்களையும் கோஷ்டியோடு கோஷ்டியாகச் சேர்த்துக் கொள்ளுவோம்.

மேற் சொன்ன கோஷ்டியினர் யாவரும் ஒருவிஷயத்தில் ஒன்றுபட்டிருக்கிறார்கள். அதாவது கவி என்றால் அதை வைத்துக்கொண்டு மனம்போனபடி யெல்லாம் வியாக்கியானம் செய்ய இடமிருக்க வேண்டும்; அது தான் பொருள் செறிந்த கவி. பொருள் செறிந்த கவிதான் நல்ல கவி, என்பதே அவர்கள் அபிப்பிராயம். ஆகவே அவர்கள் எல்லோரும் கவிதையில் எடுத்தாளப் பட்ட பொருளுக்கு வியாக்கியானம் செய்யத்தான் வந்தார்களே ஒழிய, அந்தக் குறிப்பிட்ட பொருள் கவிதையில் வைத்துக் கூறத்தக்க யோக்கியதை படைத்த பொருள்தானா? என்பதைப் பற்றி யோசிக்கவே அடியோடு மறந்து விட்டனர். ஒரு தடவை தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு நடாத்தப் பெற்ற பரிக்ஷை யொன்றில் 'பருப்புச் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகளை ஒரு வெண்பாவாகப் பாடுக' என்ற ஒரு கேள்வி கேட்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன். பருப்புச் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள் கவிதைக்கு உரிய விஷயமாகுமா என்பது கேள்வி கேட்டவருக்குத் தெரியவில்லை. இதைச் சொல்ல வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் எதற்கு? 'மழை பெய்யா விட்டால் பட்டினி கிடக்க வேண்டும்' என்பதைப் பாட்டெழுதித் தெரிவித்த கதைக்கும் இதற்கும் வித்தியாசமில்லை. ஆகவே, உண்மையிலேயே பொருள் செறிந்ததாக இருந்தாலும், பாட்டில் கையாளும் விஷயம் பாட்டுக்கே உரிய பாட்டைத் தவிர வேறு எந்த முறை

யிலும் பரிபூரணமாக் வெளிப்படுத்த இயலாத விஷயமாக் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். இதைப் பொருள் விளக்கம் செய்வோர் கவனித்த பிறகுதான், கவியைக் கவியென்று அங்கிகரித்துப் பொருள் செய்யத் தொடங்க வேண்டும்.

இதற்கடுத்த படியாக் மற்றொரு பெருங் கூட்டம் இருக்கிறது. இவர்கள் கவிதையைச் சல்லிசாக்கி விட்டார்கள். இவர்கள் சொல்லுவது இதுதான்:

"கவிதையில் உணர்ச்சி நிரம்பி யிருக்கவேண்டும். உணர்ச்சியை எடுத்துக் காட்டும்படியான சந்த நயமும் சொல்வளமும் வேகமும் இருக்கவேண்டும். இந்த அம்சங்கள் கூடி உணர்ச்சி செறிந்து ஒரு பாட்டு அமைந்து விட்டால் அதுவே சிறந்த கவி" என்பார்கள். இவர்கள் கூறுகிற விஷயங்களெல்லாம் கவிதைக்கு வேண்டிய அத்தியாவசியமான அம்சங்கள் என்பதை மறுக்க முடியாதுதான். ஆனால் அவர்கள் இந்த அம்சங்களே ஒரு கவிதைக்குப் போதுமானது என்று சொல்லி முடிவு கட்டிவிடுவதுதான் தப்பு. எப்படி?

உணர்ச்சியும் தாளலயமும் மட்டும் பொருந்தி யிருந்தால் பாட்டு இசைப்பாங்கைப் பெற முடியுமே ஒழிய, உயர்ந்த கவியாகிவிட முடியாது. உயர்ந்த கவிக்கு அழுத்தமான விஷயச் சிறப்புகட்டாயம் இருக்க வேண்டும். மனித இருதயத்தில் காலத்தாலும் தூரத்தாலும் வேறுபடாது, பற்பல மனப்பாங்கு உள்ளவர்களின் அபிப்பிராய பேதங்களுக்கும் உட்படாது, பிரபஞ்சத்துக்கு அர்த்தம் செய்வதாக உள்ள நிரந்தர உண்மைகளை வாரிக் கொணர்ந்து, வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தி, நல்லதுக்கு வழிகாட்டிச் செல்லும் விஷயங்கள் கவிதையில் இடம் பெற

வேண்டும். அப்படிப்பட்ட உண்மைகள் வாழ்க்கையின் எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் வெளியாகின்றனவோ அந்தந்தச் சந்தர்ப்பங்களையும், அல்லது அந்த உண்மைகள் வேறொரு தன்மையில் வேறொரு ரூபத்தில் வெளியானால் அந்தச் சந்தர்ப்பங்களையும் கவிதையில் வைத்துப் பார்டுவது தான் கவிதை எழுதும் லட்சியத்தைப் பூர்த்தி செய்யும். இப்படிப்பட்ட விஷயங்களைக் கவிதாபாத்திரங்களின் இயக்கத்தால், நடைமுறையால், பேச்சினால் புலப்படுத்தும்போது அது இலக்கியமாகி விடுகிறது. வாழ்வின் ஆழ்ந்த உண்மைகளை வெறும் தத்துவ சாஸ்திரமாகப் போதிக்காமல், உணர்ச்சியோடு கலந்து இன்பம் ஊட்டும்படியாகப் போதிப்பதே கவி. ஸர். பிளிப் ஸிட்னி என்ற ஆங்கில விமரிசகர் கவிதையை இன்பானுபவம் நிறைந்த போதம் என்றுதான் குறிப்பிடுகிறார்.

இதை எந்த முறையில் சொன்னால் மக்களின் இருதயத்தைத் தொட்டு நம் உணர்ச்சிகளையும் கோட்பாடுகளையும் இவர்கள் இருதயத்தில் குடியேற்ற முடியும், என்பதைத் தெரிந்து கவிதையை அந்தந்த முறையில் நயங்களுடனும், சொல் வளத்துடனும் அதற்கேற்ற உணர்ச்சியுடனும் அமைத்துப் பாட வேண்டும். இந்த விதமாக விஷயம் கலந்து உணர்ச்சி இருந்தால் தான் ஒரு பாட்டு கவியாகும். உணர்ச்சி மட்டும் பிரதிபலிப்பதாலேயே கவியாகிவிடாது. உதாரணமாக "என் கணவன் செத்துப் போய் விட்டானே! நான் இனி என்ன செய்வேன்?" என்ற பொருளை மட்டும் தெரிவிப்பதாக இருந்த பாட்டின் உணர்ச்சிச் செறிவு நம்மைத் தாரைதாரையாகக் கண்ணீர் வடிக்கச் செய்வதாக இருந்தாலும் அது கவியாகி விடாது. அது கேவலம் ஒரு பாட்டுத்தான்;

ஏனென்றால் கவிதைக்குரிய பிரமார்தமான விஷயம் அதில் ஒன்றுமில்லை.

பெரும்பான்மையான பழங்காலத் தமிழ் நூல்களில் நாலு பேருக்கும் தெரிந்திருக்கும் சர்வ சாதாரணமான காரியங்கள் ஏதோ நாசூக்காகவும், சற்றுச் சாமார்த்திய மாகவும், சுவையாகவும் பேசிக்கொள்ளும் முறையில் கூறப்பட்ட, சிலருசிகரமான வரிகள் உண்டு. வார்த்தைச் சேர்க்கையில் உள்ள கோளாறினுலோ, குறுக்கத் தாலோ, அல்லது சாமார்த்தியத்தாலோ, பிற்காலத்தில் விரிவுரைகள் பல தோன்றுவதற்குரிய அடிப்படைகள் அவற்றில் காணப்படுகின்றனவே ஒழிய வியக்கத் தக்க உண்மைகளைக் காண முடிவதில்லை. இந்தக் காலப் பாட்டுக்களோ, 'தொட்டதெல்லாம் உணர்ச்சி மயம், உணர்ச்சியைத் தவிர்த்து வேறொன்று மில்லை' என்று கூறத்தக்க நிலையில்தான் உள்ளன. 'வானத்தில் சந்திரன் உதித்தான், இதைப் போல, அதைப்போல; அதனால் ஒரு பெண்ணின் நினைவு வந்து ஒருவன் இரவெல்லாம் தூங்காமல் கிடந்தான்.' இவ்வளவு கருத்தை மாத்திரம் கொண்ட ஆயிரக் கணக்கான பாடல்கள் ஒரு புறம்; அப்புறம், "தமிழ் தான் உயிர். தமிழ்தான் கடவுள். தமிழ் வாழ்க!" இவ்வளவு விஷயத்தை மட்டும் வைத்துக் கொண்டு பாட்டெழுதத் தொடங்கும் ஒவ்வொருவரும் ஒரு பத்துப் பாடல்கள் எழுதி விடுகிறார்கள், அதற்கும் 'கவிதை' என்ற பட்டம்தான்.

மொத்தத்தில் கவிதை என்றால் மிகவும் சல்லிசான பொருள் என்று மக்கள் மனதில் எண்ணம் உண்டாகும் படி செய்துவிட்டதால், உண்மையிலேயே இன்று கவி எழுதுவதாகச்சொல்லப்படுகிறவர்கள்கூட, கவிதையின் தன்மையை உணர முடியாமல் போய்விட்டது. கம்பரும்

மகாக்விதான் ; சேக்கிழாரும் மகர்கவிதர்ன் ; இளங்கோ வடிகளும் மகாகவிதான் ; பாரதியாரும் மகாக்விதான் ; இன்னும் தனக்கு நெருங்கிய நண்பர்கள் இருப்பவர்கள் பாட்டெழுதினால் அவர்களும் மகாகவிகள்தான். இப் படி யாரோ ஒருவர் சொன்னதுபோல, அனதோல் பிரான்ஸ் முதல் ஆரணி குப்புசாமி முதலியார் வரை, எல்லோரையும் ஒரே ரகத்தில் ஒன்றுபோல மதிப்பிட்டுப் பழக்கமான தமிழ்நாட்டில், நல்ல கவிகளைச் சாதாரண மக்கள் அடையாளம் கண்டு கொள்வது சிரமந்தான்.

மேலே கூறியவாறு, விஷயச் சிறப்பும் உணர்ச்சியும் செறிந்த கவிகளைத்தான் உயர்ந்த கவிகள் என்று மேல் நாட்டு இலக்கிய விமரிசகர்களும் ஒப்புக் கொள்ளுகின்றனர். அவர்கள் எடுத்துக் கூறும் உயர்ந்த அம்சங்களெல்லாம், நம் நாட்டிலும் கம்பர், திருமூலர், பட்டினத்தார், ஆண்டாள், திருவள்ளுவர், மாணிக்கவாசகர், பாரதியார் முதலியவர்களின் நூல்களில் உள்ள கவிகளில் அமைந்துள்ளன ; சில சித்தர்களின் பாடல்களும் சில தனிப்பாடல்களும் கவிகளாக இருக்கின்றன. இப் போது தமிழ் நாட்டில் தோன்றிவரும் பாடல்களை, மேல் நாட்டின் பல தற்காலக் கவிதைகளுடன் ஒப்பிடும் போது, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. ஏனென்றால் மேல் நாட்டின் அந்தக் கவிகள் முன்னால் குறிப்பிட்ட கவிஞர்களின் பாடல்களைப் போல உணர்ச்சியிலும் விஷயச் சிறப்பிலும் ஒப்பற்று விளங்குவதுதான். இது இன்றைய பாட்டெழுதும் கோஷ்டியினர் கவனிக்க வேண்டிய விஷயம்.

# மூன்றும் தலைமுறை

ப. ஸ்ரீநிவாஸன்

**கா**லை முதல் மதியம் வரை கிராமத்துப் பஜனை மடத்தில் சீட்டாடி விட்டு வாய்க்காலுக்குக் குளிக்கச் சென்றான் ராமானுஜம். வேஷ்டியைக் கூடக் கசக்காமல் 'காக்காய் முங்கு'ப் போட்டுவிட்டு அங்கிருந்து வீட்டிற்கு ஓடி வந்தான்.

மனைவி பங்கஜம் சோற்றைப் போட்டாள். நெய்யில்லாத சாதத்தை அவன் அள்ளிப் போட்டுக் கொண்டான். வெற்றிலை பாக்குடன் குத்துப் புகையிலையையும் வாயில் அடக்கிக்கொண்டு பிற்பகல் ஆட்டத்திற்கு அவன் அவசரம் அவசரமாகப் புறப்பட்டான்.

வாசல் வரை போய்விட்ட அவனை "அப்பா, ராமானுஜம்!" என்று கூப்பிட்டாள் விதவைத் தாயார் அலமேலு. "என்ன இப்போ!" என்று பையன் எரிந்து விழுந்தான்.

சொல்ல வேண்டியதைச் சொல்லியே தீருவது என்று உறுதியுடன் தாயார் ஆரம்பித்தாள்:

"அப்பா, இப்படிச் சீட்டாட்டத்திற்கு விழுந்து விழுந்து ஓடுகிறாயே! நமது குடும்ப நிலைமை உனக்குத் தெரியாதா? சாப்பாட்டு அரிசி இன்னும் நாலு நாளைக்குத் தான் இருக்கு. உப்பு முதல் கற்பூரம் வரை வீட்டில் ஒரு பண்டமும் இல்லே. சட்டிபானையைத் தவிர விற்றுத் தின்ன வேறு ஒரு பொருளும் இல்லே. வந்தவர் போனவர் எல்லாம் வயிறாரச் சாப்பிட்ட இந்த

வீட்டிலே இப்போது ஒரு பிடி அன்னத்திற்குப் பஞ்ச மாய்ப் போச்சேடா! இந்தத் தரித்திரம் உன் கண்ணில் படலையா அப்பா!"

இதைச் சொல்லிவிட்டு அலுமேலு கேவிக் கேவி அழலானாள்.

ராமானுஜம் அசந்து போனான். "அதற்கு நான் என்ன அம்மா செய்ய?" என்று பரிதாபமாகக் கேட்டான்.

"இப்படிக் கேட்கலாமா அப்பா! நீ ஆண் பிள்ளை. உன் அக்குமுடையாளும் குழந்தைகளும் உண்ண உண வும், உடுத்திக்கத் துணியும் இல்லாமல் திண்டாடறது கள். முழுப்புடவை இல்லாமல் நான் முண்டைக் கட்டிக் கொண்டு வளைச்சு வரேன். நானாவது நாலு வீட்டில் உஞ்ச விருத்தி எடுப்பேன். சிறிசு பங்கஜம் என்ன செய்வாள்? மூன்று குழந்தைகளும் பெண்ணாய்ப் பிறந்திருக்கின்றன! ஏது நம்ம அம்மாவே இப்படிச் சொல்லுறாளே என்று நினைச்சுக்காதே. நீ ஏதாவது ஒரு வேலை பார்த்தால்தான் குடும்பம் பிழைக்கும்," என்று சொல்லி அவள் இன்னொரு பாட்டம் அழுதாள்.

பாட்டி அழுவதைக் கண்ட இரண்டு பேத்திகளும் கத்த ஆரம்பித்தன. இடுப்பில் குழந்தையுடன் கத வருகில் நின்று கொண்டிருந்த பங்கஜமும் விசிக்க லானாள்.

"நான் என்ன வேலையம்மா பார்க்க? அப்பா என்னைப் படிக்கவைக்கலையே, மாடு மேய்க்கத்தானே சொல்லிக் கொடுத்தார்!" என்று ராமானுஜம் நிர்க்கதி யாகக் கேட்டான்.

"அவரைச் சொல்ல என்ன அப்பா குற்றம்! எல்லாம் நம் தலைவிதி! இருபது கோட்டை விதைப்

பாடு நிலத்தைத் தாத்தா உங்க அப்பாவுக்குக் கொடுத்து விட்டுப் போனார். தொழு நிறைய மாடுகள் இருந்தன...... சனீஸ்வரன்தான் வந்து விட்டானே! எதிர் வீட்டுக்காரனோடு உப்புப் பெறாத காரியத்துக்குக் கட்சி கட்டிக் கொண்டு அப்பா கிளம்பினார். கோடும் நாடுமாய் அவர்கள் ரெண்டு பேரும் ஆஸ்தியைத் தோற்றார்கள். நேற்று வந்து இங்கு குடியேறிய லேவாதேவி ராமையா அவ்வளவு சொத்தையும் கடனுக்குப் பதிலாய் எடுத்துண்டு இப்போ ஆடம்பரமாய் இருக்கான். பண்ணையார் பிள்ளையான நீ கிடந்து தவியாய்த் தவிக்கிறாய்! ஹூம்! விதியப்பா, விதி! மூணு தலைமுறை வாழ்ந்தவனும் இல்லை, மூணு தலைமுறை கெட்டவனும் இல்லை. அந்தச் சொத்து இருந்தால் நீ ஏனப்பா படிக்கணும்! அதைச் சொல்லிப் பலனில்லை...... நீ இப்போ ஹோட்டலில் வேலை செய்தாவது குடும்பத்தைக் காப்பாத்தணும் அப்பனே!" என்று சொல்லி அவள் தன் வார்த்தையைத் தானே கேட்டுப் பொறுக்காமல் கதறி அழுதாள். தன் பிள்ளைக்கு என்னவோ ஏதோ வந்து விட்டது போல் அவள் அழுதாள்.

ராமானுஜத்திற்குக் கண்ணீர் துளிர்த்தது. பல வருடங்களாக வாட்டி வந்த வறுமையின் கோரத்தை அன்றுதான் அவன் பூர்ணமாக உணர்ந்தான். பொறுப்பற்ற வாழ்க்கை நடத்திய அவனுக்குத் தன்மீது ஆத்திரம் வந்தது. அன்றே வீட்டிலிருந்து கிளம்புவது என்ற உறுதியுடன், 'அம்மா! நான் இப்போதே மதுரைக்குப் புறப்படுகிறேன். அங்கே வேலை பார்க்கும் நமது ஊர்க்காரர் யாரையாவது பிடித்து ஏதாவது ஹோட்டலில் நுழைந்து கொள்கிறேன். பங்கஜம், என் வேஷ்டியையும் துண்டையும் எடுத்துவை, நான் போய் வழிச் செலவுக்கு ராமையர்விடம் பத்து ரூபாய்

கடன் வாங்கிவரேன்!' என்று ஒரே மூச்சில் சொல்லி விட்டு வெளியே சென்றான்.

லேவர்தேவி ராமையர் ஐயர் ராமானுஜத்தின் புதிய திட்டத்தை வரவேற்றார். படாடோபத்துடன் வாழ்ந்து வந்த பண்ணையார் பரம்பரையின் வாரிசு ஹோட்டல் வேலைக்காக ஊரை விட்டுப் போகப் போவதை அறிந்து அவர் பூரித்தார். அவன் கேட்ட பத்து ரூபாயை உடனே கொடுத்தார். ஆனால் முதல் மாதச் சம்பளம் வாங்கியவுடன் அப் பணத்தை 'மணி யார்டர்' பண்ணிவிடும்படி அவர் அழுத்தமாகச் சொல்லி அனுப்பினார்.

உபரி வேஷ்டியையும் துண்டையும் கையில் இடுக்கிக் கொண்டு ராமானுஜம் புறப்பட்டான். "மூன்றும் தலைமுறை! மூன்றும் தலைமுறை" என்று ஜபித்துக் கொண்டிருந்த தாயார் அழுகையும் கண்ணீருமாய் அவனை வழி அனுப்பினாள். பங்கஜமும் குழந்தைகளும் அழுது கொண்டே வாசல் வரை வந்தனர்.

திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம், சொல்லொணாத் துயரத்துடன், தனது ஊரிடம் ராமானுஜம் பிரியாவிடை பெற்றுக் கொண்டான்.

---

# நமது தேவைகள்

க. அருணாசலம்

மனித இயல்பை அறியும் ஆவலிருந்தால் முதலில் மனிதனின் அடிப்படையான தேவைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். மனித இயல்புக்குப் பின்னணியில் சில அடிப்படைத் தேவைகள் இருக்கின்றன. உடற் சுகம், பாதுகாப்பு, தப்பிப்பிழைத்தல், தீங்கிழைக்கக் கூடியவர்களைத் திருப்தி செய்தல், புகழை விரும்பல், மற்றவர்களை அடக்கியாளுதல், கவனத்தைக் கவர்ந்து இனிமையூட்டி வேற்றுப் பாலோருடன் காதல் வாழ்வு நடத்துதல், தன்னினும் பலம் குறைந்த ஒருவனைப் பராமரித்துப் பாதுகாக்க விரும்புதல், தன்னை ஒத்தவர் களின் கூட்டத்தையும் தோழமையையும் நாடுதல், தன் இனத்தாரைப் போன்று வாழுதல், கண்டு தெரிந்து தெளிதல், தனக்குத் தெரிந்தவர்களுடன் மீண்டும் கூடி வாழ விழைதல்; இவை எல்லார்க்கும் இயல்பிலேயுள்ள தேவைகள். இவை மனித இனத்தின் பரம்பரைச்செல்வம். உடன்பிறந்தவை.மனிதனின் சகல நடத்தைகளுக்கும் உணர்ச்சிக்கும் இவைதான்காரணம். இவை திருப்தி யடைந்தால் வாழ்க்கை இன்பமாகவும், திருப்தி யடையாவிட்டால் துன்பம், கவலை, அல்லல் எல்லாம் நிறைந்ததாகவும் ஆகிறது. இவைதான் மனிதனைச் செயலாற்ற உந்தித் தள்ளுபவை.

ஒரு மனிதன் ஏன் குறித்த வழியில் நடந்து கொள் கிறான், அல்லது உணர்ச்சி வயப்படுகிறான் என்று அறிய ஆவலானால், அடிப்படையான இத்தேவைகளுள்

எது அவன் நடத்தைக்கோ உணர்ச்சிக்கோ காரணம் என்று கண்டுபிடிக்க் வேண்டும். ஓரளவு அனுபவம் வந்த பிறகு, ஒரு மனிதனின் நடத்தைக்குப் பின்னுள்ள தேவை எது எனக் காணுவது எளிது.

ஆனால் அதற்குமுன் தெரிய வேண்டியது ஒன்று உளது. இந்த அடிப்படைத் தேவைகள் ஒவ்வொன்றும் பல்வேறு வழிகளில் வெளிப்பட்டுத் திருப்தி பெறும். அதாவது ஒரே அடிப்படைத் தேவை, நூறு, ஆயிரம் அல்லது லக்ஷம் வழிகளில் வெளியாகித் திருப்தியடையலாம். ஒரு மனிதனின் குணத்திற்கும் மற்றொருவனின் குணத்திற்கும் வித்தியாசம் இருகிறது. இதன் காரணம் என்ன? ஒரே அடிப்படைத் தேவை பலவேறு வழிகளில் வெளிப்பட்டுத் திருப்தியடைகிறது. ஆதலால்தான் மனிதனுக்கும் மனிதனுக்கும் நடத்தையில் வித்தியாசம்.

கந்தப்பன் நல்ல உழைப்பாளி. விவசாயத்தில் எப்போதும் கண்ணும் கருத்துமாயிருப்பான். செட்டான வாழ்க்கை. பகட்டும் படாடோபமும் அவனுக்குப் பரம விரோதிகள். மிச்சமாகிற பணத்தைச் சேர்த்துப் பூமியிலே போடுவான். ஐந்தாறு வருஷத்தில் ஐந்நூறு ஏக்கர் நிலத்திற்கு அதிபதி யாகிவிட்டான். இன்றும் அதே செட்டான வாழ்க்கைதான். மேலும் மேலும் வளர்கிறது அவனது குடித்தனம்.

நவகோடி நாராயணன் அதே ஊர். கந்தப்பனும் இவனும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். வியாபாரத்தில் இவனுக்குப் பற்று. சுற்று வட்டச் சந்தைகளில் எங்கும் நாராயணனைப் பார்க்கலாம். திரவியம் கிடைக்குமென்றால் திரை கடலும் ஓடுவான். பாலொழுகப் பேசுவான். ஆனால் காரியத்தில் எப்போதும் கண். பக்கத்துக் கடையில் பழமில்லையென்று கண்டால் இவனது கடைப்

பழம் ஒன்று, ஒன்றரை அணுவர்கிவிடும். உங்களுக்காக்வே பத்திரம் பண்ணி வைத்திருந்ததாகச் சொல்லுவர்ன். உங்கள் கையில் பணமிருந்தால் போதும்; நாரர்யணனிடம் எந்தச் சாமானையும் வாங்கலாம். கண்ட்ரோலைப் பற்றியோ ரேஷனைப் பற்றியோ கவலை வேண்டாம். காலம் நேரம் பார்த்துமட்டும் நீங்கள் போக வேண்டும். சாதாரணமாக நாணயஸ்தன்தான். ஒரு சாமானின் வாங்கினவிலை என்ன என்பதைமட்டும் அவனிடம் கேட்டுத் தெரிய முடியாது. சந்தர்ப்பத்தை நன்ருக்ப் பயன் படுத்துவதில் தீரன். ஆயிரத்தில் ஆரம்பித்தான். இப்பொழுது லக்ஷக் கணக்கில்தான் கொடுக்கல் வாங்கல். நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது நாராயணனின் வியாபாரம்.

கருப்பண்ணனும் அதே ஊர்தான். பெரிய புள்ளி. நல்ல வீடு. கொஞ்சம் கையிருப்பும் உண்டு. இவன் வேட்டியில் அழுக்குப்பட்டு யாரும் பார்த்ததில்லை. இவனுக்குத் தெரியாத ஊர் வம்பு இருக்காது. எல்லோருக்கும் வழி துறை சொல்லிக் கொடுப்பான். வக்கீல் வீட்டுக்கும் வழி காட்டுவான். இவனிடம் நெருங்கியவர்கள் சில மாதங்களிலேயே வெறும் ஆளாய் விடுவது எல்லோரும் அறிந்ததே. இவனது காரியமும் நடந்து கொண்டுதான் வருகிறது.

கந்தப்பனும், நாரயணனும், கருப்பண்ணனும் ஒரே ஊரார். ஒத்த வயதினர். இளமையில் தோழர்கள். ஆனல் இப்போது அவர்கள் நடத்தையில் எவ்வளவு வித்தியாசம். இந்த மூவரின் நடத்தைக்கு வேகம் கொடுத்து நிற்பது உடைமையில் விருப்பம் என்னும் அடிப்படை ஆசை தான். ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு வழியில் இந்த ஆசை வெளிப்பட்டுத் திருப்தியடைகிறது.

நம்து அடிப்படைத் தேவைகள் நமக்கே தெரியாமல் மறைந்திருக்கலாம். அவை அடிமனத்திலிருந்து கொண்டு நம்மைச் செயலாற்ற உந்தலாம், அநேகமாக அவை அப்படித்தான் திரைக்குப்பின் இருக்கின்றன. ஒரு தேவையைத் திருப்தி செய்ய முனைந்துள்ள மனிதனுக்கே, அவனது தேவையின் ஆதி உருவம் தெரிவதில்லை. பல தடவைகளில் அவன் அதை அடையாளம் கண்டு கொள்ளக் கூட முடியாமல் போகிறது. ஏதோ இக் குறிப்பிட்ட ஒன்றில் அக்கறை ஏற்பட்டுள்ளது. இதுதான் அவனுக்குத் தெரியும். இது கிட்டாவிட்டால் வாழ்வில் வெறுப்புத் தட்டுகிறது. சகிக்க முடியவில்லை.

இந்த அடிமனத்தைப் பற்றிய பிரம்மரகசியமோ மூடமந்திரமோ ஒன்றும் கிடையாது. மேல் மனத்தினின்றும் வேறுபட்டதாக அதைக் கருத வேண்டியதில்லை. மனிதனுக்கு இரண்டு மனங்கள் கிடையாது. மனதில் இரண்டு தனித்தனி அறைகள் போன்ற பிரிவும் கிடையாது. மனதின் நனவு நிலையை அல்லது மேல் மனத்தைத் திரையில் வெளிச்சம் படும் பகுதிக்கு ஒப்பிடலாம். வெளிச்சம் படாத திரைப் பகுதி நமது கண்ணுக்குப் புலனாவதில்லை. இருந்தாலும் அது இருக்கத் தானே செய்கிறது. அதுவும் வெளிச்சம் படும் திரையுடன் தொடர்ந்து ஒட்டி அதன் ஒரு பகுதியாகவே இருக்கிறது. இந்த வெளிச்சம் படாத, ஆதலால் மறைந்திருக்கிற திரையை அடிமனம் அல்லது மறை மனத்திற்கு ஒப்பிடலாம். ஓர் உதாரணம்: கடிகாரத்தைப் பார்க்கிறீர்கள். மணி பத்தரை. "உடனே நான் போகவேண்டும் என நினைக்கின்றீர்கள். இது முழுதும் மேல் மனத்தில் அதாவது நனவில் தெரிகிறது. கடிகாரத்தைப் பார்க்கு முன்பு இப்போது பத்தரைக்குப் பக்கமாய்த்தான் இருக்குமென்று தீர்க்கமாக நினைத்திருக்க வேண்டியதில்லை. ஆனால்

உங்கள் கடிகாரம் நான்கு என்று காட்டியிருந்தாலோ நீங்கள் ஒத்துக்கொள்ள மாட்டீர்கள். கடிகாரத்தில் ஏதோ தப்பு என்ற முடிவுக்குத் திடீரென வருவீர்கள். ஏன்? பத்தரைக்குப் பக்கம் தான் இருக்குமென உங்கள் மேல் மனத்தில் தெளிவாக நினைவுறாத போதிலும், அடிமனத்தில் அப்போது பத்தரைக்குப் பக்கம் தான் இருக்க வேண்டும் என்னும் எண்ணம் மறைந்து கிடந்திருக்கும். இந்த எண்ணம் நிச்சயம் அங்கிருந்தது. ஆனால் நீங்கள் முயன்று மேலுக்குக் கொண்டு வரவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் வந்து விடும்.

ஒரு மனிதன் தனது மேலான திறமையை வெளிக் காட்ட ஆசைப்படுகிறான். இந்த அடிப்படைத் தேவை பூர்த்தியாமல் இருக்கிறது. அவனுக்கு இத்தேவையைப் பற்றிய தெளிவான நினைவு இல்லாமலிருக்கலாம். இருப் பினும் அவன் ஓயாமல் கேட்பவர் சலிக்கும்படி தற்பெருமை பேசுகிறான், தான் எவ்வளவு திறமை வாய்ந் தவன் என்பதைப்பற்றிப் பெருமை யடித்துக் கொள்ளவே, இப்படித் தற்பெருமை பாராட்டுகிறான் என்பதில் நமக்கென்னமோ சந்தேகமில்லை. ஆனால் அந்த மனிதனுக்கு, தான் ஏன் இப்படிப் பெருமை யடிக்க வேண்டும் என்பதற்குக் காரணம் தெரியாது; தற்பெருமைப் பேச்சின் பின்னுள்ள அடிப்படைத் தேவையின் அல்லது ஆசையைப்பற்றி அவன் நினைப்பதில்லை.

ஒரு பெண் தனது நோயைப் பற்றி ஆதியோடந்த மாகச் சொல்ல ஆரம்பிக்கிறாள். இதற்கென்ன காரணம்? ஒரு வேளை, தான் எத்துறையிலும் யாருக்கும் இளைத்த வளல்ல என்னும் முதன்மை ஆசை தான் இப்படி நடந்துகொள்ள உந்துகிறதோ? ஆனால் அந்த

அண்டை வீட்டுக்காரிக்கு இத்தேவை அல்லது உந்துதலைப் பற்றிய அறிவே இருந்திருக்க வேண்டியதில்லை. அதாவது இத்தேவை அவள் மனத்தில் மறைந்து கிடக்கிறது. அது இந்தப் பேச்சில் வெளிப் பட்டும் திருப்தியடைகிறது.

ஒன்றைச் செய்பவனுக்குத் தான் அதைச் செய்வதன் காரணம் தெரிந்திருக்க வேண்டியதில்லை. அவனது அடிப்படைத் தேவை அல்லது ஆசைகளைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாதிருக்கலாம். குறிப் பிட்ட உணர்ச்சியாகவோ நடத்தையாகவோ பரிணமிக் கும் ஆசையைப் பற்றி, அவன் ஒன்றுமே வெளிப்படை யாக அறியாதிருக்கலாம். மன நூலறிவு இல்லாதிருந் தால், அவனுக்குத் தான் ஏன் அவ்வாறு உணர்கிறுன் அல்லது நடந்து கொள்கிறுன் என்று நிச்சயமாய்த் தெரியாது என்றே சொல்லிவிடலாம். மனித இயல்பை அறிய விரும்புவோர் இந்த உண்மையை நன்கு அறிய வேண்டும்.

நமது அடிப்படைத் தேவை அல்லது ஆசைகளுள் சக்தி வாய்ந்தவை திருப்தியடையாவிட்டால், நாம் ஓரளவு துக்கத்தில் மூழ்கியே யிருப்போம். நமக்குள்ள தேவையை நாம் அறியாதிருந்த போதிலும், நாம் சங்கடப் படத்தான் செய்வோம். மகிழ்ச்சி குன்றியவர் களாய்க் கவலையில் ஆழ்ந்து கிடப்போம். ஆகவே நாம் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டவர்களைப் போல், நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய ஒன்றைத் தேடியலைகிருேம். நமது அடிப்படைத் தேவை, ஆசை அல்லது விருப்பம் என்ன என்பது நமக்குத் தெளி வாய்த் தெரியவில்லை. இவற்றின் இயல்பு நமக்குத் தெரியாது. ஆகையால் தான் நாம் எதைத் தேடு கிருேம் என்பதும் தெரிவதில்லை. நமக்குத் தெளிவாய்த்

தெரியாத ஒரு சக்தியால் நாம் உந்தப் பட்டுக் காரியங்களைச் செய்கிறோம். கண்மூடித் தனமாக இருளில் இன்பத்தை நாடுகிறோம். பல திசைகளில் தேடி அலைகிறோம். நமது தேவை இன்னது எனத் தெரியாமலே அதைப் பூர்த்தி செய்ய அவாவுகிறோம்.

அநேகர் தமது வாழ்வில் பெரும் பகுதியைக் காரணமற்ற துக்கத்தில் கழிக்கின்றனர். தாம் இன்புறுவதற்கு என்ன தேவை என்பது இவர்களுக்குத் தெரியாது. இவர்கள் விசனப் படுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள், கவலைப்படுகிறார்கள். ஏனெனில் இவர்களுக்குத் தெரியாமலேயே இவர்கள் ஏதோ ஒன்றை விரும்புகின்றனர். தங்கள் தேவை யாது, தாங்கள் ஆசைப்படுவது என்ன என்று இவர்களுக்குத் தெரியாததனாலே இவர்கள் தம் வாழ்வில் பெரும்பகுதியில் இதையும் அதையுமாக ஓர் ஆயிரம் காரியங்களைச் செய்து பார்க்கின்றனர். ஏதோ குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்தமாதிரி ஏகதேசமாகத் தமது அடிப்படை ஆசைகள் சிலவற்றைத் திருப்தி செய்து கொள்கின்றனர். கொஞ்சம் இன்பமும் கிடைக்கிறது. இது போதாது. மனதின் கட்டுக்கோப்பும் மாறியமையும் வகையும் தெரிந்தால் இவ்வுலக வாழ்வை இன்னும் அதிக அதிகமாக ரசிக்கலாம்.

அடிப்படைத் தேவைகள் அனைத்தும் எல்லாருக்கும் உண்டு. ஆனால் அவைகளில் வேகத்தில் வித்தியாசமிருக்கலாம். அனைவரிடமும் இவைகள் இருக்கின்றன வென்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. இப்படிச் சொல்லுவதினால் ஆச்சரியமடைய வேண்டாம். புண்படவும் வேண்டியதில்லை. 'ஓ! என்னிடம் கோபம் உண்டா? காமம் உண்டா? பேருக்கும் புகழுக்கும் நான் ஏங்குபவனா?' என்றெல்லாம் கேட்டுவிடாதீர்கள். இவை

கள் எல்லாம் உங்களிடம் நிச்சயமாக உண்டு என்று சொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே முணுமுணுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைக் கொஞ்சம் பற்றற்றுக் கவனியுங்கள், அப்போது தெரியும்.

ஒன்று கேளுங்கள். இந்த அடிப்படைத் தேவை கள் நல்லவையுமல்ல; கெட்டவையுமல்ல. இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனீர்களா? கோபம் நல்லது மல்ல; கெட்டதுமல்ல. காதலும் அப்படித்தான். கோபம் குடிகெடுக்கும். ஆம், சமூகநலனுக்கு ஒவ்வாத வழிகளில் அது வெளிப்பட்டுச் செயலாற்றத் தூண்டும் போதுதான் குடி கெடுக்கும். கோபத்தின் உந்துதலால் நடந்த கள்ளுக்கடை மறியல் குடிப் பழக்கத்தை ஒழித் துக் குடிமையை உயர்த்தியபோது அது நல்லது தானே? சமூகத்தில் காணும் அதர்மத்தை அழிக்கக் கோபம் அவசியமல்லவா? இல்லையேல் நமக்குப் போர் ஆற்றல் எங்கிருந்து வரும். குடிக் கொடுத்த ஆண்டாள் நாச்சியாருக்குக் காதல் உணர்ச்சி யில்லாதிருந்தால், அந்தத் திவ்விய பக்திப் பாசுரங்கள் நமக்கு எங்ஙனம் கிடைத்திருக்கும்? ஆகவே அடிப்படைத் தேவை எதுவாயினும் அது நல்லதுமல்ல, கெட்டதுமல்ல. அது திருப்தி அடையும் செயல் அல்லது உணர்ச்சி யைக் கொண்டுதான் நல்லது கெட்டதாகிறது.

குழந்தைகளை வளர்க்கிறோம். வாணிபம் செய்கி றோம். பிரச்சாரத்தில் ஈடுபடுகிறோம். மற்றவர்களின் உணர்ச்சியையும் நடத்தையையும் மாற்ற யத்தனிக்கி றோம். இக் காலங்களில் நமது முயற்சி அவர்களைத் தமது அடிப்படைத் தேவைகளைச் சமூக நலனுக்கு ஒத்த வழியில் திருப்தி செய்து கொள்ளத்தக்க, புதுப் புது வழிகளைக் காட்டுவதாகவே இருக்க வேண்டும்.

சமூகத்தைப் படுகுழியில் தள்ளி நாம் திருப்தியும் இன்பமும் பெறுவது நிலையாக இராது. ஆரம்பத்தில் இன்பம் தருவது போல் இருந்து, முடிவில் அழியாத் துன்பத்தையும் அல்லலையும் விளைக்கும். நாம் குணசீலர்களாக இருக்க விரும்பின், நமது அடிப்படைத் தேவைகளைக் கண்டு அவற்றைச் சமூக நலனுக்கு உகந்த வழியில் திருப்தி செய்து இன்பம் துய்க்க முயலுவோமாக.

---

# அன்னையின் விடுதலை

வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி

கொடிக்குள்ளிருந்து விடுபட்டு மலர்ந்த மலரைக் கண்டால் யாருக்கும் கொண்டாட்டம். அவர்கள் கவனியாமல் இருந்துதான் பார்க்கட்டுமே. கமழும் மணம் சும்மா விட்டு விடுமா? கட்டியல்லவா இழுக்கும் மனதை. எங்கோ தூரத்தில் செல்பவரைக் கூடத் தன்பால் இழுத்து இன்புற வைக்கும். கொடியிலிருந்து வெளி வந்து மலர்ந்த மலரின் மேன்மை அத்தகையது. அம் மலரின் வரலாற்றை அதையே கேட்போம். அம்மலர் கூறுகிறது :

'இக்கொடி உருவாகி எத்தனையோ ஆண்டுகள் ஆயின. அதற்கு முன்னமேயே, விதையாக இருக்கும் பொழுதே நான் அதற்குள் கட்டுண்டு கிடந்தேன். நான் அப்பொழுதே இருந்தேன் என்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். உண்மையாகவே இருந்தேன். என் உருவம் நீங்கள் கண்டறிய முடியாமல் கொடியின் உறுப்புக்களில் சிக்குண்டு கிடந்தது. அன்று முதல் விடாமுயற்சியைக் கடைப்பிடித்து வந்தேன். என்ன செய்தால் என்ன ? பரமன் அருள் அல்லவா வேண்டும்! நான் கட்டுண்டு கிடந்தது கொடிக்குள். கொடி விதைக் குள். கொடிக்கு நல்ல காலம் பிறக்க வேண்டுமே என்று ஆண்டவனை வேண்டிய வண்ணமிருந்தேன்.

'பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புண்ணியவான் என்னை உட்கொண்ட கொடியின் விதையை நீரில் ஊற வைத்து, மண்ணில் புதைத்துச் செத்தையால் மூடி

வைத்தான். மறுநாள் அவ் விதையின் மேல் தோலில் ஒரு சிறிய பிளவு கோடுபோல் தோன்றியது. அவ் வளவுதான். மூன்றுவது நாள் காலையில் செத்தையைப் பிளந்து கொண்டு, ஒன்றரை முழம் வெளியே தலையை நீட்டி நிமிர்த்திக் கொண்டு, இரண்டு இலைகளுடன் கொடி நின்றது. விதை எவ்வளவு சிறியது அதற்குள் ஒன்றரை முழச் செடி ஏது? என்று கேட்காதீர்கள். எல்லாம் கட்டிலிருந்து விடுபட்ட கொண்டாட்டம் தான்.

'அந்தக் கொண்டாட்டத்திற்கிடையே அக் கொடியை, என்னையும் உன் கட்டிலிருந்து விடுவித்து விடேன். விடுதலையின் அருமை உனக்கு இப்பொழுது தெரியுமல்லவா, என்று நானும் சமயோசிதமாய்க் கேட்டேன். கொடி என் பிரார்த்தனையைக் கேட்டுக் கொள்ளாமலேயே புறக்கணித்து விட்டது. எவ்வளவோ கிளைகளும், இலைகளும், மலர்களும் எனக்கு முன் கொடி யிலிருந்து விடுபடக் காத்திருந்தன. அவைகள் விடு தலையடைந்த பிறகு வரிசைக் கிரமமாகத்தானே எனக் கும் விடுதலை கிடைக்க வேண்டும்? ஏன் ஒரே காலத்தில் எல்லோருக்கும் கொடி விடுதலை யளித்தால் என்ன? என்று நீங்கள் எண்ணலாம். எனது எண்ணமும் அப்படித்தான். ஆனால் கொடி ஒன்றுக்கும் மனமார விடுதலையளிக்க விரும்பவில்லை என்பது தான் உண்மை. கிளைகளும் இலைகளும், கொடியின் கட்டிற் கடங்காமல் தாமே தள்ளிக்கொண்டு ஒவ்வொன்றாய் வெளிவந்து கொண்டிருந்தன. அந்தக் கிரமத்தில் நான் வெளிவர இவ்வளவு நாட்கள் ஆய்விட்டன.

'இன்று தான் இக் கட்டிலிருந்து வெளி வந்தேன். நேற்று வரையில் முயற்சித்து ஒரு மொட்டாக உரு வெடுத்திருந்தேன். இன்னும் எனக்கு விடுதலை கிட்ட

எத்தனை நாட்கள் வேண்டுமோ? என்று நேற்றுங்கூட ஏக்கமுற்றேன். இன்று காலையில் கதிரவனின் பொற் கிரணங்கள் வழக்கம்போல் என்னைத் தழுவ வந்தன. நேற்று வரையில் என்னை அணைந்த கிரணங்கள் தாம் அவை என்று முதலில் கருதினேன். ஆனால் உடம் பில் பட்டவுடன் அறிந்தேன், அவைகள் மயக்கும் மாயக் கிரணங்கள் என்று. அவைகள் பட்டவுடன் என் உருவே மாறி விட்டது. பேரின்ப மணம் என் உடலில் கமழுகிறது. அதிகமாய் வளர்ப்பானேன். நேற்று வரையில் நீங்கள் என்னைத் திரும்பிப் பார்த்தீர்களா? இன்று யோக க்ஷேமம் விசாரிக்கிறீர்களே! என்னை முகர்ந்து இன்பக் களி கூருகிறீர்களே! என்னஎன்னமோ புகழவும் செய்கிறீர்கள். இதெல்லாம் அக் கிரணங் களின் அருளால் நான் அடைந்த விடுதலையின் பயன். போதும், ஆனந்த மகிழ்ச்சியில் என்னால் பேசவும் முடியவில்லை.'

இவ்விதம் கூறி அம் மலர் தன் கதைக்கு முடிவு கட்ட ஏற்பாடு செய்தது.

'நேற்று வரையில் என்னைத் திரும்பிப் பார்த்தீர் களா?' என்று குத்தலாய்க்கேட்டது அம்மலர், எங்களை. அச் சொல் எங்கள் உள்ளத்தில் சுருக்கென்று பாய்ந் தது. நேற்று வரையில் இம் மலர் இருந்தது யாருக்குத் தெரியும்? இன்று தான் ஏதோ மணம் வீசுகிறதே. இக் கொடியிலிருந்து கொண்டு ஏதோ கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவருகிறதே. இது என்ன வென்று பார்த்தோம். இப் பூ என்ன பேச்சுப் பேசுகிற தென்று எங்களுக்குள்ளேயே முணு முணுத்துக் கொண் டோம்; இம் மலரைக் கண்டு நாங்கள் அடைந்த ஆனந் தத்தில் இதன் குத்தல் பேச்சு எங்கோ மறைந்து விட்டது.

ஆம். உண்மைதானே. விடுதலையடைந்து வெளிப் பட்டவுடன் தன்னை அறியாமல் பேரின்பம் ஆட்கொள்ளு கிறது. அந்த இன்பத்தில் உலகமே ஒன்றிக் கிடக்கிறது. தான் இன்பமடைந்தால் அல்லவோ பிறரையும் இன் புறச் செய்ய இயலும். இந்த உண்மையை அறிந்தே நம் தலைவர்கள் யுத்த காலத்தில், 'எங்களை விடுதலை செய்யுங்கள். பிறகு நாங்களே உங்களுக்கு உதவுவோம்' என்று சொன்னார்கள் போலும்.

விடுதலையின் பெருமை சாமானியமல்ல. விடுபட்ட வனே மட்டும் இன்புறச் செய்யும் செயலாய் அதைக் கருதுவது குறுகிய நோக்கம். ராகுவால் கிரகணத்தில் மறைவுபட்ட சந்திரன், மறைவிலிருந்து வெளிவந்த வுடன் தன்னோடு நம்மையும் ஆனந்திக்கச் செய்ய வில்லையா? அவ் வானந்தத்தின் திளைத்ததின் விளை வாகவே காளிதாஸன் போன்ற கவிகள், 'ராகுவால் விடுபட்ட சந்திரன் போல்' என்று வர்ணித்திருக் கிறார்கள்.

அன்னை கங்காதேவியும் சிவபெருமான் செஞ் சடையில் அடைபட்டுக் கிடந்தாள், பகீரதன் பகீரதப் பிரயத்தனம் செய்தே அவளை விடுவித்தான். அந்தச் சிக்கலான சடையிலிருந்து விடுபட்ட கங்காதேவி நிச்சயமாய்ச் சந்தோஷ மடைந்திருப்பாள். ஆகிலும் அதிலும்பன்மடங்கு இன்பமுற்றது இப் பூவுலகல்லவா? பூமிதேவி தன்னைப் பாலனமாய்க் கருதுவது இந்தக் கங்கா தேவியின் ஸ்பரிசத்தாலேயே.

அவ்விதமே வால்மீகியின்உள்ளத்தில்அடைபட்டுக் கிடந்த கவிதாதேவி, ப்ரம்மதேவனின் அருளால் அன்று விடுபட்டாள். இன்னும் நம் அனைவரையும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தி வைத்திருக்கிறாள் அக் கவிதாதேவி. இந்த உண்மை விடுதலை யடைந்த

நம் பாரதத் தாயினிடத்து மட்டும் பொய்யாகுமா? விடுபட்ட பாரதத்தாய் உலகையே உய்ய வைப்பாள்.

இவ் வருஷம் ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி உலகமே இன்பப் பெருக்கில் மூழ்கிக் கிடந்தது யாருக்குத்தான் தெரியாது? இன்னும் வரும் காலத்தில் நமது அன்னை உலகிற்கு ஆனந்த மூட்டுவதையும் நாமே கண்டறிவோம்.

இன்று இன்பத்தில் மூழ்கிக் கிடந்தாலும் அம்மலரின் வரலாற்றைப் போல் பாரதத் தாயின் முன் வரலாறு மிகப் பரிதாபமானது. குந்தி தேவிக்கு மூன்றே புதல்வர். அவர்கள் எவ்வளவோ இன்னல்களுக்குள்ளாயினர். தம் மனைவி மக்களையும் துயரத்தில் ஆழ்த்தினர். ஆயினும் அன்னையின் பால் அவர்கள் கண்ணும் கருத்துமாயிருந்து அவளுக்குத் துன்பம் வராமல் காத்தனர். அவர்கள் காட்டிலிருந்தால் என்ன? நாட்டில் இருந்தால் என்ன? பிறருக்குத் தொண்டு தான் செய்தால் என்ன? தாயைத் துன்புறுத்தாமல் காத்த பெருமை அவர்களுக் குண்டு. பாரதம் வரையில் போவானேன்? தன் தாயின் தீர்க்க முடியாத மனக் குறைகள் அனைத்தையும் சிவாஜி ஒருவனே தீர்த்து வைக்கவில்லையா? நம் அன்னை பாரத தேவி நாற்பது கோடி மக்களை ஈன்றும் பயன் என்ன? நூற்றுக் கணக்கான வருஷங்கள் ஆகியும், அவள் கையில் கிடக்கும் விலங்கை அறுக்க இந் நாற்பது கோடியில் ஒருவன் கூடத் திறமை பூணவில்லை. அந்தோ, பரிதாபம்!

தம் மக்களின் அவல நிலையை அன்னை பாரததேவி அறிவாள். அதிலும் தாயுள்ளம் அவலக் குழந்தைகள் பால் அதிகம் அன்பு பாராட்டிற்று. தன்னைக்கண்டு குதூகலித்துத் தாவி வரும் குழந்தைகளை வாரியணைக்க முடியாமல் அவள் கைகளில் விலங்கு கிடந்தது. சில

சமயம் அவளைச் சிறை செய்த கொடிய அரசர்களால், கேலியாய்க் க்ருணையின்றி வாளர்ல் துண்டிக்கப்பட்ட அவள் குழந்தைகள், அவள் மடி மீதே புரளும். அவைகளைத் தடவவும் உதவாக் கைகளைப் படைத்தோமே என்று ஏங்கினாள் பல ஆண்டு. ஆயிரக்கணக்கில் தன் மக்களைக் கொன்று, தன் நெஞ்சத்திலே ஏறிக் கூத்தாடும் கொலை பர்தகர்களின் பாதம் பட்டுப் பதைத்தாள் பலநாட்கள். எப்பொழுதாயினும் அவள்பேதைக் குழந்தைகள் அன்னையின் துயரத்தை உணராமல் அவள் மடிமேல் படுத்துப் புரண்டு களியாடும். அந்நேரம் அவளுடைய பரிதாப நிலை அவளுக்கு நினைவு வந்துவிடும். துயரம் தாளாமல் வெம்பிய கண்களிலிருந்து, தன்னால் அடக்க முடியாமல் இரண்டு மூன்று துளிக் கண்ணீரையும் அக் குழந்தைகள் பேரில் உதிர்த்து விடுவாள். அதன் தாபம் தாளாமல் அக் குழந்தைக்ள் தவிக்கும் பொழுது அதைத் துடைக்க வேகமாய்க் கையை நீட்டுவாள். பாழும் விலங்கு குறுக்கிடும். முடிவாய் வேறு வழியின்றிப் பரமனையே சரணமாய்த் தியானித்து உள்ளத்திலேயே தனது தீராத் துயரம் தீரத் தவம் செய்வாள்.

நூற்றுக் கணக்க்ரன ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியத் தாயின் துயரம் பரமாத்மாவின் திருவுள்ளத்தில் பட்டது போலும். துயரத்தால் தாப முற்ற அவள் வயிற்றிலும், அவளுக்காகப் போராடும் புதல்வரும் தோன்ற ஆரம்பித்தனர். அப் புதல்வருக்குத் துயரம் ஒரு பொருட்டல்ல. விஷத்தில் தோன்றிய புழுவிற்கு விஷம் ஒரு பொர்ருட்டா? பர்ரத தேவியின் அம்மைந்தர்கள் துன்பங்களைப் பொறுத்தார்கள். அன்னை மலரடிகளே சரணம் என்று அறிந்தார்கள். பகைவரிடம் புது முறையில்போரிட்டார்கள். அவர்கள் செய்தபோராட்டம் பாரதப் போரைப் போல் பதினெட்டு நாள் போரல்ல.

ராமர்யணப் போரைப் போல் அறுபது நாட்களோடு முடிவடைந்ததுமல்ல. அறுபது ஆண்டு தொடர்ந்து நடத்திய போர். இறுதியில் பகைவனின் புறம் கண்டு களித்த போர் அது. போர் முடிந்தவுடன் அன்னையின் விலங்கைத் துண்டித்து அவள் மலரடிகளில் பணிந்து பரமானந்த மெய்தி மெய் மறந்து நிற்கிறார்கள், அப் போர்வீர மைந்தர்கள் இன்று.

இம் முறையில் அன்னையின் விலங்கை யகற்றி யதைச் சிலர் விரும்பவில்லை. விடுபட்ட கை ஒரு புறம் உடம்புடன் சேராமல் மரத்துப் போய் நிற்கிறது. விலங்கைத் துண்டிக்கும் தருணத்தில் ஏதோ தீங்கு விளைந்திருக்க வேண்டும். அத் தீங்கிற்கு விலங்கைத் துண்டித்தவரின் அஜாக்கிரதையே கர்ரணம் என்பது அவர்கள் கருத்து. நூற்றுக் கணக்கான வருஷங்களாக விலங்கிட்டுச் சுவாதீனமற்றிருந்த கைவிலங்கைத் துண்டித்தவுடன் உடம்புடன் சேர்ந்து விடுமா என்று அவர்களே யோசித்துப் பார்க்கலாம்; ரத்தவோட்டம் தடைபட்ட கை உடம்போடு ஒன்று பட எவ்வளவோ கஷ்டப்பட வேண்டும் என்று வைத்திய நிபுணர் கூறு வர். மேலும் யோசித்துப் பார்த்தால் விலங்கிட்டவன் தவறுதான் இது. விலங்கை விலக்கியவரின் குற்ற மல்ல என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். அது போகட்டும்.

இந்தியத் தாய் ஒருவள் மட்டும் அல்ல, இவ்விதம் விலங் குண்டு அடிமை வாழ்வு நடத்தியவள். அவள் சகோதரி நாடுகளும் பல ஆண்டுகள் துயரத்திற்கு ஆளாயிருக் கின்றனர். அவர்கள் தம் கைத்தளையை அறுக்கப் படாத பாடுபட்டுத் தம் மக்களையும் கோடிக்கணக்கில் பலி யிட்டிருக்கின்றனர். தளையைக் கழற்றிக் கொள்ளும் முறையில், நம் தாய் எவ்வளவோ பாக்கியசாலி அல்லது முறையறிந்த மதிசாலி என்றே கூறவேண்டும்.

அரசன் ஆயுத பலம் கொண்டு மக்களை வாட்டும் பொழுது, பேதை மக்களும் அதை எதிர்க்க அத்தகைய பலத்தையே நம்பி இருப்பது சரியன்று. அரசன் க்ஷத்திரியன்; க்ஷத்திர பலத்தைப் பலநாளாக வைத்துக் கொண்டிருப்பவன். அவன் குடிகளைத் துன்புறுத்து வானயின், குடிகள் அவனுக்கெதிராக க்ஷத்திர வேஷம் போட்டுக் கொண்டால் எவ்விதம் நிற்கும்? ஆளப்படும் குடிகளிடம் ஆளுபவன் சக்தி நொடிப்பொழுதில் நினைத்த மாத்திரத்தில் வருவது அசாத்தியம். ஆகவே இந் நிலையில் மனு காட்டிய முறையே மேல் என்று நம் புதல்வருக்குப் பாரதத்தாய் எடுத்துக் காட்டினாள்.

அரசனிடம் க்ஷத்திர பலமிருந்தால் குடிகளிடம் பிராம்ம பலமிருக்கிறது. அது க்ஷத்திர பலத்திலும் எவ்வளவோ மேல்பட்டது. விச்வாமித்திரன் வசிஷ்டன் மீது பாணங்களைச் சொரிந்தான். அஸ்திரங்களையும் பொழிந்தான். முடிவில் விச்வாமித்திரனின் கைகள் தான் துவண்டன. வசிஷ்டன் முகத்தில் தவழ்ந்த புன்னகையும் குன்றா ஒளியுடன் துலங்கிற்று. என்ன செய்வதென்றறியாத விச்வாமித்ரன் 'க்ஷத்திர பலத்தால் என்ன பயன்? பிராம்ம பலமே பலம்' என்று கூறிக்கொண்டு தவம் செய்து பிராம்ம பலம் பெறக் காட்டிற்குச் சென்றான்.

தென்னுப்பிரிக்காவிலும், பிறகு நம் நாட்டிலும் காந்தியடிகள் வசிஷ்டரின் முறையை அல்லவோ கையாண்டார்? தன்னைச் சார்ந்தவர்களுக்கு உபதேசித்ததும் அதுவே. தென்னுப்பிரிக்காவில் அவரை அடித்த கைகளே சளைத்தன. அவர் மனோபலம் குன்றவில்லை. காந்தியடிகளைப் பின்பற்றிய மக்களை விலங்கிட்டு நமது அரசாங்கமே சளைத்தது. இப்பொழுது அவருக்கு அந்த அரசாங்கம் அடிபணிந்தும்விட்டது. 'மந்திரத்தில்

மாங்காய் விழுமா?' என்று பிரம்ம பலத்தை ஏசினவர்களுக்கு மாங்காயை விழச் செய்து காட்டி இருக்கிறார் காந்தியடிகள்.

இந் நிலையிலும், நம் நாட்டு மக்கள் பிரம்ம பலத்தின் திறமையைக் கண்கூடாகக் கண்டும், அதன் அபாரசக்தியை உணர்ந்தும், அதை மறந்து அல்லது மறைத்து வருகிறார்கள். அத்துடன் நிற்காமல் நம்மை மிருக பலமாகும் க்ஷத்திர பலத்தால் ஆண்ட வகுப்பினரையே பின்பற்றுகிறார்கள். இந்தியத் தாய் இவர்களைக் கண்டு என்ன நினைப்பாளோ! அவள் அவ்வப் பொழுது ஆண்டவனை வேண்டி அவதரிக்கச் செய்து நிலை நாட்டப் பிரார்த்தித்த சக்தி பிராம்ம சக்தி. அவள் தன் மக்களை உய்விக்கத் தன் முயற்சியோடு தேடி வைத்த சக்தி அது. தாயின் விலங்கை விலக்கியாய் விட்டது என்று கொக்கரித்துக் கொண்டு, தன் மக்கள் தோன்றியவாறு நடப்பதை இவள் ஒப்பாமலிருப்பதில் ஆச்சரியமில்லை. தன் மக்களின் கொடிய போக்கைக் குலைக்கக் கோபம் கொண்டு, இவள் காளியாய்த் தோன்றினும் வியப்பில்லை. பிருதுமகாராஜனை வெறுத்துத் தன்னைப் புல் பூண்டுகள் கூட இல்லாமல் வறட்டிக் கொண்டவள் அல்லவோ இவள். கெட்ட வழியில் செல்லும் தன் மைந்தர்களை வெறுத்து அணையாமலிருப்பதை விட, கைகள் கட்டுண்டு கிடந்ததை மேல் என்று இவள் நினைக்கவும் இடமுண்டு. ஆகவே பாரத மக்கள் இத்தகைய எண்ணங்களுக்கு இடம் கொடாமலிருக்க வேண்டும் என்று பல பெரியோர்கள் கருதுகின்றனர்.

நாம் இங்குக் குறித்திருக்கும் க்ஷத்திர பலமும் பிராம்ம பலமும் ஜாதியைப் பொறுத்ததல்ல, வெறும் ஸ்தூலமான சரீர பலமும், யந்திர பலமும், அதிகார பலமும் க்ஷத்திர பலமாகும். மனோபலம், ஆத்மசக்தி, இவை பிராம்ம பலமாகும். இரண்டும் சேர்ந்து தான்

ஒரு ராஜ்யத்தை உய்விக்கும். க்ஷத்திர பலம் முறை தவறிப் போனால் பிராம்ம பலம் தான் அதை அடக்க வேண்டும். வேரூன்றிய க்ஷத்திர பலத்தை அற்ப மான க்ஷத்திர பலத்தோடு எதிர்த்தால் அதன் விளைவும் விபரீதமே.

இந்தப் பிரா்ம்ம பலத்தையே தா்மம் என்றும், தைவிகம் என்றும், பரலோகமாா்க்கம் என்றும் பல வகையாக் கூறுவர். க்ஷத்திர பலம் குடிகளைக் காத்தால் கவலையற்ற குடிகள் பிராம்ம பலத்தை வளர்ப்பார்கள். அதனால் இரண்டு பலமும் ஒன்று சேர்ந்து நாட்டைச் செழிக்கச் செய்யும்.

உலகிற்கே எந்தத் துறையிலும் வழி காட்டி, நம் தாய்நாடு. அவ்விதமே சுதந்திரம் பெறவும் புது வழி யாகும் பிராம்ம சக்தியைக் காண்பித்துக் கொடுத்திருக் கிறாள் நமது அன்னை. கிடைத்த சுதந்திரத்தைக் காக்கவும் அந்தப் பிராம்ம சக்தியாகிய தா்மமே உதவும். இதை எண்ணியே நம் தலைவா்கள் தா்ம சக்கிரத்தை அன்னையின் கொடியில் இட்டனா் போலும். அசோகன் இட்ட சக்கிரமும் இதுதான். தா்மசக்கிரமும் இதுவே. உலகிற்கு வரம்பாக இருக்கும் கா்ம சக்கிரமும் இது தான் எனலாம். பகவான் கையில் தாங்கிய சுதா்சன சக்கிரமும் இது என்பதிலும் தவறில்லை. இதெல்லா வற்றிற்கும் ஒரே பெயா் பிராம்ம சக்தி என்பா் நம் பெரியோா். இந்தச் சக்தியாகும் தைவிக மாா்க்கத்தைக் கடைப்பிடித் தொழுகுவதே நம் தாயின் இயல்பு. அதை நாம் கைவிட்டால் அவள் சுதந்திரம் அடைந்தும் என்ன பயன்? இதை நாம் உணா்ந்து அதன்படி ஒழுகுவதே விடுதலை யடைந்த தாய்க்கு நாம் செய்யும் அரிய தொண்டு.

---

# எச்சிற் பாண்டம்!

க. கணபதி

"பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசம்.............."

இப்படி ஒரு பாட்டு! ஏழைப் பரதேசி எவனோ தெருவில் பாடிக்கொண்டு போகிறான், தன் வயிற்றுப் பிழைப்புக்காக. ஆனால், அது ஒரு கூரிய அம்பைப் போல என் இதயத்தைத் தைத்தது. வெறும் பாட்டா அது? இன்று ஆணுலகம் பெண்ணை எப்படிக் கருது கிறது என்பதற்கு ஒரு சின்ன எடுத்துக் காட்டு.

பெண்—தெய்வம்; அவள் சக்திமாதா; பூ மகளும் நாமகளும் பெண்தான்—என்பதெல்லாம் ஏட்டில் எழுதிப்படிப்பதற்கும், மேடைப்பிரசங்கத்திற்கும் தான். கவிகளின் கற்பனை யுலகிலும் அது உலவலாம். வாழ்க் கையில்......? மக்கள் வாழ்வை வளப்படுத்தி, மண முள்ள தாக்கி, இன்பத்தையும் துன்பத்தையும் சம நோக்குடன் அனுபவித்து, 'தான்' என்பதையே ஒழித்து, ஆயுள் முழுவதும் தியாகத் தீயில் தயங்காது குளித்து, உயிர் வாழும் பெண் குலத்திற்கு—மாயப் பிசாசம் என்று பெயர்! வேண்டியதுதான், அப்படி யிருந்தும் பாசம் மட்டும் இன்னும் விடவில்லையே! அந்த நன்றி கெட்ட சுயநல இனத்துடன் கூடி வாழ்வதைத் தானே சுகமாகக் கருதுகிறது இந்தப் பாழும் ஜென்மம். எவ்வளவோ நிதானித்தும் என்னை விடவில்லையே இந்தப் பந்தம். தானாக அறுந்த தளையை மீண்டும் நானாகவே இறுகப்பிணைத்துக் கொண்டு......ஏன் இந்த அவதி? விதியின் விளைவாக மந்த மதியின் சதியா?

அன்றொரு நாள்......என் நெற்றியிலிருந்த குங்குமம் அழிந்தது. அல்ல—அழிக்கப்பட்டது. அத்துடன் என் இளமையும், பூரித்துக் குலுங்கும் என் எழிலும், பெண்மையின் தாபமும், இன்பக் கனவுகளும், துடிதுடிப்பும் அழிந்து விடவில்லை. எல்லையற்ற இன்ப வாழ்விற்கு வழி காட்ட, உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பொங்கும் வேட்கைக்கு ஆதர்சமளித்துச் சுடர் விட்டு எரியும் இதயக் கனல் அவிந்து விடவில்லை. ஆனால், நான் சமூகத்தால் வெறுக்கப் பட்டவள். வாழ்க்கையின்பத்தில் உரிய பங்கை மறுக்கப்பட்டவள். நான் ஒரு விதவை. இந்தப் பட்டமே என் தினசரி வாழ்க்கையை நரக வாழ்வாக்கப் போதுமானதாக இருந்தது. எனினும், அண்ணாவின் அன்பும், மன்னியின் ஆதங்கமும் என் மன வேதனைக்கு மாற்றாக இருந்தது. அதிலும் மன்னியை, சும்மா சொல்லக் கூடாது. அவள் போக்கே அலாதி. இளகிய மனசு. விரிந்த இதயம். அன்பின் வடிவம்.

ஒரு நாள் மாலை நேரம். மாடி அறையில் தனியே உட்கார்ந்திருந்தேன். மடியில் ஒரு புத்தகம் விரித்த படியே கிடந்தது. மனம் அதில் நாடவில்லை. இதயம் பாரமாக இருந்தது, நேரமானது கூடத் தெரியவில்லை. இருள் பட ஆரம்பித்தது. உட்கார்ந்தபடியே ஜன்னல் வழியாகத் தெருவை நோக்கினேன். வீடு தோறும் வரிசை வரிசையாக அகல் விளக்குகள் ஒளிக்கண் சிமிட்டி தேஜோ மயமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன, தெருவில் குழந்தைகள் கார்த்திகை சுற்றிக் கொண்டு குதூகலமாகக் கொட்ட மடித்தனர். யசோதா அழகாக அலங்கரித்துக் கொண்டு, தீபங்களைத் தூண்டுவதும் வாசலைப் பார்ப்பதுமாக, அவளுடைய கண்ணன் வரவிற்காகக் காத்திருந்தாள். மாலினி இன்பமே வடிவாக முகத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கி அலைமோத

அக்மகிழ்ந்து நின்ருள், பக்கத்தில் அவள் கணவன் அவள் 'ஆசை முகத்தில்' அன்புச் சுடர் விட்டெரியும் அகல் விளக்குகளின் பிரகாசத்தில் லயிப்புண்டு அப்போதை அநுபவிக்க.........

"ராஜி! என்ன செய்கிருய் இங்கே, தனியாக, நாளுங் கிழமையுமா......" இது என் மன்னி. என்னை யறியாமலே என் கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் வழிய ஆரம்பித்தது; அவளைத் திரும்பிப் பாராமலே,

"எனக்கென்ன...நாளுங் கிழமையும்...?" என்றேன்

"அசட்டுப் பிசட்டுண்ணு பேசாதே! கீழேவா. அண்ணு வருகிற நேரமாச்சு. அவர் வருகிறதற்குள் வேறு நல்ல புடவையாக உடுத்திக் கொள். வா. நான் தீப மெல்லாம் ஏற்றி விட்டேன்...வந்து பாரேன்..." என்று என்னை இழுத்துக் கொண்டே கீழே இறங்கினுள். இறங்கும் போதே—"அவர் கூட...உன் விஷயமாகத் தான் போயிருக்கிருர்......

"கல்யாண விஷயமாக......"

"மன்னி, நான் இங்கேயிருப்பது உங்களுக் கெல் லாம் பிடிக்காவிட்டால், சொல்லி விடுங்கள். நான் எங்கேயாவது......"

"என்ன படித்து என்ன! உனக்குக் கொஞ்சங் கூடப் புத்தியில்லை. காலா காலத்தில் ஒருத்தனைப் பார்த்துக் கொடுத்து விட்டால்...பிறகு போயேன்... அவனுடன் எங்கேயாவது,! நாலு பேரைப் போல நீயும்......"

"அதெல்லாம் இனி யெப்படிச் சாத்தியம்? நானும் நாலு பேரைப்போல இருப்பதென்ருல் நான் ஏன் விதவைப்பட்டம் வாங்கணும். உன்னைக் கெஞ்சிக்

கேட்டுக் கொள்ளுகிறேன் மன்னி. எனக்கு ஏதாவது வேலை பார்த்து வைக்கச் சொல்லு அண்ணவை. நான் தனியாக......"

"அழகாய்த் தானிருக்கிறது! எங்கள் கண்ணிருக்கும் வரையில் அது முடியாது, அவன் துரதிருஷ்டக்காரன்! உன் அழகையும் அன்பையும் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. அதனல் உன் வாழ்வே சோபிக்காமல் இருளடைய வேணுமா? அவர் கூடப் பாடுவாரே.

"பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ......

கலா காலத்தில்...அவரவர் வாழ்வில்......"

"நடக்க வேண்டியது தான் நடந்து விட்டதே! இனி நாலு பேரறிய யார் என்னைக் கைப்பிடிப்பார்கள்? என் வாழ் நாள் முழுதும் கெளரவமாக வைத்திருப்பார்கள்! ஒருவர் முகர்ந்த புஷ்பத்தை வேறு யாராவது தொடுவார்களா?"

"அன்றலர்ந்து அன்றே வாடும் மலரையும் வாடா மலரான மங்கையையும் உவமிப்பது பிசகு. மேலும் நீ மலர்வதற்கு முன்பே தான்......"

இதற்குள் அண்ணவும் வந்து விட்டார்,

"அவருக்கு வயது 28 தானிருக்கும்......கல்லூரி ஆசிரியராம்......முதல் மனைவி இறந்து விட்டாள்...... கன்னி விதவையாக இருந்து, பெண்ணும் பிடித்திருந்தால்... கல்யாணம் செய்து கொள்வதாக..."

என்ன தாராளம்! பெண் அழகாக, கன்னிப் பெண்ணுக...! ஆனல், அவருக்கும் இரண்டாம் தாரந்தானே! இரண்டாவது என்ன! புருஷர்களுக்கு...இதெல்லாம் கணக்கா......!

சில தினங்களுக்குப் பிறகு வந்தார். என்னைப் பார்த்தார். அவருக்குப் பிடித்து விட்டதாம். எனக்கு இஷ்டம் தான்! ஆனால்......ஆனால்...... அவர் என்னிடம் முழு நம்பிக்கை கொள்வாரா? என்னிடம் முழுமனதுடன் அன்பு கொள்வாரா? அல்லது......ஏதோ கடனுக்கு என்கிற விதத்தில் அவருடைய சம்பளமில்லாத சமயற்காரியாக......தன் அவசியத்தின் நிமித்தம்......

பெண்கள் மட்டும் புருஷர்களுடைய நட வடிக்கைகள் எப்படியிருந்தாலும் அதைப் பாராட்டாமல், எப்படியோ மன்னித்து விடுகிறார்கள். ஆனால் இவர் என்னை—பெயரளவில் தான் என்றாலும் இன்னொருவர் மனைவியாக இருந்தவளை—தாராளமாக முழு மனதுடன் ஏற்றுக்கொள்வாரா? அவர் இதயத்தில் எனக்கு உரிய ஸ்தானத்தைத் தருவாரா?

தை பிறந்தது. என் புதுவாழ்க்கைக்கு வழியும் பிறந்தது.

மன்னி தன் மலர்ந்த முகத்துடன், நெற்றியில்—என் பாழடைந்த நெற்றியில்—மீண்டும் குங்குமத் திலக மிட்டாள். எனக்கு—என்னவோ போல இருந்தது, உடலெல்லாம் விதிர்விதிர்த்தது, ஒருவித விசித்திரமான உணர்ச்சியைக் கிளறிவிட்டது. என் பிரமை கலையு முன்பே புரோபசர் ஆனந்தர் எனக்கு மாலையிட்டு, 'நாலுபேரறிய' என் கையைப் பிடித்தார்.

என்ன தான் கனவு போல இருந்தாலும், அந்தப் பழைய கல்யாண நினைவுகள் வந்து என்னை அலைக்கழிக்காமல் இருக்கவில்லை. நான் இன்னொருவர் மனைவியாக இருந்தவள், நான் ஒரு விதவை—என்பதை யெல்லாம் என்னால் மறக்க முடியவில்லை. ஏதேதோ எண்ணற்ற சிந்தனைகள் என்னைப்பற்றி உலுக்கின, என்னை

அறியாமலே என் கண் கலங்கியது. உணர்ச்சி மேலீட்டால் தொண்டை விம்மியது.

கண்களை மூடிக்கொண்டு, துணிச்சலாக, ஒரு புது உலகில் காலையெடுத்து வைத்து விட்டேன். அங்கே வரவேற்பு எப்படியிருக்குமோ! என் வாழ்க்கை எப்படியிருக்குமோ என்ற பயம் மட்டும் என்னை விட்டகலவில்லை. ஆனால் என் புது வீட்டில் அடி எடுத்து வைத்ததுமே நான் கண்ட கனவுகளும், கொண்ட பீதியும், அவநம்பிக்கையும் அனுவசியமானவை என்றுணர்ந்தேன். வீட்டில் நானும் அவருந்தான். வேறு யாருமில்லை. எங்கள் பழைய வாழ்க்கையின் நினைவு எதுவுமின்றி, வெகு சுமுகமாக, இன்பமாக் நாட்கள் பறந்துசென்றன. நான் விதவை—என்று என் மனதில் ஊறிப்போய்க் கிடந்த எண்ணங்கூட என் மனதை விட்டு மாயமாக மறைந்து விட்டது. அவரும் சாதாரணமாக், தன் முதல் மனைவியைப் பற்றியோ, அந்தக் கால வாழ்க்கையைப் பற்றியோ என்னிடம் பிரஸ்தாபிப்பதே கிடையாது.

ஆனால், சில சமயங்களில், ஒரு விஷயம் மட்டும் என் மனதை உறுத்தும்: “அவர் தினந்தோறும் மாலையில், மாடியிலுள்ள ஓர் அறையில் புஷ்பத்துடன் நுழைவார். அங்கே யிருக்கும் ஒரு பெண்ணின் உருவப் படத்திற்கு அதைச் சாத்திவிட்டு, ஐந்து நிமிஷ நேரம் அப்படியே மெய்மறந்து நிற்பார். அதைக் காணுந்தோறும் எனக்கு என்னவோ போல, எதையோ பறி கொடுத்ததைப்போல இருக்கும். மற்ற சமயங்களில் அந்த அறையில் சாதாரணமாக் யாரும் நுழைவதில்லை. அவர் இல்லாத வேளையில் நான் தனியாக ‘திருட்டுத்தனமாக்’ மெல்ல நுழைவதுண்டு. அறை முழுவதும் அவள் போட்ட ‘எம்பிராய்டரி’

அது இது என்று அவளுடைய் ஞர்பகச் சின்னமாக, அவளுடைய 'மியூசியமாகவே' இருக்கும். 'அவளும்' அழகிதான். ஆனல்......என்னை விடப் பிரமாதமர்க அழகில்லை என்பதுதான் என் இதயத்தின் ஆழத்திலிருந்து வந்த தீர்ப்பு. எனினும் அவள்,—ஒரே வருஷந்தான் என்றாலும்—அவருடன் உலகமறிய அவருடைய் மனைவியாக வர்ழ்ந்தவள்தர்னே ! அவர் இப்போது எவ்வளவோ வர்ஞ்சையுடன் கொஞ்சிக் குலவி என்னை மகிழ்வித்தர்லும், அவளைப்பற்றிய அந்தரங்க நினைவுக்ளும், இன்பக் கேளிக்கைகளின் இரகசிய எண்ணங்களும் அவருடைய இதயத்தின் ஆழத்தில் தேங்கிக் கிடக்காமலா இருக்கும்! அவர் ஆர்வமுடன் என்னைத் தழுவும்போது கூட, அவளுடன் உறவாடி மகிழ்ந்த பழைய நினைவுகளும் வந்து குறுக்கிடத்தானே செய்யும்.

" அப்படியர்னல் என்னை இதயபூர்வமாகக்காதலிப்பதாகச் செர்ல்ல முடியுமா ? அவருடைய முழு அன்புக்கும் பர்த்திரமர்னவள், அவருடைய இதய முழுவதுமே ஆக்ர்ஷித்த இதயராணி என்று நான் பெருமிதங்கொள்ள முடியுமா ? உலகப் பார்வையில், உரிமையுள்ள மனைவியென்று வேண்டுமானல் சொல்லிக் கொள்ளலாம். ஆனல் பார்க்கப் பேர்னல்...பாவம்...அவர் நிலையில்...அவர்...என்னை எவ்வளவு ஆர்வமுடன் பாராட்டுகிருர் ! எவ்வளவு ஆதரவுடன் நடந்து கொள்ளுகிருர் ! கல்லூரி நேரத்தைத் தவிர, என்னை விட்டுச் சற்று நேரமாவது பிரிந்து இருக்கிருரா ? போயும் போயும் ஒரு நாளைக் கெல்லாம் ஐந்து நிமிஷ நேரம் அவளுக்கு, அன்புடன் வாழ்க்கை நடத்திய மனைவியின் நினைவிற்கு அர்ப்பணம் செய்தால் அது கூடக் குற்றமா? அது அவருடைய் பெருந்தன்மையையும், அவருடைய மனப் பண்பையும் விசால இருதயத்தையுந் தானே

எடுத்துக் காட்டுகிறது. அதற்காக அவரைப் போற்றத் தானே வேண்டும். ஒரு வருஷம் துணைவியாக இருந்த வளையே அவர் இவ்வளவு போற்றினால்...இன்று அவள் கேவலம் ஒரு நினைவு! ஆனால் உயிரும் உருவமும் உணர்ச்சியும் நிறைந்த, நிதர்சனமான உண்மை. இப்பொழுது நான் என்ன? ...உனக்கு எந்த விதத்தில் குறைவு வைத்திருக்கிறார்? உன்னைத் தெய்வமாகத்தானே பூஜிக்கிறார். அவர் உன்னுடன் இருக்கும்போது அவர் கண்களில் ஒளிரும் ஆர்வத்தைக்கூட உன் பெண் மனம் புரிந்து கொள்ளா விட்டால்......இந்த ரீதியில் சமாதானங்களும் எழும். இறுதியில் என் சபலங்களும் சந்தேகப் பேய்களும் ஓடி ஒளிந்தன. மனக்குறைகளும், குமுறல்களும் என் மனக் குகையிலேயே மடிந்தன.

நேற்று இரவு சாப்பாடானதும் மாடி மேல் தளத்தில் ஜமக்காளத்தை விரித்து விட்டு வழக்கம் போல, கையில் தாம்பூலத் தட்டுடன் உட்கார்ந்தேன். நிலவு பால் வெள்ளமாகப் பரவிக்கிடந்தது. அவர் என் மடியில் தலையைச் சாய்த்துக்கொண்டு, ஒரு கையால் என்னைத் தழுவியபடி என்னையே ஆர்வமுடன் பார்த்துக் கொண்டிருந்தார். நானும் அவரின் தலையை வருடிய வண்ணம் இன்பக் கனவுகளில் மிதந்து கொண்டிருந்தேன். என் மனம் என்றுமில்லாத அளவிற்கு ஆனந்த லாகிரியில் இறுகிக் கிடந்தது, விண்ணில் பறப்பது போன்ற உணர்ச்சியும் ஊற்றெடுத்தது.

“இன்று சினிமாவுக்குப் போகலாமா?” என்றேன், மௌனத்தைக் கலைக்க.

“நாமிருவரும் இங்கே சொந்தமாக இன்புற்றிருப்பதைவிட, சினிமாக் காட்சி உனக்கு அதிக இன்பமளிக்குமா?”

வாஸ்தவந்தானே! இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று ஊமையானேன். "இன்று நான்... மிகவும் அதிருஷ்டசாலி. ஆனல், இரண்டு வருடத்திற்கு முன்பு" என்று ஆரம்பித்தவர் சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டு, "நீயர்ரேர்... நான்யர்ரோ— மீண்டும் மௌனம். ஆனல் அவர் கை என்னை அவருடன் இன்னும் இறுகப் பிணைத்தது. பிறகு "நீ—உன் முதல் கணவனுடன்—?"

சற்று நேரம் அவரையே பார்த்தேன்,

"அதெல்லாம் எனக்கு நினைவுகூட இல்லையே! சிறு வயதில் நடந்த கல்யாணம்."

"அப்படியானல்......வயது வந்த பிறகு......ஒரு முறைகூடச் சந்திக்க வில்லையா? பேசவில்லையா?"

"ஆமாம்.........ஆனல்"

என்னத்தைச் சொல்லுகிறது! இல்லை யென்றே சொல்லிவிடலாமா? ஆனல்......இதை ஏன்......... மறைக்கவேண்டும்......? ஆனல்...... இது என்ன சங்கடம்-என்று நீண்டபெருமூச்சு விட்டேன்.

"என்ன, தயங்குகிருய்?"

"......உங்களிடம்......எப்படிச் சொல்லுகிறது?"

"பாதகமில்லை.........சொல்லு"

"நீங்கள்...... வந்து...... அதை......"

"......இல்லை......சும்மா சொல்லு"

"எனக்கு வயது வந்த பிறகு அவரை நான் சந்தித்ததே ஒரே ஒரு முறைதான். அப்பொழுது அவர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். ஒரு நாள் முழுவதும் இருந்துங்கூட அவரை நான் தனிமையில் சந்திக்கவேயில்லை. மாலையில், அவர் வீட்டில் இல்லாத சமயம்,

ஏதோ காரியமாக மாடி அறைக்குப்போனேன். சற்று நேரத்திற்கெல்லாம் யாரோ வருகிற காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பினேன். அவர்தான்! எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. என்ன செய்வதென்றறியாமல் திகைத்துத் தலை கவிழ்ந்து நின்றேன். "நான் ஒருவன் உயிரோடிருக்கிறேன் என்ற நினைவுகூட இல்லையா ராஜி! இன்று முழுவதும் என் கண்ணிலேயே பட வில்லையே! இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி ஏமாற்றப்போகிருய்......எனக்கு இந்த வருஷப் படிப்பு முடிந்ததும்........." என்று நகைத்தார். நான் மெல்ல நிமிர்ந்து பார்த்தேன்.

"இந்தா புஷ்பம்" என்று கையை நீட்டினர். வேறு வழியின்றி நானும் கையை நீட்டினேன். புஷ்பத்தைக் கொடுத்தபடியே...... என் கையைப் பிடித்தார்......

சற்று நிறுத்தினேன்.

"ஊம்...... அப்புறம்......?" என்றார் இவர்.

கதையைத் தொடர்ந்து,—"நான் திமிறினேன். ஆனல் அவருடைய இன்னெரு கையும் என்னை வளைத் துக்கொண்டு......அவர்...மார்புடன் இறுகப் பிணைத் தது......."

"பிறகு?"

"இன்னது செய்வதென்று தெரியவில்லை...... உட லெல்லாம் குப்பென்று வியர்த்தது. கைகால் நடுங்கி யது. மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. தொண்டை விம்மியது. பேச நாவெழவில்லை. அழுகை யும் ஆத்திரமும் பொங்கி வந்தது......என்னிடம் கூட உனக்கு......ஏன் இந்த வெட்கம்......" என்று சொல் லிக் கொண்டே என்னை......முத்தமிட்டார்......

"என்ன?" என்று உறுமினர்.

நான் பதில் பேசவில்லை. என்னைத் தழுவியிருந்த கைகள், நெருப்பைத் தொட்டது போலப் பதறி விடுபட்டன. துள்ளிக் குதித்து எழுந்தார்.

" வெட்கங்கெட்ட விபசாரி......எச்சிற் பாண்டம்!"

துக்கம் என் தொண்டையை அடைத்தது...... விம்மி விம்மி அழுதுகொண்டே " சத்தியமாக்...... நான் வேறொன்றும்...... "

" வேறொன்றுமா?......இது போதாதா?...... பசாங்குக்கார நீலி! நீ இன்னும் என்னதான் செய்திருக்கமாட்டாய்! அவனுடன் வெட்கங் கெட்ட முறையில் கூடிக் குலாவிக் கொட்டம் மடித்துவிட்டு, கன்னிப் பெண் என்று பச்சைப் பொய்சொல்லிப் பசப்பி, வஞ்சகமாக என் கழுத்தைக் கட்டிக்கொண்டாயே! துரோகி! விபசாரி !!......" என்று இரைந்துகொண்டே அறைக்குள் போய்விட்டார்.

நான் விபசாரியா? ஐயோ! நான் எச்சிற்பாண்டந் தானா?

அவரும் எனக்கு முன் ஒரு மனைவியை மணந்து அவளுடன் கூடிக் குலாவி மகிழ்ந்தவர் தானே. அதனால் அவர் உடலிலும் உள்ளத்திலும் மாசு படியவில்லையா? எனக்குமட்டும் ஏன் இந்த அவதூறு? பெண்ணாய்ப் பிறந்த தோஷமா?

அன்று மன்னி சொன்னாள், 'பெண்கள் வாடாத மலர் என்று,' ஆனால்நான் இன்று—மணத்தையும் நலத்தையும் நுகர்ந்த பின் கசக்கி யெறியப்பட்ட மலர்! முன்னே வெறும் விதவை. இப்பொழுதோ......எச்சிற் பாண்டம்! விபசாரி!

இனி என் கதி?

தேவாநாம்பிரிய பிரியதரிசி

# அசோகர்

(கி. மு. 274-232)

---

"தருமதாசர்"

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று பண்டைத் தமிழ் நூல் பகர்கின்றது. 'திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்று ஆழ்வார்பெருமானார் கூறுகின்றார். 'அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ?' என்று மனுச்சோழன் வினவுகின்றான். 'குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி, மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்பமல்லது தொழுதக் கில்லது' என்று சேரன் செங்குட்டுவன் வெறுத்துக் கூறுகின்றான். இவ்வாறு அரசன் கடமைகளை விதந்து கூறும் நூல்கள், வேறு மொழிகளிலும் பலவாக உள்ளன.

இத்தனை அருமைப்பாடுள்ள அரசாட்சியைச் சீரும் சிறப்புமாய் நடத்தி, தம் பிரஜைகளுக்கு எல்லா வழிகளிலும் நன்மை செய்து, நற்புகழ் எய்திய மன்னர்களை உலகம் என்றும் கொண்டாடும் என்பது ஒருதலை. அவர்களின் பெயர்க்குக் காலத்தால் அழிவில்லை. அத்தகைய மன்னர்களுள் நம் பரதகண்டத்தை ஒரு குடையின் கீழ் ஆண்ட அசோகர் என்ற மன்னரின் பெயர், நம் நாட்டில் மட்டுமன்றி, உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலுமுள்ள மக்களால் இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது என்பது நமக்கொரு பெருமையை விளைப்பதாகும். அவருடைய கொடியில் அமைந்த சக்கரத்தை யன்றோ விடுதலையடைந்த நம் இந்தியா இன்று தன்

கொர்டியில் அமைத்துக்கொண்டிருக்கிறது! அப்படிப் பட்ட அசோகர் யார்? அவர் புகழுக்குக் காரணம் யாது? என்பனவற்றை அறிவது இன்றைய தமிழ் மக்களுக்கு விருப்பங் கொடுப்பதே யாகும்.

பிறப்பும் இளமையும்

பாடலீபுரத்தில், தென்னிந்திய அந்தணச் சிரேஷ்டரான சாணக்கியர் என்ற சான்றோர் ஒருவரின் உதவியால், மௌரிய வமிசத்தை நிறுவிய சந்திரகுப்தன் என்ற மன்னன், கி. மு. 323 முதல் கி. மு. 299 வரையில் அரசாண்டு வந்தான். அவனுடைய சாம்ராஜ்யம் ஆப்கனிஸ்தானம் முதல் மைசூர் வரையிலுமுள்ள நாடுகளைக் கொண்டதாயிருந்தது. அவனுடைய குமாரன் பிந்துசாரன் என்பவன் கி. மு. 299 முதல் இருபத்தைந்து ஆண்டுகள் ஆண்டுவந்தான். அவனுக்கும் அவனுடைய இராணியான தர்மா (சுபத்ராங்கி என்று சில வரலாறுகள் கூறுகின்றன.) என்பவளுக்கும், பாரத நாடு செய்த அருந்தவப் பயனால், கி. மு. 304 ல் அசோகர் அவதரித்தார். அவருக்குப் பல சகோதரர்கள் இருந்தனரென்றும், அவர்களுள் சுமனு என்றவர் மூத்தவர் என்றும், திஷ்யா என்றவர் இளையவர் என்றும் இம் மூவருமே பிந்துசாரனின் மக்களுள் சிறந்தவர்கள் என்றும் வரலாறுகள் கூறுகின்றன.

அசோகரின் இளமையைப் பற்றி வரலாறுகள் ஒருதலையாய்க் கூறவில்லை. என்றாலும், அவர் தம் சகோதரர் எல்லோரினும் சிறந்த வீரராக விளங்கினரென்றும், அவர் தம் இளமையில் உஜ்ஜயினியிலிருந்து (சிலர் தக்ஷசிலத்திலிருந்து என்பர்) அதனைச் சுற்றிய நாடுகளை அரசப்பிரதிநிதியாக விருந்து ஆண்டுவந்தாரென்றும், பிந்துசாரன் இறந்த பின்பு அவரே அரசராக ஆகிவிட்டாரென்றும் அவ் வரலாறுகள் கூறுகின்றன.

முடி சூடல்

அசோகர் கி. மு. 270-ல் முடி சூட்டிக் கொண்டார் என்றறிகிறோம். ஆனால் அதற்கு முன் நான்கு ஆண்டுகள் அவர் முடி சூட்டிக் கொள்ளாமலே அரசியலை வகித்து வந்தார். அப்பொழுது அவர் தேவாநாம்பிரியர், பிரியதரிசி என்ற இரு பட்டங்களையும் ஏற்றுக்கொண்டார். தேவாநாம்பிரியர் என்ற தொடர்க்குத் 'தெய்வங்களால் விரும்பப்பட்டவர்' என்பது பொருள்; பிரியதரிசி என்றதற்கு 'எதையும் அன்புடன் காண்பவர்' என்பது பொருளாகும். இப் பட்டங்கள் மௌரிய மன்னர்கள் பலராலும் கொள்ளப்பட்டனவே யானாலும், இவை அசோகருக்குப் பொருந்தின தன்மைபோல வேறெவருக்கும் பொருந்தவில்லை யென்பது பின்வரும் வரலாறுகளால் விளங்கும். அசோகர் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தைத் தம் பிதிரார்ஜிதமாகப் பெற்றார் என்பதை முன்பே கண்டோம். இப்பொழுது தென்னிந்தியா என்று சொல்லப்படும் பகுதியொன்றே அவருடைய ஆளுகைக்கு உட்படவில்லை. வட இந்தியா முழுவதும், நேபாளமும், வடமேற்கிலுள்ள பாரசிகம், ஸிரியா நாடுகளின் எல்லைவரையிலும் உள்ள நாடுகளும் அவருக்கு அடங்கியிருந்தன. இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை அசோகருக்கு முன்னும் பின்னும் எவரும் ஆண்டதில்லை என்றும் அறிந்தோர் கூறுவர்.

கலிங்கப் போர்

அசோகர் சிங்காதனம் ஏறி எட்டு ஆண்டுகளுக்குப் பின், தெற்கேயுள்ள கலிங்க நாட்டின் மீது அவர் படையெடுத்தார். மகா அலெக்ஸாண்டர் என்ற கிரேக்க மன்னரின் தூதுவரான மெகாஸ்தனிஸின் காலத்தில் கலிங்க மன்னனிடம் 60,000 காலாட் படைகளும், 1000 குதிரை வீரர்களும், 700 போர்க் களிறுகளும்

இருந்தன என அவர் கூறியிருக்கின்றார். இவ்வாறிருந்தது சந்திர குப்தனின் காலத்தில். அதன்பின் கலிங்க மன்னன் தன் படையை மிதமிஞ்சிப் பெருக்கிக் கொண்டான். அவன்மீது அசோகர் படையெடுத்தார். கடும் போர் நடந்தது. அதனால் கலிங்கர்க்கு உண்டான நஷ்டத்துக்கு எல்லை யில்லை. அப் போரில் ஒரு லக்ஷம் கலிங்கர் கொல்லப்பட்டனர்; பல லக்ஷம் பேர்கள் பிற வழிகளால் மாண்டனர்; ஒன்றரை லக்ஷம் பேர்கள் நாடு கடத்தப்பட்டனர். (இப் புள்ளிகள் பொய்யாக மாட்டா. அக் காலத்துக் கலிங்கர்கள் சிறந்த தேசாபிமானிகளா யிருந்தனர். இன்று கலிங்க நாட்டின் ஜனத் தொகை 50 லக்ஷம் பேர்; அசோகர் காலத்தில் அது 75 லக்ஷமாக இருந்திருக்கக் கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நாட்டின் ஜனத் தொகையில் 100-ல் 8 பேர் போரிற் சேர்ந்திருப்பது அக் கால வழக்கம் என்று அறிஞர் கூறுவர். ஆக்வே மேலே காட்டிய மேற்கோளின்படி கலிங்கப் போரில் 5½ லக்ஷம் வீரர்கள் அழிந்திருக்கக் கூடும் என்பது நம்பத்தக்கதே.)

இந்தப் பேரழிவைக் கண்ட அசோகரின் மனம் பதைபதைத்தது. தம் சுற்றத்தார் அனைவரையும் கொன்று போரில் வெற்றியடைந்த தருமபுத்திரரின் மனம்போல் அவர் மனம் பரிதபித்தது. அவர் புதிய மனிதரானார்; அவர் தம் நடவடிக்கைகளிலும் அரசியல் முறைகளிலும் முற்றிலும் மாறினவரானார். தர்ம நெறியின் வெற்றியே உண்மையான வெற்றி என்பது அவருக்குப் பட்டது. அதனைப் பின்பற்றுவதற்கே அவர் உறுதி செய்து கொண்டார். அவர் மதக் கொள்கையும் முற்றிலும் மாறுபாடடைந்தது. அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட பௌத்தமதமே அவர் மனத்துக்கு ஏற்றதாயிற்று. கலிங்கப் போருக்கு முன்பே அவர் புத்தபகவானின் உபதேசங்களில் மனம் நாடின

வராயிருந்து, அவற்றைப் பின்பற்ற முயன்று வந்தார். கலிங்கப்போர் அவரை முழுப் பௌத்த மதத்தினராக மாற்றிவிட்டது.

இப் போரையும் இதனால் விளைந்தவற்றையும் பற்றி அக் காலத்தில் கல்லில் பொறித்து வைத்த வற்றை (ஷாபஸ்கர்ஹி என்ற இடத்திலுள்ள கற்பாறை யில் செதுக்கப்பட்டவை) ஒருவாறு மொழி பெயர்த் துக் கீழே தருவோம்.

“தெய்வீகமும் மாக்ஷிமையும் நிறைந்த மன்னர் பிரான் முடிசூடிக் கொண்டு எட்டாண்டு ஆனபோது கலிங்கம் வெல்லப்பட்டது. அங்கிருந்து வெளியேற்றிக் கொண்டுவரப்பட்டோர் ஒன்றரை லக்ஷம் பேர்களாவர்; லக்ஷம் பேர்கள் கொல்லப்பட்டவர்கள்; பல லக்ஷம் பேர்கள் இறந்தவர்கள்

“கலிங்கம் சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளப் பட்டது. அதன் பிறகு தெய்வீகம் பொருந்திய மன்னர்பிரான் தர்மத்தை அதிகமாக் ஆதரிக்கவும் அதனைப் பிறருக்கு உபதேசிக்கவும் தொடங்கினர். கலிங்கத்தை வென்றதால் அவருடைய மனம் துக்கத் தில் ஆழ்ந்தது. ஒரு சுயேச்சையுள்ள தேசத்தைப் பலாத்காரத்தால் அடக்கும்போது கொலை, சாவு, வெளி யேற்றம் முதலியன சம்பவிப்பது சகஜமே; இவை மன்னருக்கு மிகுந்த மனப் புண்ணையும் துக்கத்தையும் உண்டாக்கின. அங்குள்ள பிராமண, சிரமணத் துறவி களும், பிற மதங்களைப் பின்பற்றுகிறவர்களும், குடும் பஸ்தர்களும் நல்லொழுக்கங்களைக் கொண்டவர்களாய் இருந்திருக்கக்கூடும். பெரியோர்கள், பெற்றோர்கள், குருக்கள் இவர்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாகவும், நண்பர், துணைவர், உதவியாளர், உறவினர் வேலைக்காரர், முதலியவர்களிடம் அன்புடையவர்

கள்ாகவும் இருந்திருக்கக் கூடும். அப்படி அன்பு கொண்டவருக்குத் துன்பமோ, சாவோ, நாடு கடத்தப் படுதலோ நேரும்போது அவர்களுக்குப் பெருந்துன்பம் உண்டாகுமே என்றெண்ணி அரசர் மனம் புழுங்கினர்.

"ஆபத்தில்லாமல் தாமிருக்கும் இடங்களிலே சௌக்கியமாய் இருப்பவர்களுக்கும், தம்மால் நேசிக்கப் பட்டவர்களுக்கு வரும் துக்கம் பாதிக்கு மன்றோ?

"மனத்தாங்கல் எல்லோருக்கும் உண்டு என்ருலும் மன்னருக்கு உண்டான துக்கம் மிக அதிகமாயிருந்தது. இறந்துபோனவர்கள், காயம்பட்டவர்கள், சிறை பிடிக் கப்பட்டவர்கள் ஆகிய இவர்களின் தொகை மிகக் குறைவாயிருந்தாலும் அவர் மனம் மிகவும் புண்ணடைந் தது. ஒருவன் ஒரு குற்றம் செய்தாளுல், அக் குற்றம் மன்னிக்கப் படத்தக்கது என்று அவர் மனத் தில் பட்டால் அதை மன்னித்துவிடவேண்டுமென்பது அவர் கொள்கை. அவர் ஆட்சியின் கீழ்ப்பட்ட காட்டு மக்களைக்கூட அவர் தம் வாழ்க்கை முறைக்கு மாற்றி விட வேண்டுமென்பது அவருடைய அவா. எல்லா மக்களும் துன்பங்களிலிருந்து விடுபட்டு, ஆசைகளை யடக்கி, எல்லாரிடமும் சமபுத்தியுடன் நடந்துகொண்டு, மகிழ்ச்சியுடன் வாழவேண்டுமென்பது அவருடைய விருப்பம்.

"தர்மவிஜயம் அல்லது ஆத்மீக வெற்றியே சிறந்தவெற்றி என்பது மன்னருடைய எண்ணம். இந்த வெற்றியை அவர் தம் ஆளுகைக்குட்பட்ட நாடுகளிலும், அந் நாடு களின் எல்லைகளுக்கு 600 யோஜனைகளுக்கப்பாலுள்ள ஆண்டியாக்தஸ் என்னும் யவன மன்னர் ஆளும் நாட்டி லும் (Antiochos II Theos Syria 261-246), அந் நாட் டுக்கும் அப்பாலுள்ள டாலமி (Ptolemy II Philadel phos of Egypt 285-247 B. C), ஆண்டிகோனஸ்

(Antigonos Gonatos of Macedonia 278-239 B. C.), மாகஸ் (Magas of Cyrene-west of Egypt-300-258 B. C), அலெக்ஸாண்டர் (Alexander of Epirus 272-258 B. C.) ஆகியவர்கள் ஆளும் நாடுகளிலும், தெற்கே சேர்ழர்கள் பாண்டியர்கள் நாடுகளிலும், தாம்ரபார்ணி (இலங்கை) வரையிலுமுள்ள நாடுகளிலும், அசோகர் தர்மத்தைப் பரப்பினர். அரசர் ஆளுகைக்குட்பட்ட யவனர்கள் (அசோக நாட்டிற்குட்பட்ட அபராந்த மார்க்கணங்களில் குடியேறினவர்கள்), கபர்க்கர்கள் (இமாலயப் பிரதேசத்திலுள்ளவர்கள்), பிதினிகர்கள் (விதர்ப்ப நாட்டினர்கள்), ஆந்திரர்கள், பளிதர்கள் (விந்திய மலையோரத்திலுள்ளவர்) ஆகியோர்களும் மன்னர்பிரானின் மதக் கட்டளையைப் பின்பற்றுகின்றனர். மன்னர் பிரானின் தூதர்கள் செல்லாத நாடுகளிலும் தர்மத்தின் கட்டளைகளைக் கேட்டுப் பின் பற்றுகிருர்கள். இவ்வாறு எல்லா இடங்களிலும் மன்னர் பெற்றுள்ள தர்மவெற்றி, பிற உயிர்கள் பால் அன்பினை விளைப்பதாகும். இந்த அன்பு அளவிற் குறைவாயிருந்தாலும், இதனல் உண்டாகும் பயன் இவ் வுலகத்துக்கு அப்பாலும் செல்லத்தக்க தொன்றுகும்.

"இந் நோக்கம் கொண்டே இம் மதக் கட்டளையைப் பிறப்பித்துள்ளோம்; எம் பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் இந்த வெற்றியைத் தவிர மற்றொரு வித வெற்றியைக் கருதுதல் கூடாது. வேறுவிதமான ஒரு வெற்றியை அவர்கள் விரும்புவார்களாஞலும், மன ஆசையை அடக்கி, தண்டனையைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். இந்த உலகத்திற்கும் மறு உலகத்திற்கும் பயன்படக் கூடிய வெற்றி தர்ம வெற்றியே. இந்த மன ஒழிவு பெறுவதே உண்மையான துறவால் உண்டாகும் மகிழ்ச்சி. எம் பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் இம் மகிழ்ச்சியைப்

பெறுவார்களாக. இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் அம் மகிழ்ச்சி அமைவதாக"

மன்னரின் வாழ்க்கை மாறுபாடுகளும் அவர் செய்த உதவி முறைகளும்

இவ்வாறு அஹிம்ஸா தர்மத்தில் வேரூன்றிய மன்னருடைய வாழ்க்கை முறைகளும் மாறலாயின. பல அரண்மனை வழக்கங்கள் மாற்றப்பட்டன. தர்மத்துக்கு ஒத்த புதிய வழக்கங்கள் தோன்றலாயின. வேட்டையாடுதல் முற்றிலும் ஒழிக்கப்பட்டது. துறவிகளும் அந்தணர்களும் பின் தொடர, மன்னர் பல திவ்யதேச யாத்திரைகள் செய்யத் தொடங்கினர். ஜனபாதஸ்ய என்று கூறப்படும் பிரயாணங்கள், மன்னர் தம் பிரஜைகளைக் கண்டு அவர்களுக்குத் தர்மோபதேசம்செய்வதற்காக நடத்தப்பட்டன. பலியென்று யாகங்களிலும் விலங்குகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. தமாஷ்கள் தடுக்கப்பட்டன. அரண்மனையில் முன்பு சமையலுக்காக ஆயிரக் கணக்கான உயிர்ப்பிராணிகள் கொல்லப்பட்டிருக்க, அக் கொலையை அசோகர் அறவே நீக்கினர்.

கலிங்கப் போருக்குப் பின் அசோகர் வேறொரு போரையும் நிகழ்த்தினவரல்லர். இந்தியாவிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் பல நாடுகள் அவர் ஆளுகைக்குள்ளாகாமலிருந்ததற்குக் காரணம் அவருடைய இந்த வைராக்கியமே யாகும். குற்றம் செய்தவரை மன்னிக்க வேண்டுமென்பதே அவர் கட்டளை. அவர் தம்மால் வெல்லப்படாத நாடுகளுக்கு விடுத்த செய்திகளில் ஒருவரும் தம்மைக் கண்டு அஞ்சவேண்டா மென்றும், எல்லாரும் தம்மை நம்பலாமென்றும், தாம் எவர்க்கும் இன்பத்தையே அளிக்க விரும்புகின்றாரென்றும் தெரிவித்தார். அவர் பெரிய நாடுகளையும் சிறிய நாடுகளையும்

ஒருபடியாகவே மதித்து நடத்திவந்தார். அவர் சாம்ராஜ்யத்தில் போர் முரசுக்குப் பதிலாகத் தர்ம கோஷமே முழங்கிவந்தது. தர்ம மூலமாய் சகோதரத்துவத்தை எங்கும் நாட்டவேண்டுமென்பதே அவர் குறிக்கோள்.

விலங்குகளும் பறவைகளும் கூட அவர் நாட்டில் அச்சமில்லாமல் திரிந்தன. நாடெங்கும் கொலை நிறுத்தப்பட்டது. மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமாக அவர் பல வைத்தியசாலைகளை நிறுவினார். பல தோட்டங்களை அவர் உண்டாக்கி அவற்றில் மருந்துகளுக்குரிய பல அரிய செடி கொடிகளையும் மூலிகைகளையும் பயிர் செய்வித்தார். விலங்குகளுக்குரிய நோய்கள் நன்ருகப் பரிகரிக்கப்பட்டு வந்தன. அக் காலத்தில் மக்கள் வியாபாரம், மதம் இவற்றின் பொருட்டுக் கால்நடையாகவும் வாகனங்களிலும் நீண்டதூரம் பிரயாணம் செய்து வந்தனர். திவ்விய தேசயாத்திரை மக்களிற் பெரும்பாலோரால் செய்யப்பட்டு வந்தன. இப்படி யாத்திரை செய்பவர்களின் நன்மைக்காக அவர் நாடெங்கும் நல்ல சாலைகளை அமைத்து, அவற்றின் ஓரங்களில் நிழல் தரும் மரங்களை வளர்த்துவரக் கட்டளையிட்டார். அவருடைய கல்வெட்டொன்று பின்வருமாறு கூறுகின்றது:

"சாலைகளிற் செல்லும் மாந்தர்களுக்கும் விலங்குகளுக்கும் நிழல்தர, அவற்றின் ஓரங்களில் ஆலமரங்களை வளர்க்க நாம் உத்திரவிட்டிருக்கிறோம். அரைக் கோசத்துக் கொன்ருக மாந்தோப்புக்களும் கிணறுகளும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. சத்திரங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. மனிதர்க்கும் விலங்குக்ளுக்கும் பயன்பட நீர் நிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன"

இவ்வாறு கலிங்கப் போர் அசோகர் மனத்தை முற்றிலும் மாற்றி அமைத்துவிட்டது. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற சீரிய கருத்தின்

உண்மையை அவர் உண்மையாக உணர்ந்தார். எங்கும் சமாதானத்தை நிலைநிறுத்துவதே அரசனின் கடமையென்பதை அவர் கடைப்பிடித்தார். பலத்தைவிடத் தர்மமே சிறந்ததென்பதை அவர் நிலைநாட்டினார். தம் ஆளுகைக்குட்பட்ட நாடுகளிலும், அவற்றிற்குப் புறம்பே உள்ள நாடுகளிலும் அவர் தம் தர்மராஜ்யத்தை நிலைநிறுத்தலானார். அதற்கு அவர் கையாண்ட முறைகள் பின்வருமாறு:

சாசனங்கள்

அசோகர் தம் மக்கள் பின்பற்ற வேண்டும் என்ற கொள்கைகளை, எக்காலமும் அழியாமலிருக்கும் வண்ணம், பாறைகளிலும், தூண்களிலும், குகைகளிலும் கற்களிற் செதுக்கி வைத்தார். அத்தகைய சாசனங்களிற் பல, இன்றும் பல இடங்களிற் காணப்படுகின்றன. தம்முடைய இச்செயலைப் பற்றி அவரே ஒரு சாசனத்தில் பின் வருமாறு கூறுகின்றார்:—

“இந்த எண்ணம் எமக்கு உண்டாயிற்று...முன்னேயும் பல மன்னர்கள் ‘மக்களைப் பக்தி பெறச் செய்வது எப்படி?’ என்று ஆலோசித்திருக்கிறார்கள். என்றாலும், பக்தியுடன் வளரும் மக்கள் மிகச் சிலரே. இந்த உணர்ச்சியை அவர்களுக்கு எவ்வாறு ஊட்டுவது? அவர்களை யாம் பக்தியூட்டி முன்னேற்றுவது எப்படி? இந்த எண்ணம் எமக்கு உண்டாயிற்று. நன்னடத்தையைக் கூறும் நீதிகளையும், அவற்றைக் கையாளுவதற்குரிய முறைகளையும் யாம் பகிரங்கப்படுத்துவோம். இவற்றைக் கேட்டுப் பிரஜைகள் அவ்வாறு நடந்து, முன்னேற்றமடைந்து, நல்லொழுக்கத்தில் வலிமையடைவார்கள்.”

## தர்ம யாத்திரைகள்

இவ்வாறு நாட்டெங்கும் தர்மோபதேசங்களைச் சாசனங்களாக எழுதியதோடு அசோகர் அமையவில்லை. மக்களிடையே தாமே சென்று, அவர்களுடன் கூடிப் பேசி, கழகங்களை ஆங்காங்கே கூட்டி, தர்மங்களைப் பற்றிய விரிவுரைகளையும் வாதங்களையும் நடப்பித்து, இவ்வாறெல்லாம் அவர் தர்ம மார்க்கத்தைப் பரப்பலானார். உல்லாஸ யாத்திரைகளையும் விநோத ஆடல்களையும் வேட்டைகளையும் அவர் அறவே நீக்கின செய்தி முன்பே கூறப்பட்டது. அசோகருக்குப் பௌத்த மதத்தை உபதேசித்த குரு மதுரா நகரத்து உபகுப்தர் என்ற பெரியார். அவர் அசோகரை அழைத்துக்கொண்டு, புத்த பகவான் பிறந்த இடமான லும்பினித் தோட்டம் என்ற இடத்திற்கும், அவர் துறவு பெற்ற கபிலவாஸ்துவுக்கும், அவர் ஞானம் பெற்ற இடமான கயாவிலுள்ள போதிவிருக்ஷத்தின் அடிக்கும், அவர் முதன் முதல் உபதேசித்த இடமான சாரநாத் என்ற நகருக்கும், அவர் நிர்வாணநிலை அடைந்த புண்ய பூமியான குசிநாகரத்துக்கும், அவர் வெகு காலம் தங்கி உபதேசித்து வந்த இடமான சிராவஸ்தி என்ற இடத்திற்கும், இன்னும் பல இடங்களுக்கும் போனார். மன்னருடன் அவருடைய படைவீரர்களும் சென்றனர். அசோகர் தாம் சென்ற விடங்களிலெல்லாம் ஒவ்வொரு சைத்தியம் கட்டிக் கொண்டு, அங்குச் சந்நியாசிகளை இருக்கச் செய்து தர்மோபதேசம் செய்து வரும்படி கட்டளையிட்டார்.

## மகாமாத்திரர்களின் யாத்திரைகள்

இவ்வாறு அசோகர் தாம் மட்டும் தர்மயாத்திரை செய்வது போதாதென்றெண்ணி, தம் மந்திரிகளிற் பெரியோர்களான மகாமாத்திரர்களையும் இத்தகைய

யர்த்திரைகள் செய்து வருமாறு கட்டளையிட்டார். நாளாகவாக இவ் யர்த்திரை அரசியல் பெரிய நிர்வாகிகளுக்கும் கட்டாயமாக்ச் செய்யப்பட்டது. இதைப்பற்றி ஒரு சாசனத்தில் அவர் கூறுவதாவது :—

"எம் இராஜாங்கத்தில் யுக்தர்கள், இராஜு-கர்க்ள், பிராதேசிகர்கள் ஆகிய பெரிய அதிகாரிகள் ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை தம் ஆளுகைக் குட்பட்ட பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்து வந்து, தர்ம அபிவிருத்தியைச் செய்ய வேண்டும்''

## தர்ம மகாமாத்திரர்கள்

கி. மு. 257-ல் அசோகமன்னர் தர்மோபதேசத்துக் கெனவே சில உத்தியோகஸ்தர்களை நியமித்து, அவர் களுக்குத் தர்ம மகாமாத்திரர்கள் என்ற பெயரைக் கொடுத்தார். அவர்கள் நாட்டிலுள்ள உத்தியோகஸ்தர்கள், உத்தியோகமல்லாதவர்கள், பௌத்த மதத்தினர், அல்லாதவர்கள், அரசரின் உறவினர்கள் ஆகிய எல்லாரும் தாம நெறியிலே நடக்கிருர்களா என்று பார்த்துவர வேண்டும். இது அரசியல் நிர்வாகத்தில் ஓர் இலாகா வாயிற்று. இவர்களின் கீழ்த் திறமையுள்ள தூதர்களும் பிரசாரகர்களும், நிர்வாகஸ்தர்களும் நூற்றுக்கணக்காக வேலை செய்து வந்தனர்.

இச் செய்தியைப் பற்றிக் கூறும் கர்னூர் என்ற இடத்திலுள்ள ஓர் இராஜசாசனம் குறிப்பிடத்தக்கது : "தெய்வீகமுள்ள மாக்ஷிமை தங்கிய மன்னர் பெருமான் பின் வருமாறு கூறுகிருர். முடி சூடிய பன்னிரண்டாம் ஆண்டு எம்மால் பின்வருமாறு கட்டளையிடப்படுகிறது. எம் நாடுகளுள் எங்கும் யுக்தர்களும், இராஜுகர்களும், பிரதேசிகர்களும், ஐந்து ஆண்டுகட்கொருமுறை, மாறி மாறி, சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும். சுற்றுப்பிரயாணம் வேறு காரியங்களுக்கும் செய்யப்

படுமானாலும், பின்வருமாறு மதபோதனைக்காகவே செய்யப் படவேண்டும். “தகப்பனுக்கும் தாய்க்கும் செய்யப்பட வேண்டிய சேவை புகழத்தக்கது; நண்பர், பழகினவர், உறவினர், பிராமணர், சிரமணர் இவர்களுக்குச் செய்யப்படும் உதவி புகழத்தக்கது; உயிர்ப் பிராணிகளைக் கொல்லாமை புகழத்தக்கது; வீண் செலவு செய்யாமையும், அளவுக்கு மிஞ்சிப் பொருளைச் சேர்த்து வைக்காமையும் புகழத்தக்கது”. யுக்தர்கள் தாம் போகும் இடங்களில் குடும்பக்கணக்குகளையும் பார்த்து மேற்சொன்ன எம் கட்டளைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்றும் பார்க்க வேண்டும்.

இந்த இலாக்காவுக்கு வேறு அலுவல்களும் உண்டு. வைத்திய சாலைகள் நிறுவுதல், வைத்தியர்களின் நியமனம், மருந்துகள், பிரயாணிகளுக்குச் சத்திரங்களும் நீர்நிலைகளும் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தல் ஆகியவை இவர்களுடைய வேலை. மத விஷயத்தில், ஏற்கனவே தரும புத்தி உடையவர்களுக்குத் தரும விருத்தி செய்து கொடுப்பதும், அவர்களுடைய நன்மைக்கும் இன்பத்துக்கும் வேண்டியவற்றை அமைத்துக் கொடுப்பதும், தருமம் அறியாதவர்களுக்குத் தர்மோபதேசம் செய்வதும், ஊழியர்கள், எளியவர்கள், பிராமணர்கள், பணக்காரர்கள், அநாதைகள், கிழவர்கள், நோயாளிகள் ஆகிய எல்லோருக்கும் வேற்றுமைகாட்டாமல் நன்மை செய்வதும், தர்மயுக்தர்களுக்குத் துன்பம் நேராமல் பாதுகாப்பதும், அநியாயத் தண்டனை, கொலை, தொல்லை முதலியனவற்றை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கொடுக்காமலிருக்கிறார்களா என்று கவனிப்பதும், அரசனின் சொந்தக்காரர்

களுடைய ஸ்திரீ வேலைக்காரர்களின் நன்மைகளைக் கவனிப்பதுமாகிய பல கடமைகளும் இவ்வுத்தியோகஸ்தர்களுக் குண்டு. இத் தொழில்களை அரசர் ஆளுகைக் குட்பட்ட நாடுகளில் மட்டுமில்லாமல், அந்நிய நாடுகளிலும் இவர்கள் செய்துவந்ததால், அசோகருடைய ஸாத்விக தர்மராஜ்யம் உலகத்திற் பெரும் பாகம் நடந்துவந்தது. இதன் வழியாகத்தான் அவர் தம் தர்மராஜ்ய வெற்றிக் கொடியை உலகமெங்கும் பறக்கச் செய்தார்.

இந்தத் தர்ம மாத்திரிகர்களின் கடமையைக் குறிக்கப் பல சாசனங்கள் எழுந்தன. அவர்கள் தர்மத்தைப் பரவச் செய்யவும், நியாயாதிபதிகளால் விளையும் கொடுமைகளையும் குற்றங்களையும் நீக்கவும், அரசரும் அவர் குடும்பத்தாரும் செய்துவரும் தர்மங்களைப் பரிபாலனம் செய்யவும், அந்தப் புரங்களில் ஒழுக்கங்களைப் பராமரிக்கவும், புத்த, ஜைன, ஆஜீவக போன்ற மதங்களின் கழகங்களையும், பரீஷத்துக்களையும் கண்காணிக்கவும் நியமிக்கப் பட்டிருந்தார்கள் என்று இச் சாசனங்களால் அறிகிறோம். பெண்டிரின் நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்து பாதுகாக்க, ஸ்திரீ அத்யக்ஷ மகாமாத்திரர்கள் என்ற மகளிர் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டனர்.

இவ்வாறு தர்மராஜ்யத்தை உலகமெங்கும் நிலைநிறுத்த எண்ணிய அசோக மன்னரின் பரந்த கொள்கையை நாம் என்றும் பாராட்டுவோமாக! அவருடைய சக்கர முத்திரை கொண்ட கொடியை நம் சுயேச்சை இந்தியா இன்று கொண்டிருப்பது மிகவும் போற்றத் தக்கது. இந்திய சுயேச்சை உதயமான 1948-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி வியாழனன்று நள்ளிரவு 12 மணிக்கு, ஸ்ரீ இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறிய மொழிகள் இங்கு நினைவுறத் தக்கவை. அவையாவன:—

"உலக சமாதானத்துக்கும், மானிடவர்க்கத்தின் க்ஷேமத்துக்கும் இந்த நாடு செய்யப்போகும் பேருபகாரத்தைப் பற்றிப் பண்டித நேரு குறிப்பிட்டார்கள். இதோ காணப்படும் அசோக சக்கரம், அசோக உருளை அந்தப் பெரிய கருத்தின் உருவமாகவே திகழ்கின்றது. நம் மன்னர்களுள் மிகப் பெரியவர் அசோகர். ஹெச். ஜி. வெல்ஸ் அவர்களின் மொழிகளைப் பாருங்கள்: "மகா ராஜாக்கள், பிரபுக்கள், ஸ்ரீலஸ்ரீகள், இன்னும் பலர் உலக சரித்திரத்தில் கூட்டங்கூட்டமாகக் காணப்படுகிறார்கள். ஆனால், ஒரே ஒரு புருஷர்தாம், திவ்ய தேஜஸுடன் எல்லோருக்கும் மேலே நின்று ஒளி வீசுகின்றார்—அவர்தாம், மன்னர்களுக்குள் பேரேறான அசோகர்; அவர், வேற்றுமைகளை ஒழிக்கும் வழி சமரசமே என்று பாறைகளில் வெட்டி வைத்தார். "ஸமவய ஏவ ஸாது:" என்பன அச்சொற்கள்."



இவையே அசோகரின் செய்திகள். அசோகர் தம் செய்தியை உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் பரப்ப ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர்கள் பலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை நாலா பக்கங்களிலும்

அனுப்பினர். அசோகரின் குமாரரான மஹேந்திரரையும், அவர் மகள் சங்க மித்திரையின் குமாரரான ஸுமனரை யும் அவர் இலங்கைத் தீவுக்கு அனுப்பினர். ஸங்கமித் திரையே ஒரு முறை இலங்கைக்குச் சென்று போதி விருக்ஷத்தை அந் நாட்டில் ஸ்தாபித்தார் என்று சொல்லப்படுகிறது.

அசோகர் 36-37 வருஷங்களே நம் புண்ணிய பூமி யாகிய ஆரியவர்த்தத்தை ஆண்டு வந்தார். அவர் பௌத்த மதப் பிரசாரத்துக்காகச் செய்த அரிய தொண்டுகளேயேனும், நாடுகளின் அரசாட்சிக்காக அவர் வகுத்த அரசியல் முறைகளேயேனும், அவருடைய குணதிசயங்களேயேனும், அவர் காலத்து நாட்டு வளப்பாடுகளேயேனும், நாம் இங்குக் கூறக் கருதவில்லை. அரசாட்சியின் தத்துவத்தை உள்ளவாறு உணர்ந்து, உலக நன்மையை ஊக்குவதே தம் வாழ்க்கையின் பயன் என்றெண்ணி, அக் கருத்துக்கே தம்மை அர்ப்பணம் செய்த அப் பெருமன்னரின் சில சிறப்பியல்களை மட்டுமே இங்குக் காட்டத் துணிந்தோம். அவர் கொள் கையின் குறிக்கோளான சக்கரம் இன்று நம் கொடியில் திகழ்கிறது. அதன் நிழலில் உலகம் தன் இன்னல் களினின்றும் நீங்கிச் சமாதானத்தைக் கொண்டு திகழ் வதாக!

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன் அசோகமன்னர் தம் உத்தியோகஸ்தர்களுக்கு இடும் கட்டளைகளைக் காண அவருடைய சாசனங்களுள் ஒன்றன் சாராம்சத் தைக் கீழே தருவோம். இஃது, கலிங்க நாட்டில் தௌளி என்ற இடத்திலுள்ள பாறையொன்றில் காணப்படுவ தாகும்:

"தௌளி நகர நிர்வாகிகளான பெரிய உத்தியோகஸ் தர்களுக்குத் தெய்விகம் பொருந்திய மன்னர்பிரான் தெரிவிப்பன :—

"எம் மனத்தில் நல்லதெனத் தோன்றும் எதையும் நல்ல வழிகளில் அநுஷ்டானத்துக்குக் கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறோம்.

"இதன் பொருட்டுப் பின்வரும் வகைகளை வகுக்கின்றோம். ஆயிரக்கணக்கான மக்களின் க்ஷேமம் உங்கள் கைகளில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

"எல்லா மக்களும் எம் பிள்ளைகள். எம் பிள்ளைகள் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் க்ஷேமத்தையும் மகிழ்ச்சியையும் பெறவேண்டுமென்று நாம் விரும்புவது போலவே, உலகத்து எல்லா மக்களையும் பற்றி விரும்புகிறோம்.

"எம் கருத்தை முற்றிலும் அறிய எல்லார்க்கும் முடியாது. சிலர் ஒவ்வொரு பகுதியை மட்டும் உணர்வார்கள்.

"உங்களுக்கு எல்லாச் சௌகரியங்களும் அமைந்திருக்கின்றன. உங்கள் ஆளுகையில், எவரேனும் ஒருவர் சிறையில் அடைக்கப்படுவதாலும், துன்புறுத்தப்படுவதாலும் சாவை அடையலாம். அச் சாவு எத்தனை பேருடைய துன்பத்துக்குக் காரணமாகும் என்பதை ஆராயுங்கள். ஆதலால், நீதிநெறி நடுநிலையிலிருந்து சிறிதும் வழுவாமலிருக்க நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். பொறாமை, உல்லாச சுபாவம், கொடுமை, பொறுமையின்மை, காரியத்தைக் கையாளும் திறமையின்மை, சோம்பல், மடிமை இவற்றால் எவரும் வெற்றிபெற இயலாது. "இக் குற்றங்கள் எம்மிடம் நிகழலாகா" என்று ஒவ்வொருவரும் பார்த்துக்கொள்ளக் கடவர். நிர்வாகத்தில் சலிப்புக்கொண்டவர் ஒருநாளும் முன்னேறார்; ஒவ்வொருவரும் நகர வேண்டும்; முன்னேற வேண்டும்; முன்னேறிக் கொண்டே செல்லவேண்டும்.

"இந்த எழுத்துக்களைக் காணும் எவரும் உங்களை நோக்கி, "நீங்கள் அரசருக்குச் செய்யவேண்டிய கடமை இவை. இவை அரசரின் கடமைகள்" என்று கூறட்டும்.

"இவற்றை நீங்கள் பின்பற்றுவதால் நன்மை விளையும்; புறக்கணிப்பதால் ஆபத்து விளையும். இவற்றைப் பின்பற்றுதவர்களுக்கு மோக்ஷ சுகம் இல்லை; அரசருடைய நன்மதிப்பும் இல்லை. இவற்றைநாம்வற்புறுத்திக் கூறுவதன் நோக்கம் இவை இரு பயன்களையுடையன வென்ற காரணத்தாலேதான்-உங்களுக்கு மோக்ஷமும் கிடைக்கும்; எமக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்ததுமாகும். இந்தக் கட்டளையை ஒவ்வொரு திஷ்ய தினத்திலும் (ஒரு புண்ணிய தினம்போலும்) படிக்கக் கேட்க வேண்டும். பிற புண்ணிய தினங்களிலும் படிக்கக் கேட்க வேண்டும். எல்லோரும் இவற்றைப் படிக்கலாம்.

"இவ்வாறு செய்வதால் இவற்றின் நோக்கத்தைக் கைகூடச் செய்பவர்களாவீர்கள்.

"இந்த நகர நீதிபதிகள் நகரமாந்தரைக் காரணமில்லாமல் சிறைப்படுத்தவோ, சித்திரவதை செய்யவோ கூடாதென்று இக் கட்டளை இங்கு எழுதப் பட்டது.

"எம் விருப்பப்படி நீதிபதிகள் இங்கு நடந்து வருகின்றனரா என்று பார்த்துவர, ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை, மகாமாத்திரர்களை அனுப்புவோம். அவர்கள் கடுமையாகவாவது கொடுமையாகவாவது இராமல், நிதானமாகக் காரியங்களைக் கவனிப்பார்கள்.

"உஜ்ஜனியிலிருந்தும் இளவரசர் இதே நோக்கத்துடன் மூன்று ஆண்டுகளுக்கொருமுறை தம் மந்திரிகளை அனுப்புவார்.

"அவ்வாறே தக்ஷசிலத்தினின்றும் வருவர்.

"இப்படிச் சுற்றுப் பிரயாணம் செய்யும் மாத்திரிகர்கள் கடமைகளில் தவறுமலும், நீதிபதிகள் மன்னர் கட்டளைகளைச் சரியாய் நடத்திவருகிறார்களா வென்றும் கவனிப்பர்".

---

# வருஷம் ஒரு தீபாவளியா ?

சு. குருசாமி

தீபாவளி சந்தோஷமான தினந்தான். இல்லை என்று மறுக்க முடியுமா? ஆனால் இராமநாதன் மட்டும் வருஷம் ஒரு தீபாவளியா என்று சலித்துக் கொள்கிறன். ஏன் அவனுக்கு இச் சலிப்பு? தீபாவளி வந்தால், அதனுடன் எப்படியாவது அந்த ஞாபகம் அவனுக்கு வந்து விடுகிறது. அதை எங்ஙனம் தடுப்பது?

அந்தத் தீபாவளியை அவன் சந்தோஷமாகக் கொண்டாடினன் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையானல் அன்று அவன் அதிகாலையிலேயே எண்ணெய் ஸ்நானம் செய்வானு? எப்பொழுதும் ஏழு மணிக்கு மேல் எழுந்திருப்பவன்! அல்லது கோடி உடுத்துவானு? சந்திராவுக்குத்தான் அத்தனை விலையுயர்ந்த பட்டு ஏன் வாங்கிக் கொடுக்கிறன்? அது அவனுடைய சக்திக்கு மீறிய செயல் அல்லவா? குழந்தைகளுக்குத்தான் ஏழெட்டு ரூபாய்க்கா பட்டாசு வாங்க வேண்டும்? அவன் ஓர் ஏழைக் குமாஸ்தா தானே, எதற்காக இந்த ஆடம்பரம் எல்லாம்? ஏனென்றல் தீபாவளி தினத்தை மிகச் சந்தோஷமாகக் கொண்டாட வேண்டும் என்ற ஆவலினுல் தான்!

"அடே கிட்டு, அந்த ஆனை வெடியை இங்கே கொண்டு வாடா! அடே மணி! இன்னெரு கம்பி மத்தாப்பூ கொளுத்துடா! அடே வேல், ஒரு பூ மத்தாப்பூ கொண்டு வா!"

இதென்ன வேடிக்கை! வெடி சுடுவதிலும், மத்தாப் புக் கொளுத்துவதிலும் குழந்தைகள் தோற்று விடுவார் கள் போலிருக்கிறதே! இராமநாதன் இதே வேகத்தில் சென்ருனால், ஏழெட்டு ரூபாய்ப் பட்டாசில் பாவம், அந்தக் குழந்தைகளுக்கு என்ன மிஞ்சப் போகிறது! பிள்ளையில்லாத வீட்டில் அல்லவா கிழவன் துள்ளி விளையாடுவான் என்பார்கள். ஆனல் அது பிள்ளை யில்லாத வீடுமில்லை; இராமநாதன் கிழவனுமல்லவே! வெளிப்படையாகக் காட்டப்படும் இச் சந்தோஷமும், உற்சாகமும், அவன் உள்ளத்தின் ஆழத்தில் ஒடுங்கிக் கிடக்கும் ஒரு சோகத்தை அடக்கி வைப்பதற்காகத் தான் என்பது அவனுடைய குடும்பத்தில் யாருக்குந் தெரியுமா? அதை மறைப்பதற்காகத்தான் இவ் வானந்தப் போர்வையை, இழுத்து இழுத்துப் போர்த்து கிருனே? ஆனல் அதிகமாய் இழுத்தானுகில், அது பிதிர்ந்து கொண்டல்லவா வெளிக் கிளம்பிவிடும்?

சந்திரா சந்தோஷமாய் அங்கு மிங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். அவளோடு வம்பிழுக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. "சந்திரா, ஒரு விஷயம். இங்கே வா!" என்ருன்.

"என்ன?"

"எனக்கொரு சந்தேகத்தை நிவர்த்தி செய்வாயா?"

"என்ன?"

"நான் உன்னைக் கலியாணம் செய்து இன்று ஏறக் குறையப் பத்து வருடங்கள் ஆகப் போகின்றன."

"அந்தக் கணக்கு நானும் வைத்திருக்கிறேன். அதற்கென்ன இப்ப?"

"ஆனல் உன்னைக் கலியாணம் செய்து கொண்ட அன்று ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் எத்தகைய அழகுடனும்,

சோலையுடனும் இருந்தாயோ, அதில் அணுவுங் குறையாமல் இன்றும் இருக்கிருயே, அதன் இரகசியம் என்ன?"

இக் கேள்வியை அவன் கேட்பது இது முதல் தடவையல்ல. எத்தனையோ முறை கேட்டுவிட்டான். அவளுக்கு நன்ருய் ஞாபகமிருந்தது. சென்ற தீபாவளி யன்றும் அவன் இந்தக் கேள்வியைக் கேட்டான். அதற்கு முந்தின தீபாவளி? சந்திரா யோசித்துப் பார்த்தாள். ஆம்! முந்தின தீபாவளியும் அவன் இந்தக் கேள்வியைக் கேட்டது அவளுக்கு ஞாபகம்வந்தது. தீபாவளிக்குத் தீபாவளி இக் கேள்வியைத் தவருமல் கேட்க வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? அவள் மாருத அழகுடனிருந்தாள் என்பது வாஸ்தவந்தான். அதற்காக அதைச் சும்மா சொல்லிச் சொல்லியா காட்ட வேண்டும்? தன் கண்ணே தனக்குத் தைக்கும் என்பார்களே! அப்படி ஏதாவது திருஷ்டி தோஷம் ஏற்பட்டு விட்டால்? ஒருவேளை சந்தோஷமான தினத் தன்று அவளுக்கு மகிழ்ச்சி யூட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அவளுடைய கணவன் அப்படிக் கேட்கிருனே? அவன் தனக்குத்தானே மகிழ்வூட்டிக் கொள்வதற்குத்தான் இங்ஙனம் கேட்கிருன் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? அவளுக்குத் திடீ ரென்று ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

"இந்தச் சந்தேகம் உங்களுக்கு மட்டுந்தான தோன்றியிருக்கிறது? அடுத்த வீட்டுக் கிழவிக்குக் கூடத்தான் தோன்றியிருக்கிறது. அவள் நேற்று என்ன சொன்னுள் தெரியுமா?"

"என்ன சொன்னுள்?"

"நான் மூன்று பிள்ளைகள் பெற்ற பிறகுங் கூடத் தேவடியாள் மாதிரி மினுக்கிக் குலுக்கிக் கொண்டு

அழகு குன்றுமல் இருக்கிறேனும். அவளுடைய மரு மகள் ஒரு பிள்ளை பெற்றவுடனேயே அத்தைப் பாட்டி மாதிரி ஆய்விட்டாள்ளாம். அது அவளுடைய குறை !"

"தேவடியாள் மாதிரி என்ன பாட்டி, நான் அசல் தேவடியாளே தான் என்று நீ அவளிடம் சொல்லி விட்டு வருகிறதுதானே ?"

"நீங்கள் வேண்டுமானல் போய்ச் சொல்லிவிட்டு வாருங்கள். எனக்கு அடுப்பில் சாம்பார் கொதிக்கிறது" என்று சொல்லிச் சந்திரா கிளம்பப் பார்த்தாள்.

ஆனல் இராமநாதன் விடவில்லை. அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு, "நான் கேட்ட கேள்விக் குப் பதில் ?" என்றுன்.

"அது எங்கள் தொழில் ரகசியம். அதைவெளியில் சொல்வேனு ?" என்று சொல்லிச் சிரித்துக் கையை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டாள்.

ஆமாம். சந்திரா ஒரு தாசிப் பெண் ! சுமார் பன்னி ரண்டு, பதின்மூன்று வருடங்களுக்கு முன்புதான் இராம நாதன் அவளை முதன்முதலில் சந்தித்தான். எங்கே ? தாசி வீட்டில் அல்ல. இவன் படித்த பி. ஏ. வகுப்பில் அவளும் வந்து சேர்ந்தாள். அவள் கல்லூரிக்கு வந்த புதிதில் மாணவர்கள் எல்லோரும் அவளைப்பற்றித்தான் பேசினுர்கள். அவளை வெறிக்க, வெறிக்கப் பார்த்தார் கள். இராமநாதனும் அவளைப்பார்த்தான் ; அவளைப் பற்றிப் பேசினுன். என்ன பேசினுன் ? "வீட்டில் இருந்து கெடுப்பது போதாதென்று, இவர்கள் கல்லூ ரிக்கும் வர ஆரம்பித்து விட்டார்கள். இனி நம்ம பாடெல்லாம் ஆபத்துத்தான் !" என்றுன். அந்த ஆபத்து அவனையே பிடித்துக் கொள்ள இருந்தது என் பது அவனுக்கு அப்பொழுது தெரியவில்லைபோலும் ! பெற்றோர்களின் எதிர்ப்பையும், அவர்களுடைய

தொடர்பு அற்றுப் போவதையும் பொருட்படுத்தாமல், சந்திராவை அவன் கலியாணம் செய்துகொண்டான். ஆனால் அதை ஆபத்தென்று சொல்வது? அவளைக் கலியாணம் செய்துகொண்டதில் அவனுக்கு என்ன குறை ஏற்பட்டது? ஒரு குறையுமில்லை. குடும்பப் பெண்கூடத் தன் கணவன்மீது அவ்வளவு பக்தியுடனும், சிரத்தையுடனும் இருப்பாளோ, என்னவோ, இராமநாதன்மீது அவ்வளவு வாஞ்சையுடனிருந்தாள் சந்திரா. அந்த வகையில் அவள்மீது ஒரு குற்றமும் சொல்லிக்கொள்ள முடியாது. ஆனால் ஒரு குறை...... இப்படி நினைத்தானோ இல்லையோ, இராமநாதன் தன்னுடைய உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கிக்கொண்டு, "சந்திரா! சந்திரா!" என்று அவசர அவசரமாகக் கூப்பிட்டான். அவளைப் பார்ப்பதிலும், அவளுடன் பேசுவதிலும் அவன் விரும்பாத ஒன்றை மறக்க யத்தனிப்பது போல் தோன்றியது. ஏன் தான் இத் தீபாவளி வருகிறது என்று அவன் நினைத்தானோ?

சந்திரா சமையலறையிலிருந்து, "ஏன் கூப்பிடுகிறீர்கள்? எனக்கு அடுப்பில் வெகுவேலை இருக்கிறது!" என்றாள்.

"இங்கு வந்துவிட்டுப் போ. ஒரு சங்கதி"

சந்திரா வந்தாள். அவளைப்பார்த்ததுமே இராமநாதனுடைய இயற்கையான உற்சாகம் மீண்டும் தோன்றிவிட்டது.

"சந்திரா, உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா?"

"சீக்கிரமாய்க் கேளுங்கள்"

"என்னிடத்தில் என்ன அழகைக் கண்டு நீ என்னைக் கலியாணம் செய்துகொண்டாய்?"

"கழுவுக்கேற்ற கோமாளி நீங்கள் ஒருவர் தான் கிடைத்தீர்கள். கலியாணம் செய்துகொண்டேன்!"

இராமநாதன் அதைக்கேட்டதும் சிரித்தான், "கோமாளியைத்தான் கலியாணம் செய்துகொண்டாயே கோமாளி ஆடுகிற ஆட்டத்துக்கெல்லாம் ஏன் கட்டுப் பட்டிருக்கிறாய்?"

"என்ன ஆட்டம்?"

"நான் அடித்தால்கூட மறுவார்த்தை சொல்லாமல் பொறுத்துக் கொள்கிறாய்!"

"பொறுத்துக் கொள்ளாமல் என்ன செய்வது? ஆனால் ஒரு விஷயம். நான் உங்களிடம் இப்படி உதை பட்டு, அடிபட்டுச் சீப்பட்டுக்கொண்டிருப்பது எங்கம் மாளுக்குத் தெரிந்தால், அவள் மனம் என்ன பாடுபடுந் தெரியுமா?" என்றாள் சந்திரா.

"சந்திரா, அதோ பார்! பால் பொங்குகிறது. ஓடு, ஓடு" என்று சொல்லி அவளை அவசர அவசரமாய் அனுப்பிவிட்டு, நிராசையுடன் இராமநாதன் நாற்காலி யில் சாய்ந்தான்.

உண்மையில் அங்கே பால் பொங்கவில்லை. பின் ஏன் அவன் அவ்வளவு அவசரமாக அங்கிருந்து அவளை அனுப்பினான்?

தன்னையும் அறியாமல் அவள் அவனுடைய மனத் தில் ஒரு புண்பட்ட இடத்தைத் தொட்டுவிட்டாள். அதற்கு மேல் அவளுடன் பேசிக்கொண்டிருக்க அவ னுக்கு இஷ்டமில்லை. இனி எத்தகைய அணை போட்டா லும் அந் நினைவைத் தடுக்க அவனால் முடியாது. அத் தீபாவளி தினத்தன்று யாரைமறக்கவேண்டும், யாரைப் பற்றி நினைக்கவே கூடாதென்று இவ்வளவு பிரயத் தனங்களும் செய்தானோ, அவளை ஞாபக மூட்டி விட் டாள் அவனுடைய மனைவி. அவனுடைய தாயாரைப் பற்றி அவ் விஷயங்களை எல்லாம் அவனிடங் கூறிய

நண்பர்கள் அவனுக்கு நன்மையா செய்தார்கள்? ஆம், அன்றையத் தீபாவளியை அவன் சந்தோஷமாகவே கொண்டாடி விட்டான். பட்டுக்கும், பணிதிக்கும் குறைவில்லை. குழந்தைகளைக் குதூகலப்படுத்தி விட்டான். மனைவியைச் சந்தோஷப் படுத்திவிட்டான். ஆனால் அவனுடைய தாயார்......அவள் அச் சுபதினத்தை எப்படிக் கழிக்கிருளோ, ஈசன்தானே அறிவார்! அவனுடைய தலைத் தீபாவளி தினம். அன்று நடந்த சம்பவத்தைப் பற்றித்தான் அவனுடைய நண்பர்கள் அவனிடம் சொல்லியிருந்தார்கள்.

அவனுடைய சொந்த வீடு மதுரையில் இருந்தது. வடக்கு மாசி வீதியில். அவர்களுடைய வீட்டிற்கு எதிர்த்த வீட்டில் ஒரு பெண். அவளுக்கும் அன்று தான் தலைத்தீபாவளி. பூஜை முடிந்து, வீட்டில் எல்லோரும் சாப்பிட்ட பிறகு, இராமநாதனின் தாயாருக்கு அவள் பலகாரங்கள் கொண்டு வந்தாளாம். அவளுடைய அலங்காரங்களையும், அவள் உடுத்தியிருந்த ஜரிகைப் புடைவையையும் பார்த்தவுடன், எவ்வளவோ அடக்கியும் அடங்காமல் இராமநாதனின் தாய்க்கு அழுகை வந்துவிட்டது! "என்ன மாமி! தீபாவளியுந் தினமுமாய் முதன் முதல் உங்களுக்குப் பலகாரங் கொண்டுவந்திருக்கிறேன். என்னைப் பார்த்ததுங் 'கோ' வென்று அபசகுனமாய் அழுகிறீர்கள்? மகனை அடக்கியாளத் தெரியாவிட்டால், அதற்காக ஊரிலுள்ள பெண்களை எல்லாம் பார்த்துப் பொருமிக் கொண்டா இருப்பது?" என்று சொல்லிக்கொண்டே அவள் போய்விட்டாளாம்.

அவனுல்தானே அவனுடைய தாயாருக்கு அவ்வசைமொழி? அவளுடைய பெற்ற உள்ளம் பூரிக்குமாறு தன் அழகிய மனைவியைத் தாயாரிடம் கொண்டு போய்க் காட்டுவதற்கு அவனுல் முடியாமற் போய்விட்ட

தல்லவா? அதை நினைத்ததும் அவனால் துக்கம் பொறுக்க முடியவில்லை. அழ வாரம்பித்தான்.

அன்றிருந்து அவனுடைய பெற்றோர்கள் சொந்த வூரில் தீபாவளி கொண்டாடுவதில்லையாம். அவனுடைய தங்கை பார்வதியின் வீட்டுக்குத்தான் தீபாவளிக்குத் தீபாவளி போய் விடுகிறார்களாம். மகளைப் பார்த்தாவது மகனைச் சிறிது மறந்திருக்கலா மல்லவா? ஆனால் அங்கும் அவனுடைய தாயார் தீபாவளியன்று கோடி உடுத்துவதே கிடையாதாம். "ஏனம்மா இப்படி அநியாயம் பண்ணுகிறாய்? அந்தக் கட்ன்காரனை நினைத்துக் கொண்டுதானே, இப்படி உருகி உருகிக் கண்ணீர் உதிர்க்கிறாய்? அந்தக் கடன்காரன் உன்னைக் கொஞ்சமாவது லக்ஷியம் செய்திருந்தால், இப்படிச் செய்திருப் பானா?" என்று ஏசுகிறாளாம் அவன் தங்கை.

இராமநாதன் விம்மி விம்மி அழுவாரம்பித்தான். சந்திரா அங்கே ஓடிவந்து, "இது ஏன் இப்படி?" என்றாள்.

"சந்திரா, நம்முடைய கலியாணத்தன்று கடைசியாக நீ ஒரு கேள்வி கேட்டாயே. உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

"ஆம். அதற்கென்ன இப்பொழுது?"

"நீ என்ன கேட்டாய்?"

"நன்றாய் யோசித்துவிட்டீர்களா? பின்னால் இச் செயலுக்காக வருத்தப்பட மாட்டீர்களே என்று கேட்டேன். அதற்கென்ன இப்பொழுது?"

"நான் என்ன பதில் சொன்னேன்?"

"யோசித்து விட்டதாகச் சொன்னீர்கள்"

"மனிதனுடைய மதி சிறுமதி என்பது எனக்கு இப்பொழுதுதான் விளங்குகிறது. இந்தச் சிறு விஷயம்

கூட என் யோசனைக்கு அப்போது எட்டவில்லை யல்லவா?

சந்திரா அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"வருஷந்தோறும் ஒரு தீபாவளி வரும், அது என் அன்னையையும் என்னையும் துன்புறுத்தும் என்பதைக் கூட நான் சிந்திக்கவில்லை யல்லவா? நமது வாழ்க்கை இன்பமானதுதான். ஆயினும் அவ்வின்பம் பூரண மானதல்ல. நாம் அனுபவிக்கும் இன்பத்தை நமக்கு வேண்டியவர்கள் பார்த்துப் பூரிக்கும்பொழுதுதான் அது பூரணமடைகிறது என்பது ஏனோ எனக்குத் தெரியாமற் போய்விட்டது. சுய நலத்தையே அடிப் படையாகக் கொண்ட நமது இன்பத்தில் என்ன சுகம் இருக்கிறது, சந்திரா?" என்று சொல்லி இராமநாதன் மேலும் அழவாரம்பித்தான்.

"நல்ல நாளும் பொழுதுமாய்ச் சந்தோஷமாயிருப் பதை விட்டு, ஏன் இத் துயர எண்ணங்களை எல்லாம் கிளப்பி, என்னைத் துன்புறுத்துகிறீர்கள்?" என்று சந்திரா கேட்டாள். அவளுடைய கண்கள் கலங்கி யிருந் தன.

அவளும் இராமநாதனைப்போல்எதையாவதுநினைத் துக் கொண்டாளோ? அவளுக்கும் அவர்களுடைய இன்ப வாழ்க்கை ஜன சஞ்சாரமற்ற ஒரு தீவில் உற்றார் உறவினரிடமிருந்து விலகித் தன்னந் தனியாய் வாழும் ஒரு தம்பதியின் வாழ்க்கையைப் போன்றுதான் இருந்ததோ?

---

# பாரதியார் கண்ட சுதந்திர இந்தியா

பி. ஸ்ரீ

"பாரதியார் இன்று உயிருடன் இருந்தால் நாம் அடைந்திருக்கும் சுதந்திரத்தைக் குறித்து எவ்வளவு குதூகலமாய்ப் புதிய பாடல்கள் பாடியிருப்பார்! பாரத சக்தியின் மூத்த புதல்வி யென்று தாம் கருதிய தமிழ் நாடு, சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமருக்கு 'இசையுலக ஜோதி' யின் இசையோடு அளித்த தங்கச் செங்கோலைக் குறித்தும், தேசியக் கொடியின் நடு நாயக மான தரும சக்கரத்தைக் குறித்தும்,

பொன்போல் குரலும்
புதுமின்போல் வார்த்தைகளும்

கொண்டு வாயார வாழ்த்தி நெஞ்சாரப் புகழ்ந்திருக்க மாட்டாரா? கோயில் திறந்தது ஹரி ஜனங்களுக்கு, சுதந்திரக் கோயில் திறந்தது எல்லா ஜனங்களுக்கும் என்று ஆனந்தக் கூத்தாடியிருக்க மாட்டாரா? சங்க நாதமும் சிங்க நாதமுமாய்த் தம் கனவு நனவாகி விட்ட களிப்பைத் தமிழ் கொண்டு நாடு நகரமும் எதிரொலி கொள்ள முழக்கியிருக்க மாட்டாரா? ஒரு துளி இரத்தம் சிந்தாமல் விடுதலைப் போரில் வெற்றி கிடைத்து விட்டது, மகாத்மாவின் தவம் பலித்து விட்டது! என ஜயபேரிகை கொட்டியிருக்க மாட்டாரா?" என்று இப்படியெல்லாம் உத்ஸாக புருஷரான ஒரு நண்பர் என்னிடம் அடுக்கிக் கொண்டே போனார், சுதந்திர விழா அன்று.

" சேதமில்லாத இந்துஸ்தானம் "

நானும் முதன் முதல் அப்படித்தான் நம்பினேன். ஆனால், ஆகஸ்டு மாதம் பதினாலாம் தேதி நள்ளிரவில் 'நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிய' ஆகஸ்டு 15-ம் தேதி சூரியோதயத்திற்கு முன்பே சுதந்திர சூரியோதயம் ஆகிவிட்டது; இந்தியா ஒரு மறு பிறப்பையே அடைந்து விட்டது—என்ற அதிசயத்தை நம்பக்கூடிய அளவிற்கு அவ்வளவு மூட பக்தரல்லர் பாரதியார் என்று தோன்றியது. உள்ளொளியால் உண்மை கண்ட கவிஞர் பாரதியார், பகுத்தறிவை மட்டும் நம்பினவர் அல்லர்.

நம்பினர் கெடுவதில்லை
நான்குமறைத் தீர்ப்பு

என்று பாடியிருக்கிறார் அல்லவா? எனினும் பாரதியார் ஆகஸ்டு 15-ம் தேதி காலையில்,

பொழுது புலர்ந்தது, யாம்செய்த தவத்தால்;
புன்மை யிருட்கணம் போயின யாவும்

என்று அதைச் சுதந்திர விடிவாகக் கருதி மகிழ்ந்திருப்பார் என்று சொல்லமுடியாது.

"வெள்ளையனே! வெளியேறு" என்ற கோஷத்திற்குப் பின் சென்ற சில ஆண்டுகளாக நாட்டிலே பெருகி வந்த மதப்பூசல்களும் வகுப்புப் பிணக்குகளும் பாரதியாரின் உள்ளத்தை எவ்வளவோ புண்ணாக்கியிருக்குமல்லவா?

பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்

என்று முரசு கொட்டி, வேத முனிவர்களுக்கும் மகம்மது நபிக்கும் ஒருங்கே 'மறையருள் புரிந்த' அல்லாவைப் பாடும் பாரதியார், 'பாக்கிஸ்தான்' பெயரால்

தோன்றிய சகோதர வதைப் பூசல்களை எப்படிச் சகித்திருப்பார்?

பாரதியாரின் வந்தேமாதர கோஷத்தில், 'சேதமில்லாத இந்துஸ்தானம்' 'மாதா' என்று குறிக்கப்படுகிறது. இந்தியத் தாயை மட்டுமா 'வந்தேமாதரம்' என்று வணங்குகிறார்? பாரதியாரின் தேசபக்தி இமயம்–குமரி எல்லைக் குள்ளும் அடங்கிவிடவில்லையே! கடல் கடந்த 'பெருந்தமிழக'த்தையும் 'பெரிய இந்தியா'வையும் தழுவி, உலக அன்னையின் அடிமலர்களையும் தழுவிக் கொண்டு,

> வந்தே மாதரம் என்போம்—எங்கள்
> மாநிலத் தாயை வணங்குதும் என்போம்

என்று பாடுகிறதல்லவா? இந்தப் பக்தி, இந்தத் தமிழ், குன்றிய சுதந்திரத்தையும் குறுகிய இந்துஸ்தானத்தையும் எப்படிப் பாடிக் குதூகலிக்கும்?

தம்மைப் பாடவேண்டுமென்று சில பிரபுக்கள் ஔவையாரை வேண்டிக் கொண்டார்கள் ஒரு சமயம். பாட்டியார் ஏற இறங்கப் பார்த்தார். "உங்களையா பாடவேண்டும்? நீங்கள் போர்க்களம் கண்டதில்லை; செவிக்குணவு தேடியதில்லை; வயிற்றுக்குப் போதுமான உணவு பெறாத ஏழைமுகம் பார்த்து இரங்கியதுமில்லை—வீரமுமில்லை, ஐயோ ஈரமுமில்லையே! என் தமிழும் உங்களைப் பாடுமா?" என்று பரிதவித்தார். பாரதியாரின் தமிழ்வாணியும் வீரத்தாலோ, உள்ளபடி அஹிம்ஸா தர்மத்தாலோ நாம் அடைந்திராத இந்த 'வெற்றி'யை வெற்றியென்று தான் ஒப்புக்கொண்டிருக்க முடியுமா?

நமக்கு எத்தகைய அரசியல் ஞானம் இருந்தால் என்ன, வேதாந்த ஞானம் இருந்தால் என்ன, வெள்ளையர் முதுகுக்கு மண் காட்டும் தர்க்கவாதப் போர்த்திறன் இருந்தால் தான் என்ன?

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே

என்ற லௌகிக ஞானம் இல்லாவிட்டால் மற்ற ஞானங்களெல்லாம் எப்படிச் சோபிக்கும், உண்மைச் சுதந்திரம் எப்படி உதயமாகும்?—என்பது பாரதியாரின் தேர்ந்த கொள்கை. இவர் ஆசைப்பட்ட ஒற்றுமை, கனவு க்கண்ட தேச ஒருமை இன்று நிலவுகிறதா? பசிப்பிணி உலவுகிறது; பகைமை யுணர்ச்சி பரவுகிறது.

வாய்ச்சொல்லில் வீரரடி!

என்று பாரதியார் பரிகசித்த, நெஞ்சுத் துணிவில்லாத, நேர்மைத்திறம் பெறுதவர்கள் சுதந்திர முரசு கொட்டிய வண்ணம், "அந்த ஸ்தான் வேண்டும், இந்த ஸ்தான் வேண்டும்!" என்று தங்கள் சொந்த ஸ்தானத்தை வளமுறச் செய்ய முயலும் போது, பாரதியார் இன்று இருந்தாலும் விரும்பினாலும் பாட்டு வருமா? 'நடிப்புச் சுதேசி'கள் எனப் பரிகசித்துப் பாடுவார், ஆனால் 'சுதந்திரபுருஷர்கள்' என்று கொண்டாடியிருப்பாரா?

பாரதியாரின் சுதந்திர இந்தியர்விலே தமிழர்கள், கிணற்றில் தவளைபோல், எலிவளைக்குள் எலிபோல் இருந்து விடாமல்,

சிந்து நதியின்மிசை நிலவினிலே,
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே,
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டிவிளை யாடிவருவோம்!

என்று கிளம்பிவிடுவார்களே! இப்பொழுது சிந்துநதி திரமோ பாக்கிஸ்தான்; திராவிடஸ்தானை ஆதரிக்கும்; ஆனால் சகோதரர்களை வரவேற்குமா? சேர நன்னாட்டிலோ ஸர். ஸி. பி. ஒரு 'பாக்கிஸ்தான்' சிருஷ்டிக்கப் பார்த்தார்—நல்ல வேளை, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று! 'சுதந்திரத் தெலுங்கோ'

தமிழ் நாட்டிலிருந்து சென்னை முதலான பகுதிகளையும் கபளீகரம் செய்ய எத்தனிக்கிறது! இந்த நிலையில் பாரதியார் தம் சுந்தரக் கவிதைத் தோணியை எப்படி ஓட்டி விளையாட முடியும்?

பாரதியார்—சுதந்திர பூமியில் காசியும் காஞ்சியும், கங்கையும் காவேரியும், குறளும் கீதையும் தோழமை பூண்டு ஏழைமை துடைப்பதில் ஒத்துழைக்கச் சித்தமா யிருக்கின்றன. இராமாயணம் ஆரிய திராவிடச் சண்டை யைக் குறிக்கும் சரித்திரப் புத்தகம் அன்று. துஷ்ட அரக்கரை அழித்த வில், தமிழருக்கும் வடநாட்டாருக் கும் பொதுவுடைமையாகிய 'ஆரிய ராணியின் வில்'. பாரதியாருக்கு இராமாயணம் வைஷ்ணவ நூலும் அன்று; அன்பாகிய சிவம் சைவ உடைமையுமன்று. வேதம் ஆரிய நூல் அன்று; பனிமுடி சூடிக் குமரி அலை கள் கால் வருட வீற்றிருக்கும் அன்னையின் ஆதிஞானம். புத்தரும் சங்கரரும், கம்பரும் காளிதாசரும், அர்ச்சுன னும் ராஜராஜ சோழனும் ஒரு 'தாயின் வயிற்றில் பிறந்தோர்.' இத்தகைய பாரதியம் நாடெங்கும் பரவும் போதுதான் பாரதியார் இதைச் சுதந்திர நாடாக ஒப்புக் கொள்வார்.

### வீர சுதந்திரம்

பாரதியார் தம் கொடிப்பாட்டில், தாயின் மணிக் கொடி இந்திய மக்களின் ஒன்றுபட்ட வீரத்தால் வாழும் என்கிறார். அதாவது, நமது வீரச் செயல்களின் பயனாக, ஒற்றுமையின் பயனாக, 'வெள்ளையர் வெளியேறுவர்' என்பது பாரதியார் கனவு. இன்று அக் கனவு நனவாகி விட்டதென்று யாரே நெஞ்சில் கை வைத்துச் சொல்ல முடியும்? சாதிச் சண்டை, சமயச்சண்டை போகாமல், ஒற்றுமை பயிலாமல், வாராதது போல் வந்துவிட்ட சுதந்திரத்தைப் பாரதியார் முகம்பார்த்து, உண்மைச்

சுதந்திரம்தான் என்று போற்றிப் பாடியிருப்பாரா?

உண்மையில், காங்கிரஸைக் காட்டிலும் அதிக வெற்றி இவ்வளவு தியாகங்கூடச் செய்யாமல் வீட்டுக்குள்ளே முள் வேலி கட்டிய முஸ்லீம் லீகுக்குத்தான் என்பது பாரதியாருக்குத் தெரியாமல் போகுமா? ஜின்னாவின் பிடிவாதத்தைக் காட்டிலும் வெற்றியடைந்திருப்பது பிரிட்டிஷ் ராஜதந்திரம் தான் என்றும் எளிதில் உணர்ந்திருப்பார். புரட்சிகரமான சக்திகளை நாட்டிலே கண்டு, ஏகாதிபத்தியத்தைச் சாய்த்து விட முயலும் கொள்கைகளை உலகமெங்கும் கண்டு, நீண்ட ஆதிக்கத்தின் பயனாகக் கறவைப் பசு மடிவற்றி எலும்பும் தோலுமாகி விட்ட பரிதாப நிலையையும் பார்த்து, வெள்ளையர்கள் இன்று வெளியேறுகிறார்கள்! இதைப் பாரதியாரின் அதிதீவிர மேதை அறிந்து கொள்ளாதா?

அறுபது ஆண்டுகளாய்க் காங்கிரஸ், மக்கள் உரிமைகளுக்காக வாதாடி வந்திருக்கிறது. சென்ற முப்பது ஆண்டுகளாகத் தன் கொள்கைகளை நன்கு பரப்ப முயன்று சுதந்திர இந்தியாவுக்காகப் போராடியிருக்கிறது. எனினும் சுதந்திர உணர்ச்சி உண்மையாக எங்கும் பரவிவிடவில்லை என்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது.

> வீரசுதந்திரம் வேண்டிநின்றார், பின்னர்
> வேறொன்று கொள்வாரோ?—என்றும்
> ஆரமு(து) உண்ணுதற்கு ஆசைகொண்டார், கள்ளில்
> அறிவைச் செலுத்துவாரோ?
>
> கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
> கை கொட்டிச் சிரியாரோ?

என்று கேட்கிற பாரதியார், "சிந்தையில் கள் விரும்பிச் சிவசிவா என்பவர்" களும் காங்கிரஸில்

கலந்து தேசியப் போர்வை போர்த்துக் கொண்டார்கள் என்பதைக் கண்டு வருந்தமாட்டாரா? கண்ணீர் விட்டு வளர்த்த பயிர் முதிர்ந்து பக்குவமாவதற்குள் வேலியே பயிரை மேய்வதுபோல் வகுப்புப் பிணக்குகளையும் இனப் பிணக்குகளையும் கிளப்பிவிடும் இந்நாளில், நம் தேசிய இயக்கத்தின் சக்திக் குறைவு எவ்வளவு துலாம்பரமாகி விட்டது! இது கண்ட பாரதியார் இரத்தக் கண்ணீர் வடிக்கக் கூடுமல்லவா?

எல்லோரும் ஒன்றென்னும்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியோரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே

என்று, 'சுதந்திரப் பள்ளு'ப் பாடும் பாரதியார், நய வஞ்சகமும், பொய்யும், ஏமாற்றும் கதராடைக் மறைந்திருப்பதைக் கண்டதும்,

நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்!

என்று பழைய பாட்டைப் பாடுவதைத் தவிர, வேறு மகிழ்ச்சிப் புதுப் பாடல்கள் பாடுவாரா?

லஞ்ச வலை, கள்ளச் சந்தை முதலிய விபரீதங்கள் இந்த உணவுப் பஞ்சத்திலும் நமது சொந்தக் காங்கிரஸ் சர்க்காராலும் தடுக்க முடியாதபடி விரிந்திருக்கின்றன என்றால்,

தனி ஒருவனுக்(கு) உணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்!

என்று கொதிக்கும் நெஞ்சு எப்படிப் பொறுக்கும் எப்படிச் சுதந்திரம் பாடும், எப்படி ஆனந்தம் கொண்டாடும்?

பாரதியார் சுதந்திர பாரதத்தை, 'உறுதிகொண்ட நெஞ்சு'ம், 'தெளிவு பெற்ற மதி'யும் வாய்ந்ததாய், 'எளிமை கண்டிரங்கி'ச் 'சிறுமை கண்டு பொங்கி' 'ஒளியிழந்த நாட்டிலே' உதய சூரியன் போல் வர வேண்டும் என்று எதிர்பார்த்தார். விபரீத இரட்டைப் பிறவியாகத் தோன்றியுள்ள இன்றைய சுதந்திர இந்தியாவைத் தாம் விரும்பிய அந்தப் பாரத நாடாக வாழ்த்தி ஏற்றுக் கொள்வாரா?

## புரட்சி எது?

பாரதியார் உண்மையான புரட்சிக்கவி. முதலாவது உலக மகா யுத்தத்தில் 'மானத்தால் வீழ்ந்த' பெல்ஜியத்தை வாழ்த்தினார்; ஜார் சக்கரவர்த்தியை வீழ்த்தி ரஷ்யாவில் கோரதாண்டவமாடிய புரட்சியை வரவேற்றார். இன்றைய சுதந்திர இந்தியாவில் "நாமும் புரட்சி--வெற்றிபெற்றிருக்கிறோம்" என்று சொல்கிறவர் சொன்னாலும் நம்புகிறவர் நம்பினாலும், புரட்சி என்று ஒப்புக் கொள்வாரா? புரட்டு என்றுதானே சொல்லி விடுவார் பாரதியார்?

உணவுப் பஞ்சமும் அறிவுப் பஞ்சமும் ஒருங்கே ஒழிந்து 'எல்லாருக்கும் உணவு, எல்லார்க்கும் உணர்வு-கல்வி, அக் கல்வி தாய்மொழி மூலமாக' என்ற நிலைமை ஏற்படும் போதுதான், அல்லது ஏற்பட ஒழுங்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும்போது தான், பாரதியார் பாடும் சுதந்திர இந்தியா உதயமாகும்.

மூன்று இந்தியப் பெண்மணிகள் பெரும் பதவிகளை வகிப்பதாலும், சிற்சில பெண்கள் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதாலும் மட்டுமே ஆண்களோடு

பெண்களும் சரிநிகர் சமானமாகி விட்டதாகப் பாரதியார் ஒப்புக் கொள்ளமாட்டார்.

நாணும் அச்சமும்
நாய்கட்கு வேண்டுமாம்!

என்று மாத்திரம் கோஷித்து, ஆண்களோடு பெண்கள் பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் சரிநிகர் சமானமாகப் போட்டி போடும் சுதந்திரத்தையும் பாரதியார் உண்மையான வீர சுதந்திரம் என்று போற்றமாட்டார். புதுமைப் பெண்கள் நமது பரம்பரைப் பண்பாடுகளுக்குப் பொருத்தமாகவே, 'உதய கன்னி'யாக ஒளிர வேண்டும், சுதந்திர இந்தியாவிலே - என்பது பாரதியார்கனவு.

இத்தகைய பெண்கள் தேச ஒற்றுமைக்கு விசேஷமாய் வழிகாட்டக் கூடும். மகிஷாசுரனுக்குப் பயந்து மும்மூர்த்திகளும் மக்களைக் கைவிட்ட காலத்திலே அத்தெய்வங்களின் மனைவியர்களான லட்சுமியும், சரஸ்வதியும் உமாதேவியும் துர்க்கையுருவம் கொண்டு, மகிஷாசுர வதம் செய்ததாகப் புராணம் கூறுகிறது. இந்நாளில் வகுப்புவாத வியவகாரங்களுக்கு ஆண்மக்கள் அஞ்சிச் சுயநல மார்க்கத்திலே சென்றபோதிலும், தக்க பயிற்சியும் பண்பாடும்பெற்ற புதுமைப் பெண்கள் இந்தவிபரீத நிலையை முடிவான நிலையாகக் கருதிச் சும்மா இருந்துவிடமாட்டார்கள். இந்தியாவின் ஒருமைக்கும் ஒற்றுமைக்கும் எப்படியும் வழிதேடி உண்மைச் சுதந்திர இந்தியாவை உருவாக்க முயல்வார்கள். அன்புநெறியிலே—காந்தியடிகளின் அஹிம்சைநெறியிலே—தேசஒற்றுமையும் உலக ஒற்றுமையும் கைகூடுவதற்குச் சுதந்திர இந்தியப் பெண்கள் மகத்தான முயற்சி செய்யும் நிலையை அடைய வேண்டும் என்பது பாரதியார் கனவுகளில் ஒன்று.

ஞான ஜோதி

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவின் அபிவிருத்தி ஸ்தூலமான துறைகளில் மட்டும் ஏற்பட்டால்

பேர்தர்து, உண்மையான சுதந்திர இந்தியா உலகத்திற்கே ஞானகுருவாக் விளங்கவேண்டும். அன்னியர்கள் படையெடுத்து வந்து எவ்வளவோ செல்வத்தைச் சூரண்டியும் கொள்ளை கொண்டும் சென்றிருக்கிறுர்கள். சுதந்திர இந்தியாவும் படையெடுத்துச் செல்ல வேண்டும். உலகமெங்கும்—ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும்—படையெடுக்க வேண்டும். அந்தப் படையெடுப்பு ஒரு ஞானப் படையெடுப்பாக இருக்கும். இந்தியாவின் ஆத்ம ஞானம் உலகத்திற்கே தேவை. குபேர அமெரிக்காவிலும் பேய் ஞானப்பசிக்கு விருந்தளிக்க வேண்டிய பொறுப்பு, புதிய சுதந்திர இந்தியாவைச் சார்ந்தது. இப்படியெல்லாம் பாரதியார் கனவு கண்டிருக்கிறுர்.

நோக்கும் இடமெல்லாம் நாம்அன்றி வேறில்லை!
நோக்க நோக்கக் களியாட்டம்!

என்று ஆனந்த பேரிகை கொட்டி இந்திய ஞானம் இந்தியாவுக்கும் உலகத்திற்கும் ஒருங்கே நன்மை விளைத்துப் போரையும் பூசலையும் பிணக்கையும் சல்லி வேருடன் களையும் போது, சுதந்திர இந்தியா சௌந்தரிய ஜோதியாக் ஜொலிக்கும் என்பது பாரதி வேதாந்தம்—பாரதி சித்தாந்தம்.

அத்தகைய இந்தியாவைப் பாரதியார் மீண்டும் வந்து பாட வேண்டிய அவசியம் கூட இல்லை! தீர்க்க திருஷ்டியுடன் ஏற்கெனவே அந்தப் புதிய சுதந்திர யுகத்தைப் பாடித்தான் இருக்கிறுர்; இன்னும் எதிர் காலத் தமிழ்க் கவிகளின் இதயங்களில் ஆவேசித்து அந்தச் சுதந்திர ஜோதியை மேன்மேலும் பாடுவார் என்று நம்புவோம்.

# டில்லியில் சுதந்திர உதயக் காட்சி

ஏ. கே. செட்டியார்

**1947-ம்** வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ந் தேதி புது டில்லியில் எங்கு பார்த்தாலும் ஒரே பரபரப்பும் குதூகலமுமாக இருந்தது.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் அரசியல் நிர்ணய சபை அங்கத்தவர்கள் மோட்டாரிலும், ரயிலிலும், ஆகாய விமானத்திலும் வந்து இறங்கிக் கொண்டேயிருந்தனர்.

இதற்கு முந்திய இரவு தான், கவியரசி சரோஜனி தேவியை, நாட்டின் தலைவர்கள் ஒன்று கூடி லட்சுமணபுரிக்கு ரயிலில் பயணம் செய்தனர்; புது டில்லியிலிருந்து பதவி ஏற்கச் சென்ற முதலாவது இந்திய கவர்னர் சரோஜனி தேவி.

சிந்து மாகாணத்தார், பீகாருக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள ஜயராம் தாஸ் தௌலத் ராமுக்கு இம்பீரியல் ஹோட்டலில் விருந்து வைத்து உபசாரம் செய்தனர். அன்று தென்னிந்தியர் கிளப்பில் ஒரே ஜனத்திரள். ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நிமிஷமும் ராஜாஜி வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். கூட்டம் நடைபெற்ற இடம் கொடிகளாலும் தோரணங்களாலும் மிக அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. ராஜாஜி அரை மணி தாமதித்து வந்தார். அன்றுதான் 'சர்' பட்டத்தைத் துறந்த ஆர். கே. சண்முகம் செட்டியாரும், பட்டாபி சீதாராமய்யா

வும் ராஜாஜியைப் பாராட்டி, மேற்கு வங்காளக் கவர்னர் பதவி ஏற்க, வழியனுப்பினர்.

நாட்டு மக்களைத் தனது அன்பினால் கவர்ந்த பெருந் தலைவர்களில் ஒருவர் பாபு ராஜேந்திர பிரசாத். விக்டோரியா ரோட்டில் வசிக்கிறார். பெருந்தோட்டம்; ஒரு மூலையில் ராஜன் பாபு மூன்று நான்கு நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். ராஜன் பாபுவிடம் பழகிய எவரும் அவருடைய எளிமையையும், கள்ளமற்ற உள்ளத்தையும், அன்பின் பெருக்கையும் பற்றிக் கூறுமலிருக்க மாட்டார்கள்.

யார்க் ரோடு 17-ம் நம்பர் வீட்டில் வசிக்கிறார், சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமர் பண்டித ஜவஹர் லால் நேரு. எப்பொழுது பார்த்தாலும் ஒரே கூட்டம். வருகிறவர்களுக்கு மரியாதையான வரவேற்பு. வசதியான ஆசனங்கள். அடக்கம் நிறைந்த உபாத்யாயரவும், சுறுசுறுப்புள்ள மத்தாயும் பண்டித நேருவின் காரியதரிசிகள்.

பண்டித ஜவஹர்லால் நேரு நெற்றியில் திலகமிட்டு வாசலுக்கு வருகிறார். எல்லோரைப் பார்த்தும் அக மகிழ்ந்து சிரிக்கிறார். வேலைக்காரன் முதல் விருந்தினர் வரை எல்லோரும் பெருமையுடன் அவரைப் பார்த்துச் சிரிக்கின்றனர். அவரிடம்நெருங்கிப்பேச எல்லோருக்கும் பயம். ஜவஹர்லால் நேருவுக்கு எல்லாம் அவசரம். யாரையோ தேடுகிறார்; காணவில்லை; முகம் சட்டென்று மாறுகிறது. அவர் சிரிக்கும் பொழுதே அருகில் செல்ல நடுங்கியவர்கள், இப்பொழுது அதைப் பற்றி நினைக்கவே இல்லை.

பண்டித நேரு ஓர் இளைஞனைப் போல உற்சாகமாக மாடிப் படிகளைத் தாண்டிச் செல்கிறார்; நிதி மந்திரி சண்முகம் செட்டியார் பின் தொடருகிறார். நேரு

எப்பொழுது மாடியை விட்டுக் கீழே வருவாரென்று யாருக்கும் தெரியாது என்று, சிலரைச் சமர்த்தனப் படுத்துகிறார் காரியதரிசி உபாத்யாயா.

ஸ்ரீமதி இந்திரா நேரு வாசலுக்கு வருகிறார். எல்லோரிடமும் மிக அன்பாகப் பேசுகிறார். நேருவிடம் சொல்ல வேண்டியதை இவரிடம் கூறினால் சில சமயம் காரியம் முடிந்து விடும். இந்த ரகசியம் அநேகமாக அங்குள்ள அனைவருக்கும் தெரியும்.

பண்டித நேருவின் வீட்டுக்கு எதிர் வீட்டிலே வசிக்கிறார் சர்தார் வல்லபாய் படேல். அவரைப் பார்ப்பது எவ்வளவு கடினமோ அதை விடக் கஷ்டமானது அவர் வீட்டில் கார் நிறுத்துவது. வருகிறவர்களில் பலரை, கண்டிப்பான வார்த்தைகளில் திரும்பிப் போகும்படி செய்து விடுகிறார், அவருடைய புதல்வியான மணிபென் படேல்.

சர்தார் படேலுக்குத் தலைவலியைக் கொடுப்பது சமஸ்தான மன்னர்கள். சமஸ்தான மன்னர்களுக்குத் தலைவலியைக் கொடுப்பது சர்தார் படேல்.

எந்த இடத்துக்குப் போனாலும், அன்று இரவு நடக்கப் போகும் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தைப் பற்றியே பேச்சு. அன்று இரவு யாரும் தூங்கவே இல்லை. புது டில்லியில் கூடிய லட்சக்கணக்கான மக்கள் வெளியூர் வாசிகளைப் போலவேதான், அரசியல் நிர்ணய சபை நிகழ்ச்சிகளை ரேடியோவில் கேட்டோம்.

இரவு பன்னிரண்டு மணிக்குச் சுமார் 500 மாணவர்கள் டார்ச் விளக்குகளைப் பிடித்துக் கொண்டு ஊர்வலம் வந்தார்கள்.

பெருங்கூட்டம், கையில் தீப்பந்தங்களை வைத்துக் கொண்டு ஊர்வலமாக வந்தது. ஊர்வலத்துக்கு முன்னே

'ஏகர்திபத்தியம்' என்ற கொடும்பாவியை இழுத்து வந்தனர்.

ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி அதிகாலை எங்குபார்த்தாலும் ஒரே உற்சாகம், எல்லோர் முகத்திலும் ஒரே ஆனந்தம்.-காலை 7 மணிக்கு டில்லியில் 300 இடங்களில் கொடி வணக்கம்.

ஓர் இரவுக்குள் இவ்வளவு ஆயிரக் கணக்கான கொடிகள் எங்கிருந்து வந்தன. இதை எப்படித் தயாரித்தனர்? இந்த நாட்டில் காகிதக் கட்டுப்பாடும் துணிக் கட்டுப்பாடும் இல்லையா? கண் மூடிக் கண் திறப்பதற்குள் லட்சக் கணக்கான கொடிகள்.

நான் தங்கியிருந்த வீட்டிலிருந்து பார்த்தால் ரயில் வண்டி ஓடுவது நன்றாகத் தெரியும். ஒவ்வொரு வண்டியிலும், என்ஜினிலும், கார்டு வண்டியிலும் தேசியக் கொடிகள். பிரயாணிகள் கையில் கொடிகள் வைத்துக் கொண்டிருந்தார்கள். சில ரயில்களில் கார்டுகள் உற்சாகத்தினால் பச்சைக் கொடிக்குப் பதிலாகத் தேசியக் கொடியைக் காட்டினார்கள் என்றும் கேள்விப்பட்டேன். டில்லியிலிருந்து சென்னைவரை 1300 மைலும் (ஹைதராபாத் 'சுதந்திர' சமஸ்தானம் தவிர) எல்லா ஸ்டேஷன்களிலும் எண்ணற்ற தேசியக் கொடிகளைக் கண்டேன்.

ரயில்களில் மட்டுமல்ல; சைக்கிள்களில்; சட்டைகளில்; அதுமட்டுமல்ல. சில பெண்கள் தேசியக் கொடி சேலைகளையும் அணிந்திருந்தனர்.

15-ந் தேதி காலை சுதந்திர ஐக்கிய இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் மவுண்ட் பாட்டன் அரசியல் நிர்ணய சடையில் பிரசங்கம் செய்தார்.

15-ந் தேதி மாலை 4 மணிக்கெல்லாம், புதுடில்லியில் இந்தியாவின் வர்சலருகே டில்லி நகரமே திரண்டு

வந்தது. ஐந்தரை மணிக்கெல்லாம் லட்சக் கணக்கான மக்களுக்குமேல் கூடினர்.

மாலை ஆறு மணிக்கு, கவனர் ஜனரல் மவுண்ட் பாட்டன் தேசியக் கொடிவணக்கம் செய்வதற்காகவே இவ்வளவு கூட்டம்.

மாலை ஐந்தரைமணிக்கு இந்தியத் துருப்புக்கள் கொடி ஸ்தம்பத்துக்கு எதிரே அணி வகுத்தபோது மக்களின் உற்சாகம் எல்லையைக் கடந்து விட்டது.

நேதாஜியின் உயிரளவுள்ள உருவத்தை அட்டையில் கத்தரித்துக் கையில் தேசியக்கொடி பறக்க, அந்த அட்டையை ஒருவர் சுற்றி எடுத்து வந்தபோதும் மக்கள் உற்சாக மடைந்தனர்.

மணி ஐந்தே முக்காலுக்கெல்லாம் கூட்டம் கட்டுக் கடங்க வில்லை. போலீசாராலும், தேச சேவகிகளாலும் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை.

மணி ஆறடிக்க ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அழகிய வானவில் தோன்றிற்று. அதன் நிறம் தேசியக் கொடியைப் போலிருக்கிறதென்று மக்கள் ஆர்ப்பரித்தனர்.

நேரு கூட்டத்தைப் பார்த்தார். மவுண்ட் பாட்டன் நிற்பதற்குக்கூட இடமில்லாமல் கூட்டம் நின்றது. நேரு குதிரைமேல் ஏறிக் கூட்டத்தைச் சமாளிக்க முயற்சித்தும் வெற்றி யடையவில்லை. நேருவினாலும் சமாளிக்க முடியவில்லை என்றால் கூட்டம் எப்படியிருக்கவேண்டும் என்று பேசிக்கொண்டனர்.

நாட்டின் தலைவர்கள்—ராஜன்பாபு, மௌலானா அஜாத், மற்றவர்களைத் தெரியவில்லை—எல்லோரும் கொடிக் கம்பத்தின் கீழே நின்றனர்.

மவுண்ட் பாட்டன் சிரமத்துடன் தனது மனைவியைக் கூட்டிக்கொண்டு கொடிக் கம்பத்தை அடைந்தார். பெற்றோரை இழந்து தவிக்கும் ஒரு குழந்தையை, மவுண்ட் பர்ட்டன் மனைவி கையிலெடுத்துக் கர்ப்பாற்ற முயற்சித்தார்.

ஆறு மணிக்கு 'மக்ர்த்மர் கா்ந்திக்கு ஜே' என்ற கோஷத்துடன் மவுண்ட்பாட்டன் கொடியைப் பறக்க விட்டு வணங்கினர். முப்பத்தொரு வேட்டுக்கள் முழங்கின; துருப்புக்கள் அணிவகுத்து நின்றனர்; விமானங்கள் தணிந்து பறந்து வணங்கின. கூட்டத்தைவிட்டு மவுண்ட் பர்ட்டன் தம்பதிகளும் நேருவும் குதிரைகள் பூட்டிய வண்டியில் மிகச் சிரமத்துடன் வெளியேறினர்.

புது டில்லியில் நடைபெற்ற இந்த ஒப்பற்ற அரிய காட்சியைக் காணக் கொடுத்து வைத்த ஐந்து லட்சம் பேர்களில் நானும் ஒருவன்.

---

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari MalarPress, 100 Mowbrays Road, Teynampet, Madras 18



அழகிய ஆபரணங்களுக்கு.....

# P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

தந்தி: "ராஜா" ★ போன்: 268 ★ தபால் பெட்டி நெ. 139